விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 23 வெள்ளிக்கிழமை (09.09.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 264

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## விழிப்புக் குழுவுடன் பொலிஸார் நடமாடும் சேவையில் ஈடுபடுவர்

### செயலணிக் கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

கிராமங்கள் தோறும் அமைக்கப்படவுள்ள விழிப்புக் குழுவினர் இரவு முழுவதும் நடமாடும் சேவையில் ஈடுபடுவர். அவர்களுடன் பொலிஸாரும் இணைந்து கொள்வர் என நேற்று நடைபெற்ற விசேட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் அண்மைக் காலமாக நிலவிவரும் பதற்ற நிலையைக் கட்டுப்படுத்த வட மாகாண ஆளுநர் தலைமையில் நியமிக்கப்பட்ட விசேட செயற்குழுவின் ஒன்றுகூடல் நேற்று ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த ஒன்று கூடலின்போது யாழ்ப்பாண மக்களை அச்சுறுத்தி வரும் மர்ம நபர்கள் செயற்பாட்டை கட்டுப்படுத்த ஏற்கெனவே தீர்மானித்தபடி கிராமங்கள் தோறும் விழிப்புக்குழு அமைக்கப்பட வேண்டும் எனவும் அதனைக் கண்காணிப்பதற்கும் செயற்படுத்துவதற்கும் பிரதேச ரீதியாக ஒரு குழுவை அமைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிராமங்கள் தோறும் அமைக்கப்படவுள்ள குழுவினர் இரவு முழுவதும் நடமாடும் பணியில் ஈடுபடவுள்ளனர். இந்தக் குழுவில் பொலிஸாரும் உள்ளடக்கப்படவுள்ளனர்.

அதுமட்டுமன்றி இந்தக் குழுவினர் கிராமங்களில் ஏதும் அசம்பாவிதங்கள் (19 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.நிகழ்ச்சி நிரலில் இலங்கை விவகாரம் இல்லை

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைப் பேரவைக்கு பான் கீ மூனின் நிபுணர் குழு அறிக்கையை அனுப்புவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் முன்னர் வெளிவந்துள்ள நிலையில், ஏலவே தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலில் அது உள்ளடக்கப்படவில்லை எனத் தற்போது தகவல்கள் வெளிவந்துள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகமான பான் கீ மூனினால் இலங்கை அரசின் யுத்தக் குற்றங்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த நிபுணர் குழுவின் அறிக்கையை மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பிப்பதா இல்லையா என்ற நிலையிலேயே அதனை மனித உரிமைப் பேரவைக்கு அனுப்புவது எனத் தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இருப்பினும் ஐ.நா.மனித உரிமைக் குழுக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் இலங்கை தொடர்பான விடயங்கள் உள்ளடக்கப்படவில்லை. அத்துடன் ஐ.நாவின் நிபுணர் குழு அறிக்கையினை எதிர்வரும் கூட்டத்தில் சமர்ப்பிப்பது குறித்த முடிவுகள் பற்றி ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் எதனையும் குறிப்பிடவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (எ-1)

## சோனியா காந்தி நாடு திரும்பினார்



சிகிச்சைக்காக கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் அமெரிக்கா சென்றிருந்த இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி நாடு திரும்பியுள்ளார்.

தனது மகள் பிரியங்கா காந்தி வத்ராவுடன் நேற்று வியாழக்கிழமை அதிகாலை 3 மணியளவில் சோனியா காந்தி புதுடில்லியை வந்தடைந்தார்.

64 வயதான சோனியா காந்திக்கு அமெரிக் (20 ஆம் பக்கம் பார்க்க)

## கிறீஸ் மனிதர்கள் விவகாரம்

# தமிழ்க் கட்சிகளை அழைத்து ஜனாதிபதி மகிந்த பேச்சு

### உண்ணாவிரதம் ஒத்திவைப்பு; கைதானவர்களுக்கு பிணை

(கொழும்பு) வடக்கு–கிழக்கில் கிறீஸ் மனிதர்களால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் தமிழ்க் கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றது. இச்சந்திப்பினையடுத்து யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படவிருந்த உண்ணாவிரதம் கைவிடப்பட்டதுடன், கைதான தமிழ் மக்களை பிணையில் விடுதலை செய்யவும் இணக்கம் தெரிவிக்கப்பட்டது. (19ஆம் பக்கம் பார்க்க)

## ஏழாலை, மண்டானில் மர்ம மனிதர்களால் பீதி!

### மாநாடுகளால் பலனில்லை என மக்கள் விசனம்

ஏழாலை மற்றும் மண்டான் பகுதிகளில் நேற்றிரவு மர்ம மனிதர்களின் அட்டகாசம் இடம்பெற்றுள்ளது.

மாநாடுகள் கூட்டங்கள் இடம்பெற்றுவரும் நிலையிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றது என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஏழாலை மேற்கில் நேற்று இரவு 7.30 மணியளவில் மர்ம மனிதர்கள் எனச் சந்தேகிக்கப்படும் ஐவர் நடமாடியதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

மின்சாரம் தடைப்பட்ட வேளை வான் ஒன்றில் வந்திறங்கிய இவர்கள் ஐவரும் நீளமான காலணி அணிந்திருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

வீடொன்றின் பின்புறமாக சந்தேகத்திற்கிடமான (20 ஆம் பக்கம் பார்க்க)

## குற்றவியல் நடைமுறைக் கோவை சட்டமூல திருத்தம் ஒத்திவைப்பு

சாதாரண சட்டத்தின் கீழ் சந்தேக நபர் ஒருவரை 24 மணித்தியாலங்கள் தடுத்து வைத்திருப்பதற்கு பதிலாக 48 மணித்தியாலங்கள் தடுத்துவைக்க வகை செய்யும் சர்ச்சைக்குரிய குற்றவியல் நடைமுறைக் கோவை (திருத்தம்) சட்டமூலமானது சட்ட வலு அற்றதென பிரதான எதிர்க்கட்சியால் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து அந்த சட்டமூலம் நாடாளுமன்றத்தில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலம் 2007ஆம் ஆண்டு தற்காலிக ஏற்பாடாக ஒரு சட்டமாக ஏற்பட்டது.

சந்தேக நபர்களை பொலிஸ் அதிகாரிகள் கூடிய காலம் தடுத்து வைத்து விசாரிக்க வழிசெய்யவே இந்த சட்டம் கொண்டு வரப்பட்டது. இரண்டு வருடத்திற்கு ஒரு தடவை இந்தச் சட்டம் நாடாளுமன்றத்தால் புதுப்பிக்கப்பட வேண்டும் என்னும் நிபந்தனையும் இந்தச் சட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தது. இந்த சட்டமூலம் சபையில் விவாதத்திற்கு வந்தபோது எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சட்டப் பிரச்சினையொன்றைக் கிளப்பினார். (19ஆம் பக்கம் பார்க்க)

## நாடு முழுவதிலும் இராணுவ பிரசன்னம்

### மங்கள குற்றச்சாட்டு



அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டு விட்டதாக ஆட்சியாளர்கள் மக்களிடம் கூறிவருகின்றனர். ஆனால் இராணுவக் கெடுபிடிகள் தொடர்வதாக மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மாத்தறை ஐ.தே.க. அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் பேசுகையிலேயே இவ்வாறு கூறினார். தொடர்ந்து பேசிய அவர், அவசரகாலச் சட்டத்தை நீக்குமாறு எதிர்க்கட்சியினர் (20 ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சை முடிபுகள் நவம்பர் இறுதியில்

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் முடிபுகளை நவம்பர் மாத இறுதிக்குள் வெளியிட பரீட்சைகள் திணைக்களம் எதிர்பார்த்துள்ளது.

இம்முறை நடந்து முடிந்த கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் பழைய பாடத்திட்டத்தின் கீழ் ஒரு இலட்சத்து 47 ஆயிரத்து 761 பரீட்சார்த்திகளும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் ஒரு இலட்சத்து 47 ஆயிரத்து 100 பரீட்சார்த்திகளும் தோற்றியுள்ளனர். (20 ஆம் பக்கம் பார்க்க)

## மர்ம மனிதன் விவகாரம் பின்னணியில் சர்வதேசம்

### பிரதமர் தெரிவிப்பு



கிறீஸ் பூதம் விவகாரம், தரம் குறைந்த பெற்றோல், சீமெந்து விவகாரம், ஆசனிக் விவகாரம் ஆகியவற்றின் பின்னணியில் சர்வதேசத்தின் சூழ்ச்சிகள் உள்ளன என பிரதமர் டி.எம். ஜயரத்ன தெரிவித்துள்ளார். சிங்கள ஊடகமொன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அந்தச் செவ்வியில் அவர் முக்கியமாகத் தெரிவித்துள்ளவை வருமாறு; (20 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வர்த்தகப் பெருமக்களே...

**வியாபாரத்தைப் பதிவு செய்தல்**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

VTL மெனேஜ்மென்ட்
கொழும்பு-03
0729994777
0117902938


# மர்ம மனிதரை கட்டுப்படுத்த வலியுறுத்தி கூட்டம் 30 நிமிடம் ஒத்திவைக்கப்பட்டது

## மாநகரசபையில் நேற்று நடந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மக்களை தொடர்ந்து அச்சுறுத்தி வரும் மர்ம மனிதர்களை கட்டுப்படுத்த வேண்டும் என வலியுறுத்தி யாழ்.மாநகர சபையில் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு அனைத்து உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்ததோடு கூட்டமும் 30 நிமிடம் ஒத்திவைக்கப்பட்டது.

யாழ். மாநகர சபையின் இவ் வருடத்திற்கான 8ஆவது மாதாந்தப் பொதுக் கூட்டம் நேற்று முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெற்றது. இதன்போதே மேற்படி பிரேரணையை எதிர்க்கட்சி உறுப்பினரான றெமிடியஸ் முன்வைத்தார்.

கூட்டம் ஆரம்பித்து சென்ற கூட்ட அறிக்கையினை செயலாளரை வாசிக்குமாறு முதல்வர் கூறியதும் இடையில் குறுக்கிட்ட உறுப்பினர் றெமிடியஸ் மேற்படி வாய்மொழி மூல பிரேரணையை சபையில் வைத்தார்.

இதனைத்தொடர்ந்து பேசிய ஆளும் கட்சி உறுப்பினர் மங்களநேசன் கூறுகையில், இந்த மர்ம மனிதன் விவகாரம் தொடர்பாக ஏற்கெனவே கடந்த கூட்டத்தில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது தொடர்ச்சியாக இடம் பெற்றுக் கொ[illegible] இருப்பதனால் மாதாந்தக் கூட்டத்தை ஒத்திவைப் பதில் பயனில்லை.

அத்தோடு இந்தப் பிரேரணைக்கு அனைத்து உறுப்பினர்களும் ஆதரவு வழங்குகின்றோம் என்றார்.

இந்த சம்பவங்களுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் வேண்டுமானால் 30 நிமிடம் கூட்டத்தை ஒத்திவைக்கலாம் என்றார் அவர்.

இதனைத் தொடர்ந்து பேசிய பிரதிமுதல்வர் இளங்கோ தெரிவிக்கையில் எதிர்க்கட்சி சார்பாக கொண்டுவரப்பட்ட இந்தப் பிரேரணையை நாம் முற்றுமுழுதாக ஆதரிக்கின்றோம் என்றார்.

இருப்பினும் உறுப்பினர் றெமிடியஸ் தான் கொண்டு வந்த பிரேரணையை வாக்கெடுப்பு நடத்துமாறும் அதில் தோல்வியடைந்தால் தான் மட்டுமென்றாலும் வெளிநடப்பு செய்வேன் என தெரிவித்தார்.

இருந்த போதிலும் பிரேரணையை வாக்கெடுப்பிற்கு விடுவதற்கு முதல்வர் அனுமதிக்கவில்லை.

இந்த நிலையில் எதிர்க்கட்சி உறுப்பினர் விந்தன் தனது கருத்தை முன்வைத்தார்.

இதனைத் தொடர்ந்து உறுப்பினர்களின்வேண்டுகோளுக்குஇணங்க முதல்வர் கூட்டத்தை 30 நிமிடம் ஒத்திவைத்தார்.

30 நிமிடம் கழித்து மீண்டும் கூட்டம் ஆரம்பித்தபோது உறுப்பினர் விந்தன் தனது கருத்தைக் கூறும்போது இந்த மர்ம மனிதன் விவகாரம் குறித்து ஜனாதிபதிக்கும், பாதுகாப்புச் செயலருக்கும், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதிக்கும், பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கும் கடிதம் ஒன்றை அனுப்புவோம் என தெரிவித்தார். இதற்கு அனைவரும் ஆதரவு தெரிவித்தனர். (எ-6)

## இலங்கை வங்கி கிளை திறப்பு

(நல்லூர்)

கோப்பாய் இலங்கை வங்கியின் கோப்பாய்க்கிளை இன்று காலை 9.00 மணிக்கு கோப்பாய் இலங்கை வங்கி முகாமையாளர் மு.தவபாலன் தலைமையில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் கே.ஈ.டி.சுமணசிறி, சிறப்பு விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் எம்.பிரதீபன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (எ-12,134)

## மயங்கிய நிலையில் மீட்கப்பட்ட சிறுவன்

அநாதரவாக நின்ற சிறுவன் ஒருவன் யாழ்.போதனா வைத்தியசாலையில் மயங்கிய நிலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளான்.

மேற்படிசிறுவன் குறித்து மேலும் தெரியவருவதாவது, கடந்த 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு மயங்கிய நிலையிலிருந்த இச்சிறுவனை யாழ்.நகரப் பொலிஸார் சிகிச்சைக்காக அனுமதித்திருந்தனர்.

இச்சிறுவன் யாழ்.நகரில் மயங்கியநிலையில் அநாதரவாக கண்டுபிடிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளான். வேலணை சின்ன மடுவைச் சேர்ந்த ஈஸ்வரநாதன் சுவேதலிங்கம் (வயது 12) என்ற சிறுவனே இவ்வாறு அனுமதிக்கப்பட்டுசிகிச்சை நிறைவுற்ற நிலையில் உள்ளார்.

எனவே இச் சிறுவன் தொடர்பாகதகவல் ஏதாவது தெரிந்தவர்கள், பெற்றோர் அல்லது உறவினர்களோ யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (எ-4)

# அபிவிருத்திக் கூட்டங்களுக்கு அழைப்பில்லை

## போராட்டம் நடத்த வேண்டி ஏற்படும்

### விஜயகலா எம்.பி. எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இடம்பெறும் மாவட்ட ஒருக்கிணைப்புக் குழுக் கூட்டம் மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டங்களுக்கு எதிர்க்கட்சி எம்.பிக்கள் மற்றும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுவதில்லை.

இத்தகைய நிலைமை தொடருமானால் அகிம்சை வழியில் போராட்டங்களை நடத்தவேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்படுவோம் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் நேற்றுக் கடிதமொன்றினை அனுப்பி வைத்துள்ளார். அந்தக் கடிதத்திலேயே இவ்வாறு இவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்கள் பல தடவை நடைபெற்றுள்ளபோதிலும் எதிர்க்கட்சியினரான எமக்கு அழைப்பு விடுக்கப்படுவதில்லை இதேபோல் பிரதேச அபிவிருத்தி குழுக் கூட்டங்களுக்கும் எம்.பி.என்றவகையில் எனக்கோ அல்லது எதிர்தரப்பைச் சேர்ந்த ஏனைய உறுப்பினருக்கோ அழைப்பு விடுக்கப்படுவதில்லை.

காரைநகர் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று காரைநகர் தியாகராஜா மகாவித்தியாலயத்தில் நடைபெற்றுள்ளது.

இதில் ஆளுநர் சந்திரசிறி உட்பட அரசாங்க எம்.பிக்கள் கலந்து கொண்டுள்ளனர். இந்தக் கூட்டத்திற்கு எதிர்க்கட்சி எம்பிக்களோ அல்லது உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கோ அழைப்பு விடுக்கப்படவில்லை.

யாழ்.மாவட்ட எம்.பி.என்ற அடிப்படையில் எனக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை.

தொடர்ந்தும் இத்தகைய புறக்கணிப்புகள் மேற்கொள்ளப்படுமானால் மக்களை ஒன்றிணைத்து போராட்டங்களை நடத்த வேண்டிய நிலை ஏற்படும். எனவே இவ்விடயம் குறித்து கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன் என்றுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, வடமாகாண ஆளுநர் சந்திரசிறி ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (எ)

# முன்னாள் போராளிகள் 500 பேர் கொழும்புக்கு

வவுனியா புனர்வாழ்வு முகாமில் புனர்வாழ்வளிக்கப்பட்ட சுமார் 500 முன்னாள் போராளிகள் அவர்களுடைய புனர்வாழ்வு நடவடிக்கையின் இறுதிப்படியாக தென்பகுதிக்கான சுற்றுலாவினை மேற்கொண்டு நேற்று கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தை வந்தடைந்தனர்.

நேற்றுகாலை ஓமந்தைபுகையிரத நிலையத்திலிருந்து ஆ[illegible]பித்த இவர்களின் சுற்றுலா, ஐந்து நாட்களுக்கு நடைபெறவுள்ளது. இவர்கள் காலி, மாத்தறை, கதிர்காமம் ஆகிய இடங்களுக்குச் செல்லவுள்ளனர்.

நாட்டின் தென்பகுதிக்கு விஜயம் செய்ய வாய்ப்புக் கிடைத்ததையிட்டு தாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைவதாக விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சுமார் 10 வருடங்களுக்கும்மேல் இருந்து போராட்டங்களில் ஈடுபட்ட முன்னாள்போராளி ஒருவர் தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு முகாமில் உள்ளவர்கள்பெரும்பான்மையானோர்வடக்குக்கு வெளியே சென்றதில்லை, அவர்கள் ரயிலில் ஏறியது கூட இல்லை, சிங்கள மக்களோடு பேசியதில்லையென்றுமுன்னாள் போராளிகளின் ஒருவரான நியூட்டன் தெரிவித்தார்தான்ஒருவழிகாட்டல்ஆலோசகராகவர விரும்புவதாகஅவர்கூறினார்.

இந்தசுற்றுலா, முன்னாள்போராளிகளுக்கான புனர்வாழ்வு நடவடிக்கையின் இறுதிச் செயற்பாடாகும் இதற்காக நாம் பல காலமாக திட்டமிட்டோம். இதற்காகவே நாம் உழைத்தோம். இப்போது மகிழ்ச்சியாக உள்ளது என இராணுவ அதிகாரிகளின் பிரதானியான மேஜர் ஜெனரல் தயா ரத்நாயக்க தெரிவித்தார்.

தொடக்கத்தில்புலிகள் இயக்கத்தின் முன்னாள்போராளிகள் 11 ஆயிரம்பேர் புனர்வாழ்வுமுகாம்களில் இருந்தனர்.

இவர்களை சமூகத்தில் இணைப்பதற்கான தொடர் செயற்பாடுகள் நடைபெறுகின்றன என சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர கூறினார். (ச-5)


## கணக்காளர் தேவை

188B, ஆஸ்பத்திரி வீதியில் இயங்கி வரும் நியூ ஸ்ரீதிருப்பதி றேடர்ஸ் நிறுவனத்திற்கு கணக்காளர் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
077 3024195
077 3366482
(C-4362)





## சிவபார்வதி ஜோதிட நிலையம்

Shivaparvathi Jhothidam

பண்டித்-மஞ்சுநாத சுவாமி

தொ.பே. இல: 077 8949044

அன்பானவர்களே!

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள சுவாமி அவர்கள் வம்சாவளியாக காளி அம்மன் அருள் கொண்டு கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, தொழில், வியாபாரம், லட்சுமிகர விடயமான பொருத்தம் போன்ற விடயங்களை யும், கணவன்-மனைவி ஒற்றுமையின்மை, கோர்ட் வழக்கு, உடல் நலமின்மை போன்றவற்றிற்கு பரிகாரம், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல், வெளியூர் பயணங்கள், கல்வி உத்தியோகம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், வாஸ்து சாஸ்திரம், எதிரிகள் கண்திருஷ்டி போன்ற எல்லாவித பிரச்சினைகளையும் எதிர்கால பலாபலன்களையும் தெரிவிப்பார். என்ன பிரச்சினையாக இருந்தாலும் 21 நாட்களில் சாஸ்வத பரிகாரம் செய்து கொடுப்பார்.

Video Call Skype Contect:- PARAMASHIVAN1

SANJAYA HOTEL

414, Hospital Road, Jaffna.

(HNB வங்கி அருகில், யாழ். பஸ் நிலையம் முன்பாக)

நேரம்:- காலை 7.00 மணி முதல் மாலை 7.30 மணி வரை
கட்டணம் ரூபா 101/-
(6095)



## விற்பனைக்கு

- தனிப்பாவனையிலுள்ள HOME GIM விற்பனைக்குண்டு
- விடுவிக்கப்பட்ட பகுதிகளில் காணிகள் துப்புரவு செய்ய எம்மிடம் தொழிலாளர்கள் உண்டு.

தொடர்பு:-
077 9012477
(6091)



## வீடு விற்பனைக்கு

சுழிபுரம் மத்தியில் 5 பரப்பு காணியில் அமைந்த வீடு, எல்லை வசதிகளுடன் 1/2 வாசி பங்கு கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு:-
077 3301041
(6087)



## STUDY IN UK / POLAND

OCT / NOV INTAKE

- SPOT ADMISSION
- 13ம், 14ம், 15ம் திகதிகளில் வெளிநாட்டு ஆலோசகர்களால் நேரடியாக கொடுக்கப்பட இருக்கிறது
- முன் கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்
- யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக Visa பெற்றுக்கொண்டபின் College cash செலுத்தும் வசதி
- 100% Visa உத்தரவாதம்
- IELTS தேவையில்லை
- அனுமதிகளுக்கு விரையுங்கள்

மேலதிக தகவல்களுக்கு

ISC LANKA (PVT) LTD
NO. 533, RASAVINTHODDAM JUNCTION,
JAFFNA.

தொடர்புகளுக்கு
K. RAJITHA
077 3745447

HEAD OFFICE
109 - CRISTIN ROAD
BRAVILLE
MIKT 137 BP
MILTON KEYMS
UK
(C-4363)

## இன்று ஒரு தகவல்

# வாழ்க்கையின் வெற்றி!

ஓர் ஊரில் பாட்டியும் தாத்தாவும் பூங்காவொன்றில் உட்கார்ந்திருந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

இருவருக்கும் கல்யாணம் முடிந்து 53 ஆண்டுகள் நிறைவு பெற்றன. பிள்ளைகள் எல்லோரும் படித்து சிறந்த வேலையில் இருக்கிறார்கள்.

இவர்கள் இருவரும் கதைத்துச் சிரித்துக்கொண்டிருந்ததை ஒரு பெரியவர் ஆச்சரியமாக பார்த்துக் கொண்டிருந்தார்.

"இந்த வயதிலேயும் இவ்வளவு அந்நியோன்யமாக பேசிக் கொண்டிருக்கிறார்களே என்று நினைத்து சந்தோஷப்பட்டார்.

அந்தப் பெரியவருக்கு நேரில் இவர்களுடன் கதைக்க வேண்டும் போல் தோன்றியது.

உடனே அவர் அருகில் சென்று "உங்கள் மண வாழ்க்கையின் வெற்றிக்கான இரகசியம் என்ன?" என்று கேட்டார்.

இதைக் கேட்டதும் அந்தத் தாத்தா சிரித்துக் கொண்டு பாட்டியைப் பார்த்தார். அதன்பின்னர் சொன்னார்;

"நான் இந்த அம்மாவை கல்யாணம் செய்ததற்கு எங்களுடைய இல்வாழ்க்கை இவ்வளவு நாளாக பலம் குறையாமல் மகிழ்ச்சியாக இருப்பதற்குக் காரணம், எங்கள் இருவருக்கிடையில் பொதுவாக நிறைய குறைகள் உண்டு" என்றார்.

அவர் சொல்வது சரிதான் என்று அந்தப் பாட்டியும் அவரை நிமிர்ந்து பார்த்தார்.

மீண்டும் இந்தப் பெரியவர் அந்தப் பாட்டியைப் பார்த்து அதே கேள்வியைக் கேட்டார்.

"உங்களுடைய நீண்ட கால மணவாழ்க்கைக்குக் கிடைத்த வெற்றி எதனால் என்பதை சொல்லமுடியுமா?" என்று கேட்டார்.

பாட்டியும் சிரித்துக் கொண்டு பதிலளித்தார். "சிலரை நாம் குறிப்பிட்ட பண்புகளுக்காக நேசிக்கிறோம். வேறு சிலரை நாம் அந்தப் பண்புகள் இல்லாத குறைகளுக்காகவே விரும்பிப் பழகுகிறோம்" என்று கேட்டுவிட்டு தலையைக் குனிந்து கெண்டார்.

அவர் அப்படி கூறியதற்கு இருவருக்கும் புதியதோர் ஞானம் பிறந்த உணர்வு ஏற்பட்டது.

இதுதான் மனம் நிறைந்த மணவாழ்க்கை என்று சுவாமி சின்மயானந்தர் கூறுகிறார்.

பண்புகளை எப்படி நேசிக்க முடியுதோ அதேமாதிரி பண்புகள் இல்லாத குறைகளையும் நேசிக்க முடியும். இதற்கு மனம் தான் காரணம்.

தாத்தா மீண்டும் தனது கதையைக் கூற ஆரம்பித்தார். "எங்களுக்கு திருமணம் நடந்த சிலநாட்களின் பின்னர் நானும் மனைவியும் ஒரு குதிரையில் ஏறி காட்டுவழியாக பயணத்தை மேற்கொண்டோம் சிறிது தூரம் சென்றதும் அந்தக் குதிரை பிரச்சினைய்ய ஏற்படுத்தியது. நான் உடனே கீழே இறங்கி குதிரையைப் பார்த்து "இது உனக்கு முதல் தடவை!" என்று மிரட்டலாகக் கூறிவிட்டு மீண்டும் குதிரையின் மீது ஏறி உட்கார்ந்தேன். சிறிது தூரம் குதிரை நல்ல படியாக நடந்து சென்றது. திரும்பவும் துன்பம் தர ஆரம்பித்தது.

நான் கீழே இறங்கினேன் கையிலே இருந்த சாட்டையாலே ஓங்கி ஒரு அடி கொடுத்தேன். "இது உனக்கு இரண் டாவது தடவை" என்று கூறிவிட்டு மறுபடியும் ஏறி உட்கார்ந்தேன். மறுபடியும் குதிரை சிறிது தூரம் நல்ல விதமாக நடந்து சென்றது. அதன் பின்னரும் தனது நடையில் துன்பத்தைக் கொடுத்தது.

அந்தச் சமயம் ஒரு ஆற்றுப் பாலத்ததைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. நானும் மனைவியும் கீழே இறங்கினோம்.

அந்தக் குதிரையை பிடித்து ஆற்றிலே தள்ளி விட்டு "இது உனக்கு கடைசி தடவை!" என்று கூறினோம்.

அதைப் பார்த்ததும் என் மனைவி பதறிப்போய்...

"ஐயோ பாவம்... என்ன இப்படிச் செய்து விட்டீர்கள் உங்களுக்கு மனதில் சிறிது கூட இரக்கமே இல்லையா?" என்றார்.

நான் மெதுவாகத் திரும்பி "இது உனக்கு முதல் தடவை!" என்றேன். அவ்வளவுதான் அன்றிலிருந்து இற்றைவரைக்கும் ஒருநாள் கூட எங்களுக்குள் சண்டை வந்ததில்லை! என்று தாத்தா கூறினார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தில் மனையியல், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பதவிக்கானவிண்ணப்பங்கள்கோரப் பட்டுள்ளன. இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு-I அல்லது 2-I இனைச் சேர்ந்த பின்வரும் தகைமைகளைக் கொண்ட யாழ்.வலயத்திற்குட்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்க முடியும்.

குறிப்பிட்ட பாடத்தினை (அல்லது அப்பாடம் சார்ந்த ஏற்புடைய பாடத்துறை) ஒரு பாடமாகக் கொண்டு பட்டம் பெற்றிருப்பதோடு விண்ணப்பிக்கும் பாடங்களில் விண்ணப்பதாரி 7 வருடங்களுக்குக் குறையாத கற்பித்தல் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் பட்டப்பின் கல்வி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருப்பவராகவும் இருத்தல் வேண்டும். கல்விமாணி பட்டதாரிகளுக்கு பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமா சான்றிதழ் தகைமையிலிருந்து விலக்களிக்கப்படும் அல்லது,

விண்ணப்பிக்கும் பாடத்துறையில் அரசினர் ஆசிரிய கலாசாலையில் அல்லது தேசிய கல்வி நிறுவகத்தில் ஆசிரியப் பயிற்சி பெற்றிருப்பதோடு விண்ணப்ப முடிவுத் திகதியன்று குறித்த பாடத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியராகவும் 10 வருடங்களுக்குக் குறையாது தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை கற்பித்தல் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

பயிற்றப்பட்ட ஆசிரியராக இருந்து பட்டம் பெற்றவர்களுக்குப் பயிற்சித்துறையும் பட்டமும் அக் குறிப்பிட்ட பாடத்தைச் சார்ந்ததாக இருக்குமிடத்து பட்டப்பின் டிப்ளோமாச் சான்றிதழ் தகைமையிலிருந்து விலக்களிக்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் மாதிரி விண்ணப்பப்படிவங்களை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று முப்பிரதிகளில் பூர்த்தி செய்து எதிர்வரும் மாதம் 22 ஆம் திகதிக்கு முன்பாக உரிய முறைப்படி வலயக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். 22.09. 2011 இற்குப் பின்னர் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. மேலதிக விபரங்களை யாழ்வலயக்கல்விஅலுவலக விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் என யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ)

# செப்கோ பெற்றோல் நிலையத் திறப்புவிழா

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட செப்கோ பெற்றோல் நிலையத்தின் திறப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 10.30 மணிக்கும் இடையில் இலக்கம் 207, கே.கே.எஸ்.வீதி சுன்னாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பெற்றோலிய கைத்தொழில் பிரதி அமைச்சர் சரண குணவர்த்தன, கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக பிரதி அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளருமான பஷீர் சேகுதாவூத் மற்றும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன தலைவரும் பணிப்பாளர் நாயகருமான டி.எச்.ஜயவர்த்தன ஆகியோரும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன பணிப்பாளர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-12)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 105 | 120 | 80 |
| பச்சைமிளகாய் | 90 | 110 | 60 |
| தக்காளி | 30 | 60 | 40 |
| மரவள்ளிக் கிழங்கு | 40 | 40 | 50 |
| கோவா | 30 | 60 | 60 |
| கரட் | 50 | 80 | 40 |
| பூசணி | 25 | 20 | 30 |
| புடோல் | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 70 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 65 | 40 | 80 |
| பாகற்காய் | 80 | 90 | 70 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | -- | 130 | 90 |
| பயற்றங்காய் | 90 | 60 | 70 |
| லீக்ஸ் | 50 | 50 | 50 |
| பீற்றூட் | 15 | 10 | 20 |
| கறிமிளகாய் | 60 | 50 | 50 |
| முருங்கைக்காய் | 90 | 180 | 100 |
| போஞ்சி | -- | 110 | 90 |
| கத்தரிதம்புள்ள | 70 | 40 | 60 |
| கீரை - 1 பிடி | 08 | 20 | 20 |
| தேசிக்காய் | 150 | 110 | 110 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 20 | 30 |

# இராசி பலன்

09.09.2011
(ஆவணி 23, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
துவாதசி பிற்பகல் 12.29 மணிவரை
திருவோணம் பின்னிரவு 2.33 மணிவரை
இராகுகாலம் 10.34-12.04 மணிவரை
சுபநேரம் 6.04-7.34 மணிவரை
பிரதோச விரதம், ஆவணி ஓணம்.

**மேடம்** யோகமான நாள், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி பெறுவீர்கள், தொழில் ரீதியாக புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரும்.

**இடபம்** நல்லவர்கள் சந்திப்பால் நலம் காணும் நாள், தடைப்பட்ட காரியங்கள் தானாகவே நடைபெறத் தொடங்கும், திடீர்ப் பயணங்களால் அனுகூலமுண்டு, சுட்டுப்பாடான நாள்.

**மிதுனம்** கவலைகள் தீர கடவுளை வழிபட வேண்டிய நாள், பிரயாணங்களில் விழிப்புணர்வு தேவை, உங்கள் செயற்பாடுகளில் உறவினர் குறைகண்டு கொள்ளலாம், செலவுகள் அதிகமாகும்.

**கடகம்** தொழிலில் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், பயணங்களால் புதியவர்களின் அறிமுகம் கிட்டும், உடல் நலம் உற்சாகமளிக்கும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**சிங்கம்** எதிரிகள் விலகுவர், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், தெய்வ சிந்தனை மேலோங்கும், மாற்று மருத்துவத்தால் உடல் நலம் சீராகும், தைரியத்தோடு பணிபுரியும் நாள்.

**கன்னி** நீண்ட நாளாக தள்ளிப்போட்ட காரியமொன்றை இன்று திடீரென செய்து முடிப்பீர்கள், உயரதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கப் பெறுவீர்கள், வியாபார நன்மையுண்டு.

**துலாம்** செல்வாக்கு அதிகரிக்கும் நாள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், தொழில் முன்னேற்றமுண்டு, வாகன யோகமுண்டு, சுப செலவுகள் செய்து மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்** வருமானம் அதிகரிக்கும், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை வைப்பீர்கள், கடிதம் கனிந்த தகவலைத் தரும், உறவினர் மூலம் உதவிகள் கிடைக்கலாம், போசன சுகமுண்டு.

**தனுசு** எதிர்பாராத தனவருவாய் ஏற்படலாம், செய்தொழிலில் உயர்வும் மேன்மையும் இடம்பெறும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறி தோன்றும்.

**மகரம்** தொட்ட காரியம் வெற்றிபெற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக இருந்த ஒரு விடயம் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கலாம், உடல் நலனில் அதிக அக்கறை தேவை.

**கும்பம்** மாற்றங்களால் ஏற்றம் பெறும் நாள், தொழில் வளர்ச்சிக்கு நண்பர்கள் உறுதுணை புரிவர், உறவினர் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம், அலைச்சல்கள் அதிகரிக்கும்.

**மீனம்** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் வந்து சேரும், ஆதரவு தருவோரின் எண்ணிக்கை கூடும், குடும்பத்தில் குதூகலமான நிகழ்வுகள் ஏற்படலாம், பயணங்கள் செல்ல போட்ட திட்டம் வெற்றி பெறும்.

வளவன்

# இந்து மயானத்திற்குள் கொட்டப்படும் கழிவுகளால் பெரும் சுகாதார சீர்கேடு

## நடவடிக்கை எடுக்குமாறு நல்லூர் பிரதேசசபையிடம் கோரிக்கை



திருநெல்வேலி பாற் பண்ணை வீதியில் உள்ள இந்து மயானத்திற்குள் கொட்டப்படும் கழிவுகளினால் துர் நாற்றம் வீசுகின்றது.

இப்பகுதியில் அமைந்துள்ள இவ்இந்து மயானம் குடியிருப்புக்களுக்கு மத்தியில் அமைந்துள்ளதோடு நல்லூர் பிரதேசசபைக்கும் சொந்தமானது.

திருநெல்வேலி சந்தைப் பகுதியிலிருந்து எடுத்து வரப்படும் வெட்டப்பட்ட கோழிகளின் கழிவுகள் இம்மயானத்தினுள் கிடங்கு வெட்டி போடப்பட்டுள்ளது. ஆயினும் கழிவு போடப்பட்ட கிடங்கு சீரான முறையில் மூடப்படவில்லை. இதனால் அக்கழிவுப் பொருட்களை நாய் மற்றும் காகம் போன்ற பிராணிகள் எடுத்துச்சென்று அருகில் உள்ள வீடுகளுக்குள் வீசிவிட்டுச் செல்வதோடு கடுமையான துர்நாற்றம் வீசுவதனாலும் இப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். இம்மயானத்திற்கு சீரான வாயில் கதவு அமைக்கப்படாமையால் இக்கதவு எந்நேரமும் திறந்த வண்ணமே உள்ளது. இதனால் அம்மயானதிற்குள் இறந்தவர்களுக்கு படைக்கப்படும் உணவுகளைக்கூட நாய்கள் இழுத்து வந்து வீட்டு முற்றத்தில் விட்டுச் செல்வதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். இவ்விடயம் தொடர்பாக நல்லூர் பிரதேச சபைக்கு தெரியப்படுத்தியும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை எனவும் இவ்விடயத்தில் மக்களின் அசௌகரியத்தை கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-4)

# உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு தலைமைத்துவம் மற்றும் ஆட்சி நிர்வாக பயிற்சி

(யாழ்ப்பாணம்)

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தல்களில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றுள்ளது.

இதில் வெற்றி பெற்றுள்ள சபைகளின் தவிசாளர், துணைத்தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுக்கு தலைமைத்துவம், ஆட்சி நிர்வாகம், முகாமைத்துவம் முதலான துறைகளில் பாடத்திட்டங்களையும் பயிற்சிகளையும் வழக்குவதற்கு நிபுணத்துவம் கொண்டவர்களைக்கொண்டு கற்பித்தல், அறிவூட்டல், பயிற்சி வழங்கல் ஆகிய நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை.சோ.சேனாதிராசா அறிவித்துள்ளார்.

இதன் முதலாவது நிகழ்ச்சி எதிர்வரும் 16,17,18 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

இந்நிகழ்ச்சித் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட தவிசாளர்,துணைத்தவிசாளர், உறுப்பினர்கள் மற்றும் வேட்பாளர்கள், சபைகளின் நிர்வாக ஊழியர்களும் பங்குபற்றலாம் என அவர் அறிவித்துள்ளார்.

நிர்வாக ஊழியர்கள் இதில் பங்கேற்பதாயின் அவர்களுடைய விபரங்களை முன் கூட்டியே அனுப்ப வேண்டும்.

யாழ். பிரதேசத்தினை மூன்று வலயங்களாகவும் கிளிநொச்சி,முல்லைத்தீவு ஒரு வலயமாகவும் வன்னிப் பிரதேசத்தினை இரண்டு வலயங்களாகவும் கிழக்கு மாநிலத்தினை இரண்டு வலயங்களாகவும் வகுக்கப்பட்டு இப்பயிற்சிகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# முன்பள்ளி கட்டடம் இன்மையால் பெரும் சிரமத்தின் மத்தியில் கற்கும் சிறார்கள்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கில் அண்மையில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட வெற்றிலைக் கேணி ஜே/432 கிராம சேவையாளர் பிரிவில் முன் பள்ளி கட்டடம் இல்லாமையினால் மாணவர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,




மீள் குடியேற்றம் செய்யப்பட்டு 2 மாத காலத்திற்குள்ளேயே முன்பள்ளி கற்கைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டது. இருப்பினும் முன் பள்ளி செயற்பாடுகள் முன்பு இருந்த இடிபாடுகள் நிறைந்த பழைய முன்பள்ளி கட்டடத்திலேயே நடைபெற்று வருகின்றது.

இதனால் மாணவர்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் கல்வியினை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனைக் கருத்திற் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தற்போது இருக்கும் உடைந்த கட்டடத்தை புனரமைத்தோ அல்லது புதிதாகவோ அமைத்துத் தருமாறு பெற்றோர்கள் கேட்டுக்கொள்கின்றனர். (ஸ்ரீ-12-64)

# ஆசான் ஆர்.எஸ்.நடராசா எழுதிய ஆய்வு நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

ஆசான் ஆர்.எஸ்.நடராசா எழுதிய சேர் பொன் இராமநாதனின் கல்விச் சிந்தனையும் கல்விப் பணியும் ஆய்வு நூல் அறிமுக விழா எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நல்லூர் கோயில் வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் இந்துமாமன்ற அரங்கில் நடைபெறவுள்ளது.

துர்க்கா துரந்தரர் ஆறுதிருமுகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதிகள் கணேசமூர்த்தி தம்பதிகளும் சிறப்பு விருந்தினராக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். காலை 9.30 மணிக்கு மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும் இவ் விழாவில் காலை 9.35 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி விரிவுரையாளர் திருமதி விக்கினேஸ்வரி நரேந்திரா இறைவணக்கத்தையும் யாழ். கல்வி வலயத்தின் ஆசிரியர் கல்வி நிலைய முகாமையாளர் ஜி.இரத்தினசிங்கம் வரவேற்புரையையும் ஓய்வுநிலை கல்வி அதிகாரி சி.இராஜநாயகம், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொன்.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் வாழ்த்துரைகளையும் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து காலை 10.40 மணிக்கு ஓய்வுநிலைஅதிபர்சிற்பிசுரவணபவன் நூல் அறிமுகவுரையினையும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முன்னாள் விரிவுரையாளர் கலாநிதி பண்டிதர் புலவர் செ.திருநாவுக்கரசு நூல் ஆய்வு ரையினையும் யாழ்.பல்கலைக்கழக பௌதீக துறைத்தலைவர் பேராசிரியர் பு.ரவிராஜன் நன்றியுரையினையும் ஆற்றவுள்ளனர் (ஸ்ரீ-4)

# நீதிமன்றத்தால் அபராதம்

(பருத்தித்துறை)

மதுபோதையிலும் சாரதி அனுமதிப் பத்திரம் இன்றியும் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் வல்வெட்டித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிவான் நீதிமற்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் குறித்த நபர் குற்றவாளியெனக் கண்டு 6 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (ச-3)

# இன்னிசை நிகழ்ச்சியின் போதான மோதல் சம்பவம் குறித்து இன்று விசாரணை

(கரவெட்டி)

வடமராட்சி மாலுசந்தை ஸ்ரீவரதராஜ ஆலய இரவு இன்னிசை நிகழ்ச்சியில் ஏற்பட்ட தகராறையடுத்து இரு கிராமங்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தின் போது நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 54 பேரும் இன்று வெள்ளிக் கிழமை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

இதில் அல்வாய் கிழக்கு அத்தாய் பகுதியைச் சேர்ந்த 37 பேரும் துன்னாலை வேம்படியைச் சேர்ந்த 17 பேரும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜராகவுள்ளனர்.

குறித்த 54 நபர்களும் கடந்த 5 ஆம் திகதி விளக்கமறியலிலிருந்து விடுவிக்கப் பட்டதென்பதும் குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-12-24)

# தேசியமட்ட ஆங்கில தினப்போட்டியில் பதக்கம்

(கரவெட்டி)

தேசிய மட்ட ஆங்கிலதின சொல்வதெழுதல் போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் இரு மாணவிகள் தரம் 6, தரம் 8 பிரிவுகளில் வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுள்ளனர். (ஸ்ரீ-4-24)







தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரமம் நடத்தி வரும் சமூகப் பணியின் தொடர் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் முதியவர் ஒருவருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்குவதையும் வறுமைகோட்டில்வாழும் பருத்தித்துறையை சேர்ந்த ஒருவருக்கு சின்மயாமிஷன் சுவாமி பிரம்மச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய சுவாமி துவிச்சக்கரவண்டி வழங்குவதையும் கொற்றாவத்தை முன்பள்ளி சிறார்களுக்கான விளையாட்டுப் போட்டிக்கான பரிசுகளை முன்பள்ளி ஆசிரியர்களிடம் கையளிப்பதை படங்களில் காணலாம். (படங்கள்:-மருதங்கேணிச் செய்தியாளர்)

## கைத்தொலைபேசியில் ஆபாசப் படங்களை பார்த்துக் கொண்டிருந்த இருவர் கைது

(கொழும்பு)

கைத்தொலைபேசியில் ஆபாசப் படங்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த இருவர் திருகோணமலையில் கைது செய்யப்பட்டுள்ளனர். திருகோணமலை பிரதான பேருந்து நிலைய மலசலகூடப் பகுதியில் கைத்தொலைபேசியில் ஆபாச வீடியோ காட்சிகளை பார்த்துக் கொண்டிருக்கையிலேயே இவர்கள் இருவரும் கைது செய்துள்ளதாக திருகோணமலை தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி சரித்த ஏ.ஜெயசுந்தர தெரிவித்தார்.

அப்பகுதியில் நடமாடும் வியாபாரி வழங்கிய தகவலையடுத்து இரு இளைஞர்களின் கைத்தொலைபேசிகளையும் பரிசீலனை செய்த போது ஒருவருடைய கைத்தொலைபேசியில் 53 ஆபாச சிறிய வீடியோ தொகுப்பும் மற்றவரின் கைத்தொலைபேசியில் 03 ஆபாச வீடியோ தொகுப்பும் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தம்பலகாமம் புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய புனிதசேகர் பிரதீபன் மற்றும் திரியாய் கட்டுக்குளத்தைச் சேர்ந்த 22 வயதுடைய சுப்பிரமணியம் மனோகரன் ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் இருவரையும் திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தவுள்ளதாகவும் பொலிஸ் பொறுப்பதிகாரி சரித்த ஏ.ஜெயசுந்தர மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

## பாதாள உலகக் கோஷ்டி தலைவர் சுட்டுக் கொலை

(கொழும்பு)

கொழும்பு ஆமர்வீதியில் நேற்றுக் காலை பொலிஸாருடன் இடம்பெற்ற மோதலின் போது நன்கறியப்பட்ட பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்த முக்கிய தலைவரான களுதுஷார சுட்டுக்கொல்லப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

குறித்த நபரிடமிருந்து ரி- 56 ரக துப்பாக்கி, 90 மில்லிமீற்றர் பிஸ்ரல் என்பன மீட்கப்பட்டன.

ஆமர்வீதி பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட முற்றுகை நடவடிக்கையின் போது பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்த இரு சந்தேக நபர்கள் தப்பிச் சென்றதாகவும் அவர்களில் ஒரு சந்தேக நபர் பின்னர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார்.

மற்றைய சந்தேக நபரை கைது செய்வதற்கான விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும் செவ்விசைமாலை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியின் பணிப்புரைக்கமைய வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படும் செவ்விசை மாலை கலை நிகழ்வு எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பார்வையாளராக கலந்து கொள்ள விரும்புவோர் தங்கள் பெயர் விபரங்களை பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வடமாகாணம், வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் மேலதிக தகவல்களுக்கு 0213202990 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் என். ஸ்ரீதேவி தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-12)

## படுகடன் தொகை அதிகரிப்பு தொடர்பில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்

### சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு அறிவுறுத்து

(கொழும்பு)

வெளிநாட்டுக் கடன்களை அடிப்படையாகக் கொண்டு இருப்புகளை பேணுகின்றமை அவதானத்திற்குரிய ஒரு நிலைமையாகும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் கடன் அல்லாத இருப்புகள் துரித வீழ்ச்சி கண்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டுகின்றது.

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்குகின்ற கடனுதவி தொகையின் ஏழாம் கட்ட தவணைக் கடன் தொடர்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்று கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன்போது நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார செயற்பாடுகளும் சிறந்த மட்டத்தில் நிலவுகின்றது என கலாநிதி பிரயன் எய்ட்கான் தெரிவிக்கிறார்.

எனினும் இலங்கையின் படுகடன் தொகையில் துரித அதிகரிப்பு தொடர்பில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

எதிர்காலத்தில் சந்தை தலையீடுகளை இலங்கை மத்திய வங்கி வரையறுக்க நேரிடும் என்பதுடன் அந்நிய செலாவணி சுயமாக தீர்மானிக்கப்படுவதற்கு இடமளிக்கப்பட வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை பின்பற்றப்படாத பட்சத்தில் ஏற்றுமதிக்கான போட்டித் தன்மையை பேணுவதில் சவாலை எதிர்நோக்க நேரிடும் என்பது சர்வதேச நாணய நிதியத்தின் நிலைப்பாடாக உள்ளதென இந்த ஊடக சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## நாய் குறுக்கே பாய்ந்ததில் இளைஞர் படுகாயம்

(கரவெட்டி)

அதிவேகமாக மோட்டார் சைக்கிள் செலுத்திய இளைஞர் ஒருவர் நாய் குறுக்காக பாய்ந்ததில் மோட்டடர் சைக்கிளிலிருந்து தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணிக்கு கொற்றாவத்தை நவிண்டில் பகுதியில் இடம்பெற்றது. இச்சம்பவத்தில் வேலணையைச் சேர்ந்த தங்கராசா கோகுலன் (வயது 21) என்ற இளைஞரே காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (ஸ்ரீ-12-24)

## தொழில் திணைக்களத்திற்கு புதிய கட்டடம்; நேற்று அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)



தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் நிதியுதவியுடன் யாழ். மாவட்ட உதவித் தொழில் திணைக்களத்தின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று நடைபெற்றது.

யாழ்ப்பாண பண்ணை வீதியில் இந்த புதிய கட்டடம் 36.9 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது. இந்த அடிக்கல் நாட்டு விழாவில் பிரதித் தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன், உதவித்தொழில் ஆணையாளர் திருமதி நீலலோஜினி ஜெகதீஸ்வரன் எனப்பலர் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-6)

## முல்லை. வலயக் கல்வி அலுவலகம் நடத்தும் முழுநிலா நிகழ்வு

(முல்லைத்தீவு)

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் முல்லை. வலயக் கல்வி அலுவலகம் நடத்தும் ஆவணித் திங்கள் முழுநிலா நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மு/ வித்தியானந்த கல்லூரி கேட்போர் கூடத்தில் வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இதில் வாத்திய இசைகள், நடன நிகழ்வுகள் மாற்று வலுவுடையோர் நிகழ்வு, கிராமிய இசை, *பண்டார வன்னியன் நாடகம்* போன்ற கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்விற்கு அனைவரையும் பண்பாட்டுக் கோலத்துடன் கலந்து சிறப்பிக்குமாறு முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகம் கேட்டுக்கொள்கின்றது. (ஸ்ரீ-12)

## அனைத்து லொறிகளிலும் பாதுகாப்பு பட்டி கட்டாயம்

ஒக்டோபர் முதலாம் திகதி முதல் விற்பனை செய்யப்படுகின்ற அனைத்து லொறிகளிலும் பாதுகாப்புப் பட்டி பொருத்தப்பட்டிருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

விபத்துக்களை தடுக்கும் பொருட்டு ஒக்டோபர் மாதம் முதல் கொள்வனவு செய்யப்படுகின்ற அனைத்து லொறிகளிலும் பாதுகாப்புப் பட்டி அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் லலித் தர்மப்பிரிய தெரிவிக்கிறார். (ஸ்ரீ-2)

வாடிக்கையாளர் வசதி கருதி...

இலங்கை வங்கி
கோப்பாய் விரிவாக்கற் காரியாலயம்
மேம்படுத்தப்பட்டு

இலங்கை வங்கி
கோப்பாய் கிளையாக

2011 செப்ரெம்பர் 09ம் திகதி
வெள்ளிக்கிழமை முதல் இயங்க
உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன்
அறிவித்துக் கொள்கிறோம்.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

# வவுனியாவில் 109 வீடுகள் பயனாளிகளிடம் கையளிப்பு

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் இடம்பெயர்ந்த மக்களுக்காக கட்டப்பட்ட 109 வீடுகளை பயனாளிகளிடம் கையளிக்கும் வைபவம் செட்டிக்குளம் பிரதேச செயலர் பிரிவில் மெனிக்பாம் கிராமத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஒவ்வொரு வீடும் மூன்றேகால் இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டதாகும். மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகளை வழங்குவது எமது மனிதாபிமான பணிகளில் ஒன்றாகும் என இந்த வைபத்தில் உரையாற்றிய ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் பேனாட் சவோஜ் குறிப்பிட்டார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ வீட்டுத்திட்டத்தை திறந்து வைத்தார். உயிரிழப்பை தவிர கடந்த யுத்த காலத்தில் நீங்கள் இழந்த அத்தனையையும் எங்களுடைய அரசு உங்களுக்கு வழங்கவுள்ளது என மக்கள் மத்தியில் பேசும் போது அமைச்சர் குறிப்பிட்டார். அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் அரசு இறங்கியுள்ளது எனவும் அவர் கூறினார்.

அமைச்சர் ரிசாட் பதியுதீன், வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, மாவட்ட அரசாங்க அதிபர் பி.எம்.எஸ். சாள்ஸ் உள்ளிட்ட பலர் இந்த வைபத்தில் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-2)

# நோர்வே தாக்குதலை நடத்திய நபருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு

## இலங்கை அரசு நம்பிக்கை

அண்மையில் நோர்வேயில் மிலேச்சத்தனமான தாக்குதலை நடத்திய நபருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு இருக்கக் கூடும் என் இலங்கை நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

32 வயதான அன்ட்ரேஸ் பிரிங் பிரிவிக்கினால் நடத்தப்பட்ட தாக்குதலில் 76 பேர் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. குண்டுத் தாக்குதல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் ஆகிய தாக்குதல்களின் மூலம் பலரின் உயிர்கள் காவுகொள்ளப்பட்டிருந்தது.

இந்தத் தாக்குதலை நடத்திய பிரிவுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் தொடர்பு இருக்கக் கூடும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

விசாரணைகளின் போது குறித்த நபருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இருக்கக் கூடிய தொடர்புகள் பற்றியும் ஆராய வேண்டுமென இலங்கை இராஜதந்திர ரீதியிலான கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல் பாணியில் பிரிவிக் தாக்குதலை நடத்தியுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அலெக்ஸென்ட்ரா பெச் என்னும் நோர்வே சட்டத்தரணியின் தலைமையிலான ஆணைக்குழுவொன்று கடந்த ஜூலை மாதம் 22 ஆம் திகதி நடைபெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னதாக விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டுமென அந்நாட்டு பிரதமர் ஸ்டொலன்பெர்க் உத்தரவிட்டுள்ளார்.

விசாரணை நடத்தும் ஆணைக்குழுவிற்கு ஜூலை 22 விசாரணை ஆணைக்குழு என பெயரிடப்பட்டுள்ளது.

நோர்வே வாழ் புலி உறுப்பினர்களுடனோ அல்லது வேறு நாடுகளில் வாழும் புலி உறுப்பினர்களுடனோ தொடர்பு காணப்படுகின்றதா என்பது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டுமென நோர்வேக்கான இலங்கைத் தூதுவர் ரொட்னி பெரேரா அந்நாட்டு அதிகாரிகளிடம் கோரியுள்ளார். (ஸ்ரீ-2)

# முல்லைத்தீவு செல்வபுரத்தில் நிர்மாணிக்கப்பட்ட 95 வீடுகள் மக்களிடம் கையளிக்கப்பட்டது

கரித்தாஸ் நிறுவனத்தால் முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த செல்வபுர கிராம மக்களுக்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 95 வீடுகள் நேற்று முன்தினம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, கைத்தொழில் வர்த்தக அமைச்சர் றிசாத் பதியுதீன், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோரால் மக்களிடம் கையளிக்கப்பட்டது.

இவ்வீடுகள் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த நிலையில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கே வழங்கப்பட்டது.

அத்தோடு மீன்பிடி உபகரணங்கள் மற்றும் வாழ்வாதார உதவிகள் என்பனவும் கரித்தாஸ் நிறுவனத்தால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ உரையாற்றுகையில், கைத்தொழில் வர்த்தக அமைச்சர் றிசாத் பதியுதீன் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கான அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார். தொடர்ந்தும் முன்னெடுக்கவுள்ளார் என கருத்துரை வழங்கினார்.

அதைத் தொடர்ந்து யாழ்.மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை உரையாற்றுகையில், முல்லைத்தீவில் சுகாதாரம், பொருளாதாரம், கல்வி என்பன மேம்படுத்தப்பட்டு வருவதாகவும் தொடர்ந்தும் வளர்ச்சியடைவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டு மென்வும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் நோர்வே நாட்டின் பிரதிநிதி, கரித்தாஸ் நிறுவன இலங்கைப் பிரதிநிதி, முல்லை. மாவட்ட அரச அதிபர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-3)

# சந்நிதியான் உற்சவ கால நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய உற்சவம் கடந்த மாதம் 29 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்து நடைபெற்று வருகின்றது.

இதில் சப்பறத் திருவிழாவான நாளை சனிக்கிழமை இரவு சங்கீத வித்துவான் சங்கீத பூஷணம் ஏ.கே.கருணாகரனின் இன்னிசைக் கச்சேரி விசேட பக்கவாத்தியங்களுடன் இடம்பெறும்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவன்று இரவு ‘‘வள்ளி தி[illegible]மணம்’’ எனும் தலைப்பில் விசேட வாத்தியங்களுடன் வில்லிசைப் புகழ் தம்பிநாத னின் வில்லிசைக் கச்சேரி இடம்பெறும்.

அத்தோடு கொடியேற்ற நாள் முதல் 13 ஆம் உற்சவம் வ்ரை தினமும் மாலை 3 மணிதொடக்கம் 4.30 மணிவரை ஜெயபாலின் கதாப்பிரசங்கமும் நடைபெற்று வருகின்றது. (ஸ்ரீ-12)


# திறப்புவிழா அழைப்பிதழ்

# இலங்கை வங்கி கோப்பாய்

**தலைமை**
திரு.மு.தவபாலன்
(முகாமையாளர் இலங்கை வங்கி-கோப்பாய்)

**பிரதம விருந்தினர்**
திரு.K.E/D.சுமணசிறி
(உதவிப் பொதுமுகாமையாளர்
இலங்கை வங்கி-வடபிராந்தியம்)

**சிறப்பு விருந்தினர்**
திரு.ம.பிரதீபன்
(பிரதேச செயலாளர் -கோப்பாய்)




**இடம்**
இலங்கை வங்கி, கோப்பாய்.

**காலம்**
09.09.2011

**நேரம்**
மு.ப 9.00 மணி

எமது இலங்கை வங்கி கோப்பாய் கிளையானது இலங்கை வங்கியின் வட பிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் திரு. K.E.D.சுமணசிறி அவர்களால் திறந்து வைக்கப்படும். இந் நிகழ்வில் வங்கியின் வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| A.M.T ரான்ஸ்போட் | பாலதர்சி ஸ்ரோஸ் | கஜமுகன் தொலைத் தொடர்பகம் | நிமலன் ரேடஸ் | ஸ்ரீ வெங்கடேஸ்வரா ரேடஸ் | அருள் ஸ்ரோர்ஸ் | மினால்டோ போட்டோ |
| P.M. கடை | மித்திரன் பான்சி கவுஸ் | ஐங்கரன் உணவகம் | பாமதேவன் ஸ்ரோஸ் | நடராசா ஸ்ரோர்ஸ் | கஜமுகன் ஸ்ரோர்ஸ் | ஐங்கரன் ஸ்ரோர்ஸ் |
| தணிகை ரேடஸ் | சுரேஸ் கடை | செல்வன்ஸ் டீசல் எஞ்சினியர்ஸ் | அக்ஷி மல்ரி மார்க் | சிவா ஸ்ரோர்ஸ் | சிவா ஸ்ரோர்ஸ் நீர்வேலி வடக்கு | இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் |
| குமார் பல்பொருள் விற்பனை நிலையம் | சிவநாதன் கடை | மூர்த்தி வேக்ஸ் சொப் | திருமகள் பாமசி அன் குறோசறி | அபிராமி மருந்தகம் | ஜீவராஜன் தேநீர் கடை | திருமுருகன் பல்பொருள் அங்காடி |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஐங்கரன் ரான்ஸ்போட் (பாடசாலைசேவை) | ஹர்சி பான்சி ஹவுஸ் | பவளம் ஸ்ரோர்ஸ் | சிவா வார்ப்பு தொழிலகம் | எஸ்.என்.வி காட்வெயார் அன் எலக்ரிக்கல் | சேகர் ஸ்ரோர்ஸ் | சுகந்தன் கடை | மயூரி இரும்பகம் | லருஜன் கடை |

# வருகிறது அல்ட்ராபுக் கணனி



எடை மற்றும் அளவு குறைவாக வடிவமைக்கப்பட்டு, பேர்சனல் கணனியின் இடத்தை லப்டொப், நோட்புக் கணனிகள் பிடித்தன. லப்டொப் கணனிகள் தயாரித்த நிறுவனங்கள், அவற்றின் தடிமனை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு குறைத்து, இந்தப் போட்டியில் ஈடுபட்டு வருகின்றன.


சென்ற மேமாதம் நடைபெற்ற கணனி தொழில்நுட்பக் கண்காட்சியில் இன்டெல் நிறுவனம் மிகமிக எடை குறைந்த ஒரு அங்குலத்திற்கும் குறைவான தடிமனில் இனி கணனிகள் வடிவமைக்கப்படும் என்று அறிவித்தது. இது அதிக நேரத்திற்கு மின்சக்தி வழங்கும் பற்றரியைக் கொண்டு உடனடியாக புரோகிராம்களைச் செயற்பாட்டிற்குக் கொண்டு வரும் திறனைக் கொண்டிருக்கும் என்றும் அறிவித்தது. இதனை அல்ட்ராபுக் கணனிகள் என்றும் பெயரிட்டது.

இப்போது மிகமிக குறைந்த தடிமனில் அல்ட்ராபுக் கணனிகள் என்ற பெயரில் புதியதாக கணனிகளை வடிவமைப்பதில் நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன. இதனை அல்ட்ரா போர்ட்டபிள் லப்டொப் (Ultra Portable Laptop) எனவும் அழைக்கின்றனர். இவை தற்போது வேகமாக வளர்ந்து வரும் நோட்பேட் கணனிகளுக்குப் போட்டியாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முதன்முதலில் அப்பிள் நிறுவனம் சென்ற ஏப்ரல் மாதத்தில் தன் ஐபோட் கணனியை வெளியிட்ட போது, அதன் மெல்லிய வடிவமைப்பிலும் குறையாத பயன்பாட்டிலும் மயங்கிய மக்கள் பெரும் அளவில் அவற்றை வாங்கிப் பயன்படுத்தினர்.

இதனால் கணனி தயாரிப்பில் ஈடுபட்டுள்ள அனைத்து நிறுவணங்களும் நோட்பேட் கணனியைத் தயாரித்து விற்பனைக்குக் கொண்டு வந்தன.

இப்போது டேப்ளட் கணனிகளைக் காட்டிலும் அதிகதிறன் கொண்டதாகவும் அழகாகவும் இந்த அல்ட்ராபுக் கணனிகள் வடிவமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தாய்வான் நாட்டில் தலைமையிடத்தைக் கொண்டு இயங்கும் அசூஸ் (Azus) நிறுவனம் இந்த அல்ட்ராபுக் கணனியை முதன்முதலில் இந்தியாவில் விற்பனைக்குக் கொண்டு வரும் என்று தெரிகிறது. ASUS UX 21 என்ற பெயருடன் வரும் 2012 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் இது கிடைக்கலாம். அநேகமாக இது ரூ 100.000 முதல் ரூ 120.000 வரையில் விலையிடப்படும்.



இதனைத் தொடர்ந்து ஏசர் (Acer) நிறுவனமும் இந்த முயற்சியில் இறங்கியுள்ளது. அடுத்ததாக ஏசர் (Acer) நிறுவனம் Acer Aspire 3951 என்ற பெயரில் அல்ட்ராபுக் கணனி ஒன்றை விரைவில் கொண்டு வரும் எனவும் உறுதியாகத் தெரிகிறது.

அல்ட்ராபுக் கணனி வடிவமைப்பின் பின்னணியில் இன்டெல் நிறுவனத்தின் முயற்சி அதிகமாக இருக்கிறது. இதற்கான தொழில்நுட்ப வளர்ச்சிக்கென 30 கோடி டொலர் நிதியகம் ஒன்றை இன்டெல் ஏற்படுத்தி ஆய்வினை மேற்கொள்ள அனைவரையும் உற்சாகப்படுத்தி வருகிறது.

2012 இறுதிக்குள் தற்போது லப்டொப் பயபடுத்தி வருபவர்களில் 40% பேரை அல்ட்ராபுக் கணனிக்கு மாற்ற இன்டெல் இலக்கு நிர்ணயித்துள்ளது.

ஒரு அல்ட்ராபுக் கணனியின் தடிமன் ஒரு அங்குலத்திற்கும் குறைவாக இருக்கும். உலோகக் கலப்பிலான வெளிப்பக்கங்கள் கொண்ட இதன் எடை ஒரு கிலோ அளவில் இருக்கலாம். 11 முதல் 13 அங்குல டிஸ்பிளே திரை கிடைக்கும். பின்புற ஒளியுடன் கூடிய கீபோர்ட், யு.எஸ்.பி. 2அல்லது 3 வசதி கொடுக்கப்படும். இதில் டிவிடி ட்ரைவ் இருக்காது. (இனிமேல் எந்த கணனியில் டிவிடி ட்ரைவ் இருக்குமா என்பது சந்தோகமே!)

இந்த அல்ட்ராபுக் கணனிகளுக்குப் போட்டியாக இப்போதே ஒன்று போர்ட்டபிள் கணனி சந்தையில் இருப்பதாக வல்லுநர்கள் கூறுகின்றனர். அதன் பெயர் அல்ட்ராபுக் கணனி. இல்லை என்றாலும் அதன் அனைத்து அம்சங்களும் இதில் இருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

இது அப்பிள் நிறுவனத்தின் மேக்புக் ஏர் என்னும் கணனியாகும். நெடுநேரம் மின்சக்திதக்க வைத்து தரும். பற்றரி, குறைவானதடிமன் என இந்த கணனியிலும் உள்ளது. சாம்சங் நிறுவனத்தின் சாம்சங் 9 என்ற வகைக்கணனிக்கும் இதேபோன்றதே என்று எண்ணப்படுகிறது.

அல்ட்ராபுக் கணனியின் அம்சங்கள் என்னவாகவும்இருக்கும் என்று தேடிய போது கீழ்க்கண்ட தகவல்கள் கிடைத்தன. இன்டெல் நிறுவனத்தின் Core i3/i5/i7 ப்ராசசர்களில் ஒன்று 160 ஜிபி சாலிட் ஸ்டேட் ஹார்ட் டிஸ்க், புளுடூத் 4.0 குறைந்தது 6 மணிநேரம் தொடந்து இயங்கும் பற்றரி 13.3 அங்குல திரை 13 மி.மீ தடிமன் மற்றும் எடை 1.4 கிலோவிற்கும் குறைவாக இது அமையும். திரையின் ரெசல்யூசன் 1366X768 பிக்ஸல்களாக இருக்கலாம். எடை குறைந்த தடிமன் அதிகம் இல்லாத கணனி என்றால் யார் தான் வேண்டாம் என்று சொல்வார்கள்!




# முடங்கிப் போகும் இணையத்தளம்

இணையத்தில் உலா வருகையில் பல வேளைகளில் பார்க்கின்ற தளம் அப்படியே உறைந்து போகலாம். சில வேளைகளில் அதற்கான எர்ரர் செய்தி கிடைக்கும் . பல வேளைகளில் எதுவும் காட்டப்படாமலேயே தளம் தொடர்ந்து இயங்காது. இது போன்ற நிலைகளுக்குப் பல காரணங்கள் உள்ளன. இங்கு அடிக்கடி ஏற்படும் *Session Expire* என்ற பிரச்சினை குறித்துப் பார்க்கலாம். இந்தச் செய்தி கிடைப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றை இங்கு பார்க்கலாம்.

● **செயலற்ற தன்மை:** நீங்கள் அடிக் கடி பிரவுஸ் செய்திடும் தளத்தைத் திறந்து உங்களுக்கு வேண்டிய தகவல்களைப் பெற்றுக் கொண்டிருக்கையில், வேறு ஒரு வேலைக்காக கணனி மற்றும் பிரவு சிங்கை விட்டு விட்டு நீங்கள் செல்லலாம். மீண்டும் வந்து பார்க்கிற போது Session Expire என்ற செய்தி திரையில் காட்டப்பட்டுக் கொண்டிருக்கும். எந்த விதமான செயற்பாடும் இன்றி இணையத்தளத்தைத் திறந்து வைத்திருந்தால் தானாகவே மூடும்படி அந்த தளத்தைத் தயாரித்தவர்கள் வடிவமைத்திருக்கலாம். அதன் எதிரொலியே இது. எத்தனை நொடிகள் இவ்வாறு செயலற்று இருந்தால் அந்த தளம் இந்த செய்தியைக் கொடுக்கும் என்பதனைப் பொதுவாக வரையறுக்க முடியாது. இது அந்தத் தளத்தை வடிவமைத்தவர்கள் செய்த வரைமுறையாக இருக்கலாம்.

● **குக்கீஸ்:** சில தளங்கள் தங்களிடம்



முறையாகப் பதிவு செய்யாதவர்கள் தளத்தைப் பார்க்க சில நிமிடங்களே அனுமதி தரும். அந்த நேரம் முடிந்து விட்டால் தானாகத் தளம் மூடப்பட்டு Session Expire செய்தி கிடைக்கும். மேலும் சில தளங்கள் குக்கீஸ் எனப்படும். குறுந்தகவல் தொகுப்புகளை அனுமதிக்க வேண்டும் என எதிர்பார்க்கும். அப்போதுதான் அடுத்த முறை நீங்கள் அந்த தளத்தை அணுகுகையில் உங்களைப் பற்றிய தகவலை அந்த தளம் அறிந்து கொண்டு உங்களுடன் தகவல் பரிமாறிக் கொள்ள முடியும். எனவே குக்கீஸ் பெறுவதனை நீங்கள் தடுக்கும் படி செட் செய்திருந்தால் மாற்றிவிடவும். இதற்கு இன்டர்நெட் எக்ஸ்புளோரரில் Tools> Internet Options சென்று அதில் Privacy டேப் கிளிக் செய்திடவும். பின் கிடைக்கும் திரையில் Default என்னும் பட்டனைக் கிளிக்செய்தால் குக்கிஸ் பெறுவது அனுமதிக்கப்படும்.

● **பயரவோல்:** கணனியில் பயர்வோல் செட்டிங்ஸ் அமைத்திருந்தால் நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும் இணைய தளம் தானாகவே மூடும் வாய்ப்பு உண்டு. ஏனென்றால் பயர்வோல் செட்டிங்ஸ் சில தளங்களை இறக்கம் செய்து பார்க்க விடாது. இதனால் பிழைச் செய்தி கிடைக்கலாம். இதற்கு உடனே பயர்வோல் செட்டிங்ஸ் பார்த்து திருத்தவும். நீங்கள் விரும்பிப் பார்க்கின்ற தளங்களை பயரவோல் அனுமதிக்கும்படி பயர்வோல் செட்டிங்ஸை மாற்றவும்.

● **தவறான நாளும் நேரமும்:** சில வேளைகளில் தவறான நாள், திகதி மற்றும் நேரத்தை உங்கள் கணனி காட்டிக் கொண்டிருந்தால் அதனாலும் Session Expire செய்தி வரலாம். ஏனென்றால் சில தளங்கள் பின்புலத்தில் உங்கள் கணனி நேரத்தோடு இணைந்து சில புரோகிராம்களை இயக்கிக் கொண்டிருக்கலாம். இதனால் தவறான நடவடிக்கைகளுக்குள்ளாகி செஷன் எக்ஸ்பயர் ஆக வாய்ப்புண்டு.

● **தளத்தில் வேறு பிரச்சினைகள்:** மேலே குறிப்பிட்ட எதுவுமின்றி இணைய தளத்தில் எக்ஸ்பயர் செய்தி வருகிறதென்றால் அதுவும் குறிப்பாக ஒரு தளத்திற்காக வருகிறது என்றால் அந்த தளத்தில் பிரச்சினை உள்ளது என்று பொருள். அந்த தளத்தை புதுப்பிப்பதற்காக இயக்கத்தை நிறுத்தி வைத்திருக்கலாம். அல்லது அந்த தளத்தைக் கொண்டிருக்கும் சேர்வர் இணைய வலையிலிருந்து விடுபட்டிருக்கலாம். அல்லது அந்த சேர்வரில் பிரச்சினை ஏற்பட்டு பராமரிப்புக்காக சேர்வரின் இயக்கம் நிறுத்தப்பட்டிருக்கலாம். Session Expire என்ற பிரச்சினை முற்றிலும் இணைய தளம் மற்றும் அந்த தளத்தைத் தாங்கிக் கொண்டு வழங்கும். சேர்வர் சார்ந்த பிரச்சினை ஆகும். எனவே உங்கள் கணனி செட்டிங்ஸ் சரி செய்வதனால் இது நிவர்த்தி அடையாது எனவே இந்தச் செய்தி வரும் பட்சத்தில் பொறுமையாக உடனே அல்லது சில நிமிடங்கள் கழித்து மீண்டும் அதனைப்பெற முயற்சிப்பதுதான் சிறந்த வழியாகும்.

# பயர்பொக்ஸ் பதிப்பு

தன் பயபொக்ஸ் பிரவுசரில் பெரிய அளவில் மாற்றங்களுடன் பதிப்பு 6இனை மொஸில்லா நிறுவனம் அண்மையில் அறிமுகப்படுத்தியுள்ளது. பயர்பொக்ஸ் பதிப்பு 5 சென்ற ஜூன் 21 இல் வெளியானது. பின்னர் இரண்டு மாதங்களுக்குள்ளாக இந்தி புதிய பதிப்பு வெளியாகியுள்ளது.

ஒவ்வொரு 16 வாரங்களுக்கு ஒருமுறை புதிய பயர்பொக்ஸ் பிரவுசர் பதிப்பு வெளியிடப்ப டும் என்ற தன் வாக்குறுதியினை மொஸில்லா நிறுவனம் செயல்படுத்தியுள்ளது பயர்பொக்ஸ் 4 மார்ச் 22 இல் வெளி யானது 12 வாரங்கள் கழித்து பயபொக்ஸ் 5 ஜூன் 21 இல் வெளியானது ஓகஸ்ட் 16 இல் எட்டு வாரங்கள் கழித்து பயபொ க்ஸ் 6 வெளியாகியுள்ளது.

இந்த பதிப்பில் மிக முக்கியமான மாற்றம் அட்ரஸ்பாரில் நாம் பார்க்கும் இணையத்தளம் ஹைலைட் செய்யப்பட்டு காட் டப்படுவதுதான் அதாவது இணையத் தளத்தின் முதன்மைப் பெயர் ஹைலைட் செய்யப்பட்டுக்காட்டப்படுகிறது. எடுத்துக்காட்டாக.

http://www.mozilla.com/enUS/firefox/6.0 /releasenotes/ என்ற முகவரியில் உள்ள இணையத்தளம் காட்டப்படுகையில் www.mozilla.comஎன்ற பெயர் ஹைலைட் செய்யப்படும் இதனால் சில பிரபலமான தளங்களைப் போல அவற்றின் இணையத்தள முகவரியில் ஒன்று அல்லது இரண்டு எழுத்துக்களைச் சேர்த்து போலியாக காட்டப்படும் தளங்களைச் சற்று எளிதாக அடையாளம் காண முடியும். நம்மைச் சிக்க வைத்திடும் தளங்களிலிருந்து தப்பிக்க முடியும். இந்த ஹைலைட்டிங் வசதி இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பதிப்பு 8இல் 2009 ஆம் ஆண்டிலேயே அறிமுகப்படுத்தப்பட்டது. உங்களுக்கு நினைவிருக்கலாம்.

இந்த பதிப்பில் பிரவுசர் கிராட் ஆவது அறவே தவிர்க்கும் வகையில் அனைத்து மேம்பாட்டு வழிகளும் அமைக்கப்பட்டுள்ளன. அதே போல பாதுகாப்பு குறியீடுகளும் பலப்படுத்தப்பட்டுள்ளன.

முந்தைய பிரவுசர்களின் வேகத்தைக் காட்டிலும் இதன் வேகம் அதிகப்படுத்தப் பட்டுள்ளது. ஆனால் இன்டர்நெட் பிரவுசர் குறித்து ஆய்வு செய்திடும் அமைப்புகள் குரோம் மற்றும் இன்டர்நெட் எக்புளோரர் 9 இதனைக்காட்டிலும் வேகமாக இயங்குவதாக அறிவித்துள்ளன.

ஒரு சிலர் இது புதிய பதிப்பே அல்ல பழைய பதிப்பில் உள்ள குறைகளைக்களையும் சில நடவடிக்கைகளை எடுத்து அதனை புதிய பதிப்பு என்று மொஸில்லா கூறுவது சென்ற பதிப்பு 5லேயே தொடங்கிவிட்டது. அது பதிப்பு 4.2 ஆகத்தான் இருந்திருக்க வேண்டும் ஆனால் பதிப்பு 5 ஆக அறிவிக்கப்பட்டது என்று குறை கூறுகின்றனர். அதே போலத்தான் பதிப்பு 6 இல் உள்ளது என்று அறிவித்துள்ளனர்.

இருப்பினும் நீங்கள் பயர் பொக்ஸ் பதிப்பு 5வைத்து பயன் படுத்திக் கொண் டிருந்தால் பதிப்பு 6 இற்கு மாறி விடவும் சரியான பாதுகாப்பற்ற பதிப்பு 5க்கான சப்போர்ட் இப்போது மொஸில்லா வால் வழங்கப்படுவதில்லை அதன் பிரச்சினைகளுக்குத் தீர்வான அம்சங்களுடன் தான் இப்




போது பாதிப்பு 6 கிடைத்துள்ளது எனவே பயர்பொக்ஸ் தான் நான் பயன்படுத்து வேன் என தீர்மானித்துள்ள வர்கள் பதிப்பு 6க்கு மாறிக் கொள்வது அவர்களுக்கும் அவர்களின் கணனிக்கும் நல்லது. புதிய பதிப்பினை டவுண்லோட் செய்திட http://www.mozilla.com/enus/firefox/new/என்ற இணையத்தள முகவரிக்குச் செல்லவும்.

## மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச நாடுகள் இலங்கைக்கு எதிராக செயற்படப் போவதில்லை

### கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழர்களை அழிப்பதற்கு உதவி செய்த இந்தியா இன்று அதற்காக இலங்கை அரசாங்கத்திடமிருந்து தமிழ் மக்களின் காணிகளை இலஞ்சமாகப் பெற்றுக் கொள்வதாக இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன குற்றம்சுமத்தியுள்ளார்.

மனித உரிமை குற்றச்சாட்டுக்களிலிருந்து தப்புவதற்காகவே இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்வதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,


யுத்தத்தை முடித்து தமிழ் மக்களை அழிப்பதற்கு இந்தியா, சீனா, இஸ்ரேல், அமெரிக்கா உட்பட பல நாடுகள் இலங்கைக்கு ஆயுதங்கள் உட்பட அனைத்து உதவிகளையும் வழங்கியது. இதற்காக அந்நாடுகளுக்கு அரசாங்கம் இலஞ்சம் கொடுக்கின்றது. வடக்கு, கிழக்கில் பரம்பரையாக வாழும் மக்களின் காணிகளை அந்நாடுகளுக்கு வழங்குகிறது.

அந்த நாடுகளும் யுத்தத்திற்கு உதவி வழங்கியமைக்கு காரணம் தமிழ்மக்களின் காணிகளை கொள்ளையடிப்பதற்காகவே ஆகும். இறுதிக்கட்ட யுத்தத்தில் மக்கள் அழிந்தமையும் அந்நாடுகளுக்கு தெரியும். எனவே, உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச நாடுகள் இலங்கைக்கு எதிராக எதனையும் மேற்கொள்ளப் போவதில்லை.

எனவே, இந்த உண்மையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் புலம்பெயர் தமிழ் மக்களும் புரிந்துகொள்ள வேண்டும். உழைக்கும் வர்க்கத்தினருடனும் இடதுசாரிகளுடனும் இணைந்து போராடுவதே தமிழ்மக்களின் உரிமைகளை பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரே வழியாகும். எனவே, இந்தியாவையும் சர்வதேசத்தையும்நம்பிக் கெட்டுப்போவதைகைவிட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-4)

## கைது செய்யப்படும் சந்தேக நபர்களை 48 மணிநேரம் தடுத்து வைக்க தீர்மானம்

### நீதியமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு



கைது செய்யப்படும் சந்தேக நபர்களை 48 மணித்தியாலயங்கள் வரையில் தடுத்து வைப்பதற்கு அரசாங்கம் அனுமதி கோரவுள்ளதாக ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், பொலிஸாரினால் தற்போது அமுலில் உள்ள சாதாரண சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் சந்தேக நபர்களை 24 மணித்தியாலங்களுக்கு மேல் நீதிமன்றில் ஆஜர்படுத்தாமல் தடுத்து வைக்க முடியாது.

இந்த கால அவகாசத்தை 48 மணித்தியாலங்கள் வரையில் நீடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக குற்றவியல் சட்டத்தில் திருத்தங்களை ஏற்படுத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது. சட்டதிருத்தம் குறித்த பிரேரணை பாராளுமன்றில் முன் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மாற்றுக் கருத்துக்களை வெளியிடுவோரை அடக்குமுறைக்கு உட்படுத்த அரசாங்கம் இந்தச் சட்டத்தை அமுல்படுத்துவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன. (ஸ்ரீ-4)

## திருமலையில் வாகன விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அலஸ்தோட்டப் பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 4 ஆம் திகதி இரவு 8.45 மணியளவில் மதுபோதையில் வாகனம் செலுத்திய போது மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதுண்டு படுகாயடைந்த நிலையில் கண்டி வைத்திசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்பட்ட 3 பிள்ளைகளின் தந்தையான 37 வயதுடைய ஏ.ஆர்.றியாழ் என்பவர் உயிரிழந்துள்ளார்.

விபத்தின் போது அவர் தாக்கப்பட்டுள்ளதாக உறவினர்கள் சந்தேகின்றனர். பிரேத பரிசோதனை அறிக்கை கிடைத்தவுடன் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

படுகாயமடைந்தவரை பார்வையிட வந்த நண்பர்களும் விபத்துக்குள்ளாகி திருமலை அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## புதுடில்லி குண்டுவெடிப்புக்கு ஜனாதிபதி மகிந்த கண்டனம்

(கொழும்பு)

அமைதியை விரும்பும் வலயத்தில் வாழ்கின்ற மக்களை பாதுகாப்பதற்காக பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைக்கு இலங்கை பங்களிப்பு வழங்குமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

புதுடில்லி உயர்நீதிமன்றத்திற்கு அருகில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து இந்திய பிரதமர் மன்மோகன்சிங்குக்கு ஜனாதிபதி அனுப்பியுள்ள கடிதத்தில் இத் தாக்குதலை தாம் வன்மையாக கண்டிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் குண்டுத் தாக்குதலில் உயிரிழுந்தவர்களின் குடும்பங்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் தனது ஆழ்ந்த அனுதாபங்களையும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## மாகாணமட்ட சித்திரப்போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டோர் விபரம்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலய பாடசாலைக்களுக்கிடையில் வலய மட்டத்தில் நடத்தப்பட்ட தரம்-1 தொடக்கம் தரம்-5 வரையான மாணவர்களுக்கான சித்திரப் போட்டியில் வெற்றி பெற்று முதலாமிடம் பெற்ற மாணவர்களுக்கான மாகாண மட்டத்திலான சித்திரப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு மருதனார்மடம் வடமாகாண கல்வீத்திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

இப் போட்டிக்கு தெரிவாகியுள்ள மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

தரம்-1

தே.டனுஷியா (மு/முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலை)

தரம்-2

வி.தனுசியா (மு/முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலை)

தரம்-3

சி.குமரன் (மு/மயில்வாகனம் தமிழ் வித்தியாலயம் மல்லாவி)

தரம்-4

ந.கியூரிகா (மு/மாங்குளம் மகாவித்தியாலயம்)

தரம்-5

ஜெ.நிவேதன் (மு/மயில்வாகனம் தமிழ் வித்தியாலயம் மல்லாவி)

இதில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் ஆள் அடையாளத்தை அதிபர் கையொப்பமிட்ட புகைப்படத்துடன் உறுதிப்படுத்தி அனுப்பப்படவேண்டும்.

அத்துடன் வர்ணங்கள், உபகரணங்கள், அச்சுப் பதிப்பதற்கான, ஒட்டுவதற்கான தாள்கள் என்பனவும் கொண்டு வரப்பட வேண்டும் எனவும் துணுக்காய் கல்வி வலய ஆரம்ப கல்விப் பணிப்பாளர் திருமதி ஞா.பத்மநாதன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-12-15)

## ஊடகங்கள் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படக் கூடாது

### சாம் விஜேசிங்க தெரிவிப்பு

ஊடகங்கள் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படக் கூடாது என பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் முரண்பாட்டு தீர்வுக்குழுத் தலைவர் சாம் விஜேசிங் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களில் கட்டுப்பாடுகளை விதித்துக் கொள்வது தொடர்பில் நடைபெற்ற தேசிய மாநாட்டில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஊடகங்கள் மீது வரையறைகளை விதிப்பதன் மூலம் நாட்டு மக்களே பாதிக்கப்படுவர். எனவே, ஏதேனும் ஓர் நாட்டில் ஊடகம் அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டால் அதன் மூலம் பாதக விளைவுகளே ஏற்படும்.

அதேபோன்று உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டிய தார்மீகப் பொறுப்பு ஊடகங்களுக்கு காணப்படுகிறது.

ஊடகங்கள் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்படக்கூடாது எனவும் ஊடகங்கள் கடமையை சரியான முறையில் செய்ய வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-4)

## பிரதிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

துணுக்காய் கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட இலங்கை அதிபர் சேவை தரம்-Iஅல்லது இலங்கை அதிபர் சேவை தரம் -2 -I சேர்ந்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

அத்தோடு ஆகக் குறைந்தது 3 வருட கால மேனும் சேவையாற்றக் கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.

மேலும் இலங்கை அதிபர் சேவை தரம்-I இல் பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்படாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் இலங்கை அதிபர் சேவை 2-I சேர்ந்தவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

மேற்படி பதவிக்கு துணுக்காய் வலயத்திற்குட்பட்ட தகுதியானவர்களுடைய விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாதவிடத்து முல்லை மாவட்டத்திற்கு உட்பட்டவர்களிடமிருந்து கிடைக்கும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்படுமெனவும் விண்ணப்பத்தினை துணுக்காய் கல்வி வலய அலுவலகத்திற்கு எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு துணுக்காய் வலய கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-12-15)

## அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டமை ஒரு கண்துடைப்பு நடவடிக்கையே

### தயாசிறி ஜயசேகர எம்.பி. தெரிவிப்பு

அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்டமை ஒரு கண்துடைப்பபே என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

உலக நாடுகளை ஏமாற்றும் நோக்கில் அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை நீக்கியுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். ஜனநாயக பொறிமுறைமையை ஏற்படுத்துமாறு சர்வதேச சமூகம் பிரயோகித்து வரும் அழுத்தங்களிலிருந்து மீளும் நோக்கில் அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

பொதுப்பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அவசாகாலச் சட்டம் அமல்படுக்கப்பட்டதாகவும் தற்போது அந்தச்சட்டம் நீக்கப்பட்டு அதற்கு பதிலீடாக மேலும் ஓர் சட்டம் அமுல்படுத்தப்படுவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்வாறான நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடியாது என அவர் தெரிவித்துள்ளார். அவசரகாலச் சட்டத்தை நீக்கி அதற்கு பதிலாக மற்றுமொரு சட்டத்தை அமுல்படுத்துவதில் எவ்வித பயனும் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவசரகாலச்சட்டத்தை நீக்குவதற்காக ஜனாதிபதி எடுத்த நடவடிக்கைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# மற்றொரு கோணம்



## ஆத்திகர்கள்,நாத்திகர்கள் இருவரும் ஒருவிதமான மூடத்தனத்தில் இருக்கிறார்கள்

ஆன்மீகம் 30

வாழ்க்கையில் வெற்றி பெறுவது என்பது எப்பொழுது முழுமையடைகிறது?

என்னைப் பொறுத்தவரை ஒரு மனிதர் ஞானோதயம் கிடைக்கிற பொழுதுதான் அவரது வாழ்க்கை முழுவெற்றி என்று அர்த்தம். உடலுக்கும் மனதுக்கும் உயிருக்கும் கூட மனிதர்கள் அடிமைகளாக இருக்கிறார்கள். இவற்றிலிருந்து விடுதலை பெறுவது தான் வாழ்வின் முழுவெற்றி. அப்படியானால் தற்கொலை செய்து கொள்வது வாழ்க்கையில் வெற்றி பெறுவதா? என்கிற கேள்வி எழலாம். அவர்கள் ஒருவலியையோ, வேதனையையோ, சோகத்தையோ தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொள்கிறார்கள். அது அந்த உணர்வுக்கு அவர்கள் அடிமையாய் இருப்பதைக் காட்டும். சிலர் தீவிரவாத இயக்கங்களில் போதிக்கப்பட்ட கொள்கைகளுக்காக உயிர் துறக்கிறார்கள். இது தீவிரமான உணர்வுக்கு அடிமையானதால் ஏற்பட்டதே தவிர, சுதந்திர உணர்வால் ஏற்பட்ட தல்ல.

உங்களைப் பொறுத்தவரையில் வெற்றி என்றால் உங்களுக்குக் கீழே நான்கு பேர் இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள். உங்களிடம் பத்து ரூபாய் இருந்து மற்றவர்களிடம் எதுவும் இல்லையென்றால் அதனை வெற்றி என்று நினைக்கிறீர்கள். இதற்குப் பெயர் வெற்றியல்ல. இது ஒரு விதமான நோய்.

எதற்கும் அடிமையாகாமல் முழு விடுதலையின் தன்மையோடு நீங்கள் வாழ வேண்டுமென்றால் உங்கள் வாழ்க்கைக்குள் யோகா வரவேண்டும். உங்கள் தடைகளைத் தாண்டி உயர்வதே உண்மையான வெற்றி.

தியானத்தின் போது கண் மூடுவது ஏன்?

கண்களைத்திறந்து வெளியே பார்ப்பதன் நோக்கமே பிழைப்பிற்காகத்தான். பிழைப்பு மட்டும் முக்கியமில்லை. உள்நோக்கியும் பார்க்க வேண்டும். உயிரின் மூலத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்ற உணர்வு ஏற்பட வேண்டுமானால், தானாகவே கண் மூடிக்கொள்ளும். உங்களுக்குத் தியானம் தெரியாவிட்டாலும் பரவாயில்லை. தினமும் பத்து நிமிடங்கள் கண் மூடி அமர்ந்து பாருங்கள். உங்கள் உடல் நிலயிலும் மன நிலையிலும் பெரிய மாற்றங்கள் தெரியும். இப் போதெல்லாம் தூங்குவதற்குத் தான் கண் மூடுகிறீர்கள். விழிப்புணர்வோடு கண் மூடியிருப்பீர்களேயானால் அதில் விளைகிற பயன்கள் மகத்தானவை என்பதை அனுபவ பூர்வமாக உணர்ந்து கொள்வீர்கள்.

நாத்திகர்கள் பற்றிய உங்களது கருத்து என்ன?

ஆத்திகர்கள் கடவுள் உண்டு என்று நம்புகிறார்கள். நாத்திகர்கள் கடவுள் இல்லையென்று நம்புகிறார்கள். இரண்டுமே தங்களுக்குத் தெரியாத ஒன்றைப் பற்றி ஏதோ ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். இரண்டுமே தவறுதான் எனவே ஆத்திகர்கள், நாத்திகர்கள் இருவருமே ஒரு விதமான மூடத்தனத்தில்தான் இருக்கிறார்கள். ஏனென்றால் தங்களுக்குத் தெரியாததை, தெரியாது என்று ஏற்கிற மனப்பான்மை அவர்களுக்கில்லை.

இன்று விஞ்ஞானம் எல்லாவற்றையும் பிரித்துப்பிரித்து ஆய்வு செய்கிறது. அணுவைக் கூட இரண்டாகப் பிரித்து விட்டது. ஆனால் உயிரின் மூலம் எதுவென்று அதனால், கண்டு பிடிக்க முடியவில்லை. பிரபஞ்சம் எங்கே தொடங்குகிறது எங்கே முடிகிறது என்று தனக்குத் தெரியவில்லை என்பதை விஞ்ஞானம் ஒப்புக்கொள்கிறது. ஆனால், ஆத்திகர்களும் நாத்திகர்களும் எல்லாம் தெரிந்ததுபோல் ஆடுகிறார்கள். விஞ்ஞானத்திற்கும் ஆன்மீகத்திற்கும் அதிக வித்தியாசம் இல்லை. ஏனெனில் இரண்டுமே உண்மையைத் தேடு கின்றன. ஆத்திகர்களும் நாத்திகர்களும் தங்களுக்குத் தெரியும் என்கிற நினைப்பை மறந்து விட்டு உண்மையைத் தேட வேண்டும் என்பதே இருவரைக் குறித்தும் எனக்கு இருக்கும் கருத்து.



தியான இலிங்க பைரவி

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# செவ்வியல் தமிழ் இலக்கியத்தில் பெண் மொழி

07

“கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை”

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
முன்னை நாள் ஆய்வாளர்
ஜப்பான்-கக்குசுயின் பல்கலைக்கழகம்

நயமாக எடுத்துக் கூறும் ...

...“சுரஞ்சொல் யானைக் கல்லுறு கோட்டிற்
றெற்றென விறீஇயரோ வைய மற்றியாம்
நும்மொடு நக்க வால்வெள் ளெயிறே
பாணர் பசுமீன் சொரிந்த மண்டை போல
எமக்கும் பெரும்புல வாகி
நும்மும் பெறேஎ மிறீஇயரெம் முயிரே” (பாடல் 169)

இப்பாடல் தலைவி கூற்றுப்பாடலாகவும் தோழிகூற்றுப் பாடலாகவும் உரையாசிரியர்களால் கொள்ளப்படுகிறது. தலைவி கூற்று நிலையில் பரத்தமையொழுக்கம் பற்றித் தலைவனுடன் பேசிய மொழி நிலையாகப் பாடல் கொள்ளப் படுகிறது. ஆனால், தோழியின் கூற்று நிலையில் பெண் மொழியின் சிறப்புத் துலக்கமாகத் தெரிகிறது. நீண்ட நாள் தலைவியோடு உறவு கொண்டிருக்கும் தலைவன் அவளைத் திருமணம் செய்வதில் காலதாமதம் செய்கிறான். இதனைத் தோழி தலைவனுக்கு எடுத்துக் கூறும்போது நயமான மொழி நடையைப் பயன்படுத்துகிறாள்.

“நீ இன்னமும் தலைவியைத் திருமணம் செய்து கொள்ளாமல் இருக்கின்றாய் தலைவி நின்னால் நலனுண்ணப்பட்டாள். உன்னையும் அவள் உரிமையோடு பெறாததால், உயிர்விடும் நிலைக்கு ஆளாகியுள்ளாள். அவள் உயிரில் அவளுக்கே வெறுப்பு ஏற்பட்டுள்ளது.”

தோழி தலைவியின் நிலையை ஒரு உவமை மூலமும் நயமாகக் கூறுகிறாள். பாணர் தாம் பிடித்த மீனை பெய்து வைக்கிற மட்கலம் புலவு நாற்றத்தோடிருப்பது போல் என் உயிரும் அருவருப்புத் தருகின்றது. என்று கூறுவது ஊரவரால் பெரும் துன்பம் அனுபவிப்பதை விளக்கி நிற்கிறது. புலவு நாற்றமுடைய பாத்திரம் வேறொன்றுக்கும் பயன் படாது. அதேபோலவே தலைவியும் பிறருக்குப் பயன்படாத நிலையில் உள்ளால் என நயத்தக்க நாகரிகத் தோடு தோழி விளக்கியுள்ளாள். இதனால் தலைவியை மிக விரைவாக திருமணம் செய்து கொள்ளுமாறு வேண்டுகிறாள். எனவே சங்க அகப்பாடல்களில் பயன்படுத்தப் பட்டுள்ள பெண் மொழியின் சிறப்புகளைப் பகுத்து நோக்கியபோது சங்க இலக்கியத்தில் பயன்படுத்தப்பட்ட பெண்மொழியின் தன்மையை நன்கு அறியமுடிகிறது. எனினும் ஆண்பாற் புலவர்களுக்கும் பெண்களின் கூற்று நிலைப் பாடல்களைப் பாடியுள்ளனர். அவற்றையும் ஒப்பிட்டு நோக்கும் போதே மேலும் பெண்பாற் புலவர்களின் பெண்மொழிச் சிறப்பை உணர்த்த முடியும். தலைவி கூற்றாக அமைந்த இரு பாடல்களினது மொழிப் பயன்பாட்டை வருமாறு விளக்கலாம்.

“பைங்காற் கொக்கின் புன் புறத் தன்ன
குண்டு நீராம்பலும் கூம்பின வினியே
வந்தன்று வாழியோ மாலை
ஒரு தானன்றே கங்குலு முடைத்தே” (பாடல் 122)

இப்பாடலைப் பாடியவர் ஓரம் போகியார் என்னும் ஆண்பாற் புலவராவார். தலைவன் பிரிவினால் வருந்தும் தலைவியின் மனைநிலையை பாவனை செய்து பாடியுள்ளார். “பசிய கால்களையுடைய கொக்கினது புல்லிய புறத்தைப் போன்று ஆழமான நீர்நிலையில் வளர்ந்துள்ள ஆம்பலின் மலர்களும் குவிந்துவிட்டன. மாலைக் காலம் வந்து விட்டது. ஆனால் இந்த மாலை ஒன்றுமட்டுமல்ல, அதன் பின்பே யாமமும் வரப் போகின்றதே” எனத் தலைவி மனம் வருந்துகிறாள். இங்கு ஒரு பொதுவான மொழியிலேயே தலைவியின் பிரிவுணர்வு விளக்கப்பட்டுள்ளது.

பெண்பாற் புலவருடைய மொழி நடை வேறுபட்டு அமைவதை பின்வரும் பாடல் நன்கு புலப்படுத்துகிறது.

“இளமை பாரார் வளருசை இச் சென்றோர்
இவணும் வாரா ரெவணரோ வெனப்
பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லைத்
தொகுமுகை யிலங்கெயி றாக
நகுமோ தோழி நறுந்தண் காரே” (பாடல் 127)

இப்பாடல் ஒக்கூர் மாசாத்தி என்னும் பெண்பாற் புலவரால் பாடப் பட்டதாகும். தலைவியின் மனநிலை பாடற் பொருளாக உள்ளது. “இளமை பாரார்” என்ற தொடர் பெண்ணின் பிரிவுத் துன்பத்தை பெண்மொழியில் தோழியிடம் கூறுவதாகவுள்ளது. ஒரு பெண் தன்னுடைய அந்தரங்கமான உணர்வை தோழியிடம் வெளிப்படையாகப் பேசுகிறாள். “நகுமே தோழி நறுந் தண்காரே” என்ற தொடர் இயற்கை நிலையில் தலைவன் குறித்த காலத்தில் திரும்பி வராவிட்டால் ஏற்படும் அவர் நிலையை தெளிவாகக் காட்டி நிற்கிறது. கார் காலத்தைக் காட்ட முல்லை மலர்ந்திருக்கிறது. ஆனால் காதலனோ இன்னமும் திரும்பி வரவில்லை. பொருள் மீதுநாட்டங் கொண்டவன் காதலியை மறந்து விட்டான் போலும் என எல்லோரும் கேலியாகப் பேசும் நிலை பெண் மொழியால் நன்கு விளக்கப்பட்டுள்ளது. தனது நட்புக்குரியவரை முன்னிறுத்திப் பேசும் பெண்ணின் மொழிப் பாவனை நிலையில் அமைந்துள்ள ஆண்மொழியை விட இயல்பான மொழியாக உள்ளமை கவனதிற்குரியது. (தொடரும்)








பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நவோதயா பாடசாலை வார நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பாடசாலை அதிபர் திருமதி சுந்தரேசன் மங்கல விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி கல்வி வலய அழகியல் உடற்கல்விப் பணிப்பாளர் செல்வி இன்பமலர் பரமலிங்கம் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்:- கரவெட்டிச் செய்தியாளர்)*

## ஒப்பந்த ஊழியர்களின் தொழிலை பாதுகாக்கும் வகையில் திருத்தச் சட்டம்

ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களின் தொழிலைப் பாதுகாக்கும் வகையில் விரைவில் திருத்தச் சட்டம் கொண்டுவரப்படவுள்ளதாக தொழிலமைச்சர் காமினி லொக்குகே பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்படுகின்ற ஊழியர்களின் தொழிலைப் பாதுகாத்து உறுதிப்படுத்த இதன் மூலம் எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டார்.

கைத்தொழில் பிணக்குகள் திருத்தச் சட்டத்தின் மீதான விவாதத்தை நேற்று முன்தினம் சபையில் ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அமைச்சர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இச்சட்டம்திருத்தப்படுவதன் மூலம் தொழிலாளர்களின் தொழிலும் தொழிற்சங்க உரிமைகளும் பாதுகாக்கப்படுகின்றன. தொழிலாளர்களின் நன்மைகளை கருத்தில் கொண்டு தான் இச்சட்டத்தில் திருத்தம் செய்யப்படுகின்றது.

இப்போது அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள் சேர்க்கப்படுகின்றார்கள். இது தொழிலாளர்களின் தொழிலைப் பாதுகாத்து உத்தரவாதப்படுத்தக்கூடிய முறைமை அல்ல. இவ்விடயத்தில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இதனால்தான் ஒப்பந்த அடிப்படையில் தொழிலுக்கு சேர்க்கப்படுகின்ற தொழிலாளர்களின் தொழிலைப் பாதுகாத்து உத்தரவாதப்படுத்தவென விசேட சட்ட ஏற்பாட்டை விரைவில் பாராளுமன்றத்திற்கு கொண்டு வரவிருக்கின்றோம். இச்சட்ட ஏற்பாடு தொடர்பான யோசனை தற்போது அமைச்சரவையின் பரிசீலனையில் உள்ளது. (ஸ்ரீ-2)

## மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கே ஆதரவு

### சீனா உறுதியளிப்பு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள எந்த ஒரு மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இலங்கைக்கு ஆதரவளிக்க சீனா உறுதியளித்துள்ளது. இந்த உறுதி மொழியை சீனாவின் ஜனாதிபதி வூபங்கூ பிரதமர் டி.எம் ஜயரட்னவிடம் தெரிவித்துள்ளார்.

பிரதமர் டி.எம். ஜயரட்ன தற்போது சீனாவுக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

இதன்போது இரண்டு தலைவர்களும் நடைமுறை விடயங்கள் குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

சீனா இலங்கையின் சுதந்திரம் இறைமையை மதிக்கிறது. அத்துடன் நாட்டின் அபிவிருத்திக்கும் உதவி புரிய முன்வருவதாக சீன ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் வாரங்களில் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அமர்வின் போது இலங்கைக்கு பாரிய அழுத்தங்கள் ஏற்படும் வாய்ப்புள்ளது.

இதன்போது சீனா இலங்கைக்கு சார்பாக நடந்து கொள்ளும் என சீன ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். (ஸ்ரீ-2)

## பாகிஸ்தானிலிருந்து இறக்குமதியாகும் சீமெந்துக்கு தரச் சான்றிதழ்

கூட்டுறவுசங்கத்தினால் பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு துறைமுகத்திலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு தொகை சீமெந்துக்கு தரச்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த மூன்று கொள்கலன்களிலுள்ள சீமெந்துகளுக்கு தொகைக் தரச்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதாக தேசிய கூட்டுறவு சங்கத்தின் பந்துரணவக்க தெரிவித்துள்ளார்.

சீமெந்து தொகைக்கு எஸ். எல். எஸ். தரச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை தர நிர்ணய நிறுவனத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தரச் சான்றிதழ் வழங்கப்படாத காரணத்தினால் சுமார் ஒரு மாதத்திற்கும் மேலாக இந்த சீமெந்து தொகை துறைமுகத்தில் இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாக தேசிய கூட்டுறவு சங்கத்தின் தலைவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## 2011.09 09 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- ★ 1493-ஒட்டோமான் பேரரசின் ஆக்கிரமிப்புக்கு எதிரான குரொவேவியர்களின் போராட்டம் தோல்வியில் முடிந்தது.
- ★ 1513- ஆங்கிலேயர்களுக்கு எதிரான போரில் ஸ்கொட்லாந்தின் நான்காம் ஜேம்ஸ் தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டான்.
- ★ 1543- மேரி ஸ்டுவேர்ட் 9 மாதக் குழந்தையாக இருக்கும் போது ஸ்கொட்லாந்தின் அரசியாக முடி சூடினாள்.
- ★ 1791- ஜனாதிபதி ஜோர்ஜ் வோஷிங்டன் நினைவாக ஐக்கிய அமெரிக்காவின் தலைநகர் வோஷிங்டன் டி.சி. எனப் பெயரிடப்பட்டது.
- ★ 1799- பாஞ்சாலங்குறிச்சி கோட்டை பிரித்தானியரால் கைப்பற்றப்பட்டது.
- ★ 1839-அலபாமாவில் இடம்பெற்ற பெருந்தீயில் நூற்றுக்கணக்கான கட்டடங்கள் எரிந்து சேதமடைந்தன.
- ★ 1839- ஜோன் ஹேர்ச்செல் தனது முதலாவது ஒளிப்படத்தை கண்ணாடித் தட்டில் எடுத்தார்.
- ★ 1850- கலிபோர்னியா 31 ஆவது மாநிலமாக ஐக்கிய அமெரிக்காவில் இணைந்தது.
- ★ 1922- கிரேக்க- துருக்கி போர் துருக்கியரின் வெற்றியுடன் முடிவுக்கு வந்தது.
- ★ 1939- இரண்டாம் உலகப் போர்: போலந்தின் குரோவ் நகர் மீது நாசி ஜேர்மனியர் குண்டுகளை வீசித் தாக்கினர்.
- ★ 1942- இரண்டாம் உலகப் போர்: ஜப்பானிய விமானம் ஒரிகனில் குண்டு வீசியது.
- ★ 1944-பல்கேரியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து சோவியத் சார்பு அரசு பதவியேற்றது.
- ★ 1945-இரண்டாவது சீன- ஜப்பான் போரில் ஜப்பான் சீனாவிடம் சரணடைந்தது.
- ★ 1954-அல்ஜீரியாவில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் ஆயிரத்து 500 பேர் கொல்லப்பட்டனர்.
- ★ 1965- சூறாவளி பெட்சி, நியூ ஓர்லியன்சில் இரண்டாவது தடவையாக வீசியதில் 76 பேர் கொல்லப்பட்டனர். 42 பில்லியன் பொருட்கள் சேதமடைந்தன.
- ★ 1970-பிரித்தானிய விமானம் பாலஸ்தீனத் தீவிரவாதிகளினால் கடத்தப்பட்டு ஜோர்தானுக்குக் கொண்டு செல்லப்பட்டது.
- ★ 1991- சோவியத் ஒன்றியத்தில் இருந்து தஜிகிஸ்தான் விடுதலையடைந்தது.
- ★ 1993- பாலஸ்தீன விடுதலை இயக்கம் இஸ்ரேலை தனிநாடாக அங்கீகரித்தது.
- ★ 2001-ஆப்கானிஸ்தானில் தேசிய முன்னணித் தலைவர் அகமது ஷா மசூட் கொலை செய்யப்பட்டார்.
- ★ 2006- திறந்த அமெரிக்க டென்னிஸ் பந்தயத்தில் ரஷ்ய வீராங்கனை மரியா ஷரப்போவா வெற்றி பெற்றார்.

**பிறப்புக்கள்**

- ★ 1899- கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி, தமிழ் எழுத்தாளர். (இ.1954)
- ★ 1967- அக்சய்குமார், இந்திய நடிகர்

**இறப்புக்கள்**

- ★ 1087-முதலாம் வில்லியம், இங்கிலாந்தின் மன்னன்
- ★ 1947- கலாயோகி ஆனந்த குமாரசுவாமி, (பி.1877)
- ★ 2003-எட்வர்ட் டெல்லர், ஐதரசன் குண்டைக் கண்டுபிடித்தவர், அமெரிக்க இயற்பியலாளர் (பி.1908)
- ★ 2005-இளையபெருமாள், தலித் தலைவர் (பி.1924)


**சிறப்பு நாள்**

- ★ தஜிகிஸ்தான்- சுதந்திரதினம்




சீனாவின் முதல் தலைவரும் பொதுவுடைமைவாதியுமான மாவோ- சே-துங்கின், நினைவு தினம் இன்றாகும்.(பி.1893)

# இருப்பாய் தமிழா நெருப்பாய்!



காசி ஆனந்தனின் அதிரடித் தொடர் 8



## சாகடிக்கப்பட்டு மட்டும் தமிழர்கள் அழிக்கப்படவில்லை பிறக்காமல் தடுக்கப்பட்டும் அழிக்கப்படுகிறார்கள்

இதுதான் இன்று இலங்கையில் நடந்து வருகிறது. ஒரு பெரும் பான்மை தேசிய இனமும் ஒரு சிறுபான்மை தேசிய இனமும் ஒரே நாட்டில் வாழ்ந்தால்-' இன அழிவு' சிறுபான்மை தேசிய இனத்துக்கு அன்றி பெரும்பான்மை தேசிய இனத்துக்கு அல்ல.

தமிழீழத் தாயக நிலப்பரப்பின் சில பகுதிகளை இலங்கையோடு இணைத்து - சிங்களவர்களைக் குடியேற்றியும் அழித்தொழித்தும் வரும் சிங்கள அரசு; தமிழீழ தேசிய இனத்தின் இன்னொரு உயிர்க்கூறான தமிழ் மக்களைச் சிதறடித்தும் சாகடித்தும் அழித்தொழித்து வருகிறது.

பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் 1948 இல் இலங்கைத் தீவை விட்டு வெளியேறிய உடனேயே- சுடச்சுட அதே ஆண்டில்- இலங்கையில் வாழ்ந்த 10 இலட்சம் மலையகத் தமிழர்களின் குடியுரிமையைப் பிடுங்கி எடுத்தது சிங்கள அரசு. சிறீமாவோ- சாஸ்திரி உடன்படிக்கையின் அடிப்படையில் பிற்காலத்தில் 7 இலட்சம் மலையகத் தமிழர்கள் இலங்கையில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள்.

அதன்பின்னர் சிங்கள இனமவெறிக் கலவரங்களின் கொடுமை தாங்க முடியாமல்- கடந்த 50ஆண்டுகள் காலத்தில்- 9 இலட்சத்து 17 ஆயிரம் தமிழர்கள் தமிழீழத்தை விட்டு வெளியேறி உலக நாடுகள் அனைத்திலும் அகதிகளாய்க் குடிபெயர்ந்திருக்கிறார்கள் என்று ஐ.நா.மன்றத்தின் அகதிகள் இணையத் தளம் கூறுகிறது.

3 இலட்சம் தமிழர்கள் சிங்கள இனக் கலவரங்களின் போதும்- சிங்களப் படைகள் நடத்திய கொடிய இனவெறிப் போர்களின் போதும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். காணாமல் போனவர்களின் எண்ணிக்கை மேலும் ஒரு இலட்சத்தைத் தாண்டும்.

சாகடிக்கப்பட்டு மட்டும் தமிழர்கள் அழிக்கப்படவில்லை- பிறக்காமல் தடுக்கப்பட்டும் அழிக்கப்படுகிறார்கள். முள்ளிவாய்க்கால் இன அழிப்பு நடவடிக்கையின் முடிவில் 98 ஆயிரம் தமிழ்ப்பெண்கள் விதவைகள் ஆக்கப்பட்டவர்கள் என்று புள்ளிவிபரம் கூறுகிறது. இவர்கள் பிள்ளைகள் பெறமுடியாதவர்கள் ஆக்கப்பட்டார்கள்.

தமிழீழத்தில் வாழும் இஸ்லாமியர்கள் தமிழர்களே. அவர்களின் பழம்பெரும் சிற்றூர்களின் பெயர்களும்-தமிழீழ இஸ்லாமியர்கள் தாங்கும் சொந்தப் பெயர்களும்-காலங்காலமாக அவர்கள் வாயில் நிலைத்துள்ள தமிழ்நாட்டுப் பாடல்களும்- அவர்கள் முற்றிலும் தமிழர்களே என்பதை உறுதி செய்யும்.

ஆனால் இஸ்லாமியத் தமிழர்களை மதத்தின் அடிப்படையில் தனியாகப் பிரித்து - தமிழ்த் தேசிய இனத்தில் இருந்து வேறுபடுத்தி- தனி இணைப்பிரிவாக மாற்றும் தமிழின அழிப்பு நடவடிக்கையில் அரசு ஈடுபட்டு வருகிறது.

தமிழீழத்தில் சிங்களவர்கள் குடியேறுவதாலும்- சிங்கள இலங்கையில் தமிழர்கள் குடிபுகுவதாலும் ஏற்படும்' இனக் கலப்பும்' தமிழீழத் தேசிய இனத்தை அழித்து வருவதையும் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

தந்தை செல்வா தமிழரசுக் கட்சியைத் தொடங்கிய 1949 ஆம் ஆண்டு காலகட்டத்தில்- என் தந்தையார் தமிழரசுக் கட்சிக் கூட்டங்களுக்குத் தவறாமல் என்னை அழைத்துச் செல்வதுண்டு.




அன்று எல்லாக் கூட்டங்களிலும் தந்தை செல்வா கூறிய ஒரு செய்தி- இன்றும் என் நெஞ்சில் அழியாது நிலைத்திருக்கிறது.

'இலங்கையில் இன்று 65 இலட்சம் சிங்களவர்கள் வாழ்கிறார்கள். நாம் 35 இலட்சம் தமிழர்கள் வாழ்கிறோம். விரைவில் சிங்களவர்கள் பெற்றுள்ள அனைத்து உரிமைகளையும் நாமும் பெற்று இறுமாப்போடு தலை நிமிர்ந்து வாழ்வோம்' என்றார் தந்தைசெல்வா.


> “ஒரு பெரியகுடம் நிரம்பிய தண்ணீரையும் ஒரு சிறிய குவளைப் பாலையும் ஒரு பொதுவான பாத்திரத்தில் ஊற்றிக் கலந்து பாருங்கள், பால் தண்ணீராகுமே தவிர தண்ணீர் பாலாகாது.”



ஓயாத கால ஒட்டத்தில் 62 ஆண்டுகள் ஓடிப்பறந்துவிட்டன. இன்று நிலை என்ன? 65 இலட்சம் சிங்களவர்கள்-இன்று ஒன்றரைக்கோடி; 35 இலட்சம் தமிழர்கள்- இன்றும் 35 இலட்சம். 62 ஆண்டுகள் தமிழீழத் தேசிய இனத்தில் பிள்ளைகளே பிறக்கவில்லையா? நாம் அழிக்கப்பட்டோம்-திட்டமிட்டு அழிக்கப்பட்டோம்.

(பொறி பறக்கும்)

# நவீன எண் சோதிடம்



## நேர்மை, நீதி, ஒழுக்கம் என்பவற்றில் சிறப்புற்று விளங்குவர்.

41

எண் கணித நிபுணர்
கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT

## உடல் எண் 5 உயிர் எண் 3

5,14,23 போன்ற தேதியில் பிறந்து, பிறந்த தேதி, .மாதம், வருடம் மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 3 வருமேயானால் இவர்கள் புதன், குரு ஆதிக்கத்தில் பிறந்தவராவர். பார்ப்பதற்கு ஓரளவு உயரமாகவும், கவர்ச்சியான தோற்றமுடையவராகவும் காட்சியளிப்பர். இவர்களது பற்கள் முத்துப் போன்று காட்சியளித்தாலும் முன்பற்கள் இரண்டும் சற்று பெரிதாக இருக்கும். இளமையிலேயே சிலருக்கு முடி உதிர்ந்துவிடும். அதிக சிந்தனை செய்வதால் உடலில் உஷ்ணம் ஏறிக் கொண்டே போகும்.

சுறுசுறுப்பான இவர்கள் எப்பொழுதும் எதையாவது செய்து கொண்டும், திட்டம் தீட்டிக் கொண்டும் இருப்பர். நேர்மை, நீதி, ஒழுக்கம் போன்றவற்றில் சிறப்புற்று விளங்கும் இவர்களுகுப் பெயர் பொருத்தமானதாக அமைந்துவிட்டால் அவர் செய்கின்ற உத்தியோகம், தொழில் போன்றவற்றில் சிறப்புற்று விளங்குவர். அத்தோடு செல்வச் சேர்க்கையும், வீடு, வாகனச் சேர்க்கையும் உண்டாகும். ஆனால், பெயர் நன்றாக அமையா விட்டால் அவர், செய்கின்ற காரியங்களில் தோல்வி காண்பர். நடவடிக்கை மாறிவிடும். தேவை

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

யற்ற காரியங்களில் இறங்கி மாட்டிக் கொள்வர். கெட்ட பெயரையும் எடுப்பர். இதனால் தன் பிறந்த தேதிக்குப் பொருத்தமானதாகப் பெயரை அமைத்துக் கொள்வது அவசியம்.

உத்தியோகம் பார்க்கும் இந்த எண்ணிக்கைகாரர்கள் தான் செய்கின்ற வேலையில் கண்ணும் கருத்துமாக இருப்பதோடு உயர்ந்த இடத்தையும் எளிதில் பிடிப்பர். ஆனால், பெயர் பொருத்தமின்றி இருந்தால் கஷ்டத்துத்திற்கு உள்ளாவர். கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கும் இவர்கள் தன் தனித் திறமையால் உயர்ந்த நிலையை அடைவர். ஆனால் பெயர் பொருத்தமின்றி இருப்பவர்களின் திறமை முழுவதும் பிறருக்கு பயன்பட்டு விடும்.

மிகுந்த கெட்டிக்காரர்களான இவர்கள் அதிகம் பேசமாட்டார்கள். அப்படிப் பேசினால் அது பயனுள்ளதாகவே இருக்கும். 4 எண் காரர்களைப் போல் மனதில் வந்ததையெல்லாம் மறக்காமல் வெளியிட மாட்டார்கள். தான் சொல்ல வேண்டியதை சிந்தனை செய்தே சொல்லுவர். முன்பின் யோசனை செய்தே ஒரு காரியத்தில் இறங்குவர். இதனால் இவர்களை ஒரு நல்ல சிந்தனையாளன், அறிவாளி எனப்பலர் ஏற்றுக் கொள்வர். ஆனால், பெயர் நன்றாக அமையாவிட்டால் இவர்களுடைய திறமைகள் அனைத்தும் பிறருக்காகச் சென்று விடும். இதனால் பெயர் நன்றாக அமைய வேண்டியது அவசியம்.

தொழில் செய்யும் இவர்களுக்குப் பெயர் நன்றாக அமைந்து விடுமேயானால் தொழிலில் நிகரற்ற இலாபத்தை அடைவர். எல்லோரும் மதிக்கும் மனிதராக வாழ்வர். பலருக்கு வேலை கொடுக்கும் பாக்கியவானாக இருப்பர். என்றும் செல்வம் இவர்களுக்குக் குறையாது. இதே போன்று உத்தியோகத்தில் இருப்பவர்களின் பெயரும் சிறப்பாக அமைந்து விட்டால் உத்தியோக உயர்வும், முன்னேற்றமும் கூடிக் கொண்டே போகும். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால் எல்லாத் திறமையும் வீணாகிவிடும்.

இவர்களது மனம் புதிய ஆராய்ச்சியிலும், கண்டு பிடிப்புகளிலும் இறங்கி விடும். உள்ளொன்றும் புறமொன்று பேசத் தெரியாததால் தனக்குப் பிடிக்காதவைகளை உடனே பகிரங்கமாகக் கூறி விடுவர். இதனால் சிலருடைய பகையும் இவர்களுக்கு உண்டாகும். சமயம், சட்டம், சங்கீதம் போன்றவற்றில் மனம் இலயிக்கும். கலை ஞானம் கொண்டவர்கள் ஆதலால் கலையைக் கற்கவும் இரசிக்கவும் செய்வர். தொழிற் கூடங்களைக் கண்டுகளிப்பதிலும், பல வியாபாரங்களை பற்றித் தெரிந்து கொள்வதிலும், வெளி நாட்டைப் பற்றி தெரிந்து கொள்வதிலும் ஆர்வம் உடையவர்கள். தான் செய்யும் ஒவ்வொரு காரியமும் பலருக்கு பிரயோசனப்பட வேண்டும் எனப் பாடுபடுவர்.

இவர்கள் எந்தக் காரியத்தையும் ஆலோசிக்காது அவசரப்பட்டு செய்ய முன் வரமாட்டார்கள். ஆனால், பெயர் நன்கு அமையாதவர்கள் அவசரப்பட்டு இறங்கி சில விடயத்தில் மாட்டிக் கொண்டும் தவிப்பர். எதையும் நுணுக்கமாகச் செய்யும் இவர்களை மற்றவர்கள் மதிப்பர். இதனால், இவர்கள் தகுதி உயர்ந்து கொண்டே செல்லும். செய்யும் தொழிலை மதித்து வாழும் இவர்களை விட்டு எப்போதும் சக்தி பிரிவதில்லை. அடக்கமாகப் பேசுவதும் தான் நினைத்த காரியத்தை நோக்கியே செல்வதும் இவர்களிடம் உள்ள சிறப்பாகும். பெயரை நன்றாக அமைத்துக் கொண்டால் இவர்கள் என்றும் சீரும் சிறப்புமாக வாழ்வர்.

**தொழில்**

இவர்களுக்கு கமிஷன், கான்ட்ராக்ட், ஏஜென்சீஸ் போன்ற தொழில்களெல்லாம் சிறப்பாகும். வாகனத்தாலும், பல்வேறு பொருட்களை வியாபாரம் செய்வதாலும் முன்னேற்றம் பெறுவர்.

**நோய்**

இந்த எண்ணிக்கைகாரர்களுக்கு இரத்தக் கொதிப்பு, மூட்டுவலி, உஷ்ண வியாதிகள், கண் நோய் போன்றவைகள் வந்து நீங்கும். பெயர் பொருத்தமாக அமைந்து விட்டால் நோய் அதிகம் வருவதில்லை.

**பெயர் அமைக்கும் முறை**

5 என்ற புதனும், 3 என்ற குருவும் ஆதிக்கம் கொண்ட இவர்களுக்கு பெயரை புதன், குரு ஆதிக்கத்திலே அமைத்துக் கொள்வது சிறப்பாகும். புதன் ஆதிக்கமான 14,23,32,41,50,59,77 போன்ற எண்களிலும், குரு ஆதிக்கமான 21,39 போன்ற எண்களிலும், பெயரை அமைத்துக் கொள்வது சிறப்பாகும்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண்- 5,3,9

யோகமான தேதிகள்- 5,14,23, 3,12,21,30,9,18,27

யோகமான மோதிரக்கல் - வைரம்,ஜிர்கான்,எமிதிஸ்ட்

யோகமான நிறம்- வெளிர் நீலம், சாம்பல்நிறம், ரோஸ், ஆரஞ்சு, கத்தரிப்பூநிறம்

ஆகாத நிறம்- பச்சை

ஆகாத தேதிகள்- 6,15,24

* * *

## பெயர் எண்களின் பலன்

**19 எண் பலன்**

இந்த எண்ணிக்கையில் பெயர் அமைத்தால் நாளுக்கு நாள் முன்னேற்றம் உண்டாகும். பொன், பொருள், நல்ல குடும்பம், நல்ல ஆரோக்கியமும் பெற்று, அழகு மாறாத தோற்றமுடன் காட்சி அளிப்பர். மெர்குரி விளக்கு எவ்வாறு நேரமாக நேரமாக பவர் கூடிக் கொண்டே செல்கிறதோ அதைப் போன்று இந்த எண்ணிக்கைகாரர்கள் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வருவர். இவர்களுடைய முன்னேற்றம் தடைபடாது. பதவி, கௌரவம், மகிழ்ச்சி ஆகியவற்றில் சிறந்து, பல்வேறு மக்களுக்குத் தலைவனாக விளங்குவர். நல்ல குறிக்கோளுடன் வாழும் இவர்கள் தனக்கு தகுதியான வாழ்க்கைத் துணைவரை அடைந்து மகிழ்வர். தீய காரியங்களைப் புறக்கணிப்பதாலும், பிறருக்கு எவ்வித துன்பமும் செய்யாதிருத்தலாலும் என்றும் இவர்களுக்கு இறைவன் ஆருள் புரிந்து கொண்டே இருப்பார். தனது கடைசிக்காலம் வரை நல்ல ஆரோக்கியசாலியாக வாழ்வர். நேர்மையைத் தவிர மற்றவைகளை தன் மனம் வெறுக்கும் இயல்பு இயற்கையிலேயே இவர்களுக்கு உண்டு குன்றாத யோகமும் குறையாத செல்வமும் பெற்று வாழ்வர்.

**20 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயரில் கொண்டவர்கள் சமாதானப் பிரியர். பலருக்கு ஏற்படும் துன்பங்களை நீக்கி நன்மை அளிப்பர். இவர்களிடம் ஆலோசனை கேட்பதற்குப் பலர் வருவர். சாத்வீகமான இவர்களுக்கு கோபம் வரும்பொழுது நாக பாம்பாகி விடுவர். சுயநலமிருந்தால் இவர்கள் காரியம் தடையாகும்.

**21 எண் பலன்**

2 என்ற சந்திரனும் 1 என்ற சூரியனும் சேர்ந்து குருவாக மாறுவதால், சந்திரன் தேய்ந்து வளர்வது போல் வாழ்க்கையின் முற்பகுதி சோதனையும் பிற்பகுதி சாதனையும் கொண்டதாக இருக்கும். பின்னால் 1 என்ற சூரியன் வருவதால் தொடர்ந்த முன்னேற்றத்தை அளிக்கும். பொதுவாக இந்த எண்ணைப் பெயரில் உடையவர்களுக்கு செல்வம், செல்வாக்கு, குடும்ப வாழ்க்கை, நிரந்தரமான பதவி எப்பொழுதும் உண்டு. ஆனால், 6,15,24 போன்ற தேதிகளில் பிறந்தவர்களுக்குக் கெடுதலை விளைவிக்கும்.

(தொடரும்)

# எந்தப் பிழையும் செய்யாமல் மாட்டிக்கொண்ட என்ர பிள்ளை எங்களுக்கு வேணும்...

## ஈழத்தமிழ் அப்பாவித் தாயின் ஓலத்திற்கு பலன்கிடைக்குமா?

மரண வாசலில் இருந்து மீண்டு நிற்கும் மூவரில், சற்று வித்தியாசமானவர் சாந்தன். சாய் பாபாவின் தீவிர பக்தரான இவர், சாய் பக்தர்கள் குழாம் ஒன்றையே சிறையில் உருவாக்கிவிட்டார். சாந்த சொரூபியாக வலம் வரும் சாந்தன் பேசுவது ரொம்பவும் குறைவு. பெயர் மாற்றக் குழப்பத்தால் ராஜீவ் வழக்கில் சேர்க்கப்பட்டுவிட்டதாகச் சொல்லும் இவருக்கு ஈழத்தில் இருக்கும் தாய், தந்தையர் உயிரோடு இருக்கிறார்களா? அவர்களின் கதி என்ன? என்றே தெரியவில்லை. அந்தத் துயரத்தை ஜூனியர் விகடன் ஊடாக வெளிப்படுத்தி இருந்தார்!

பலகட்ட முயற்சிகளுக்குப் பின்னர் மிகவும் சிரமமப்பட்டு, இலங்கையில் வசித்து வரும் சாந்தனின் தாயார் மகேஸ்வரி அம்மாளைக் கண்டுபிடித்துத் தொடர்புகொண்டோம். தமிழகத்தில் இருந்துபேசுகிறோம்... என்றவுடனே அவரது குரலில் பரவசம் பரவ... திக்குமுக்காடிப் போனார். சட்டென்று அவருக்கு வார்த்தைகளும் வரவில்லை. பின்னர் தீராத அந்த சந்தோஷத்துடன் பேசினார்.

எங்கட பிள்ளைக்காக எங்களால போராட முடியலை.... உங்கட முதலமைச்சர் அம்மாவுக்கு நன்றியும் வணக்கமும். அங்க போராடும் அத்தனை தமிழ்நாட்டு மக்களுக்கும் எங்கட நன்றியைத் தெரிவிச்சுக்கொள்ளுறம். உங்கள் எல்லோரையும் தெய்வம் போல நாங்க நினைக்கிறம்! என்ற அவரிடம் சாந்தன் பற்றிக் கேட்டோம்!.

ஐயா! எங்கட பிள்ளை படிச்சுப்போட்டு... வெளிநாட்டுக்கு வேலைக்குப்போக ஆசைப்பட்டு அங்க வந்தார்.

பிள்ளைக்காக எங்கட சொந்தக் காணியை (நிலம்) ஈடு வெச்சு, பாஸ்போர்ட் எடுத்து, வெளிநாட்டுக்கு அனுப்பினம், ஆனா, ஐயா அங்க என்ன நடத்ததென்டே தெரியாது. எங்கட பிள்ளைய பிடிச்சு வச்சுக் கொண்டு இவ்வளவு காலம் வெச்சிருக்கிறாங்கள். அவரை விட்டுடுவாங்கள் என்ற நம்பிக்கையில தான் உறுதியோடு இருந்தம். ஆனா, திடீரென்டு இடி போல செய்தி வந்தது ஐயா.... தொடர்ந்து அழுகையை கட்டுப்படுத்த முடியாமல் 10 மாசம் சுமந்து பெத்த அந்தப் பிள்ளையை 20 வருடமாக பார்க்காமல் இருக்கிறம் ஐயா... 20 வருடத்தில் இடையில ஒருமுறை கூட பார்க்க முடியல. வேலைக்காக புறப்பட்டவர் தன்னோட தம்பி ஆசையா கேட்ட பலூரன் வாங்கித் தந்து போட்டுப் போனார். தங்கை மேல அவருக்கு ரொம்பப் பிரியம்... தங்கை சைக்கிள் ஓட்டி விழுந்து விட்டாள் எண்டு சொல்லி தானே அவளை ட்யூஷனுக்குக் கூட்டிக் கொண்டு போவார். அந்த அளவுக்குச் செல்லம்... புறப்பட்டுப் போனபோது கூட, தங்கையின் கையைப் பிடிச்சுக் கொண்டு, அம்மா பாவம்.... நம்ம வெச்சுக்கொண்டு கஷ்டப்படுறாங்க. வெளிநாட்டுக்குப் போய் அண்ணன் உழைச்சு பணம் அனுப்புறன். தம்பியும் நீயும் கவனமாப் படிச்சு, டாக்டரா வரவேணும். எண்டு கனக்கப் புத்திமதி சொல்லிக்கொண்டு போனார்.

அந்த பிள்ளையைத்தான் பிடிச்சுப் போட்டுட்டாங்கள்... எங்களால ஒண்டும் செய்ய முடியேல்ல. 20 வருடங்கள் ஓடிப்போயிட்டது. எங்கட பிள்ளை எப்படி இருக்கிறார்? அவருடைய



தோற்றம் எப்படி இருக்குது? காணக் கொடுத்து வைக்கலையே ஐயா... எங்கட குடும்பத்தைக் காப்பாத்துவார் எண்டு தான் வெளிநாட்டு வேலைக்காக அனுப்பி வச்சம். கடவுள் இப்படிச் செய்திட்டாரே?

என்ர கணவருக்கு 70 வயது. அவருக்கும் உடல் நிலை மோசம். ஒரு கண்பார்வை குறைஞ்சிட்டுது. அவரையும். பார்த்துக்கொண்டு, என்ர பிள்ளையைப் பார்க்க முடியாத நிலைமை.... ரெண்டு பேராலயும் தூரப்பயணம் செய்யமுடியாது. வறுமை இன்னொரு பக்கம்.... வயோதிப காலத்தில் சரியான கஷ்டம், துன்பம் ஐயா! கிடைக்கிற கூலித் தொழிலைச் செய்து, கஷ்டப்பட்டுத்தான் சீவியம் பண்ணிக்கொண்டு இருக்கிறம்.

என்ர கணவர் கடுமையான வேலைகளைச் செஞ்சுதான் நாளாந்தம் செயற்பட்டுக்கொண்டு இருந்தவர். இந்தியா ஊடாக வெளிநாட்டுக்கு வேலைக்குப் போக வந்த பிள்ளைய, அங்க பிடிச்சுப் போட்டத்தில் இருந்தே மனுஷருக்கு உடம்பு போச்சுது. இடையில ஒருமுறை (2000 தி.மு.க. ஆட்சியில்) பிள்ளைக்கு கருணை மனு போட்டதில நல்ல உத்தரவை நம்பிக்கையாக எதிர்பார்த்தோம். ஆனா, அதில பெரிய ஏமாற்றம்.

அப்போது முதலே அவருக்கு உடம்பு பிரச்சினையாகிப் போயிட்டது. தொடர்ந்து மருத்துவ சிகிச்சையால குணமாக்கிக் கொண்டு வாறம். இருந்தாலும் அவரால சகஜமா செயல்பட முடியாத நிலைமை...20 வருடமா விரதம் இருக்கிறதால என்னுடைய உடம்பும் மோசமாயிட்டது.

ஏற்கனவே, எங்களுக்கு உடல் நலப் பிரச்சினைகள், அதனால் செயற்பட முடியலை... வந்து பார்க்க முடியலை.

இன்னும் கொஞ்ச காலம்தான் உயிரோட இருப்போமென்டு இருக்கிறம். எங்கட பிள்ளைய பார்க்கவேணும். அவருக்கு என்ட கையால சாப்பாடு கொடுக்க வேணும்..... (அழுகை பீறிட்ட வருக்கு மேற்கொண்டு பேச முடியவில்லை)

அழுகையோடு தொடர்கிறார். என்டைக்கு எங்கட பிள்ளைக்கு சாப்பாடு ஊட்டுவேனோ அன்றைக்குத்தான் மூணுவேளை சாப்பிடுவேன். அதுவரைக்கும் ஒருவேளைச் சாப்பாடுதான்.. எந்தப் பிழையும் செய்யாமல் மாட்டிக் கொண்ட என்ர பிள்ளை, எங்களுக்கு வேணும் ஐயா... வேணும்!

**ஜூனியன் விகடன்**

என்று மனம் வெடித்து மீண்டும் அழத் தொடங்கியவரை, எம்மால் கட்டுப்படுத்த முடியவில்லை.

இந்த ஈழத் தமிழ் அப்பாவித் தாயின் ஓலத்துக்கு பலன் கிடைக்குமா?

**இரா.தமிழ்க்கனல்**

## புலிகளுக்கு உதவியதாக கைதான சிங்கள இளைஞர் மீதான குற்றச்சாட்டு வாபஸ்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் அமைப்பின் முக்கியஸ்தராகச் செயற்பட்டார் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு விசாரணைக்குள்ளாக்கப்பட்டிருந்த சிங்களவர் ஒருவர் மீதான குற்றச்சாட்டை சட்டமா அதிபர் வாபஸ் பெற்றுக் கொண்டுள்ளார்.

லலித் செனவிரட்ன என்ற இந்த சிங்கள இளைஞர் இராணுவம் ஒன்றை அமைத்து சட்டபூர்வமாகத் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தை கவிழ்ப்பதற்காக விடுதலைப் புலிகள் அமைப்புக்கு உதவியிருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

மே 2 ஆம் திகதி இந்த வழக்கு முதலில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதும் இவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என சட்டமா அதிபர் நீதிமன்றத்துக்கு அறிவித்திருந்தார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள லலித் பிரியங்கரா, நிஹால் செனவிரட்ன ஆகியோருக்கு எதிராகவும் இதேபோன்ற குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களை விடுதலை செய்வது தொடர்பான தீர்ப்பை எதிர் வரும் 17 ஆம் திகதி நீதிவான் அறிவிப்பார்.

(ஸ்ரீ-2)

## மனித உரிமைகளை பாதுகாப்பது குறித்து விசேட செயற்றிட்டம் அறிமுகம்

(கொழும்பு)

இலங்கையில் மனித உரிமைகளை பாதுகாப்பது தொடர்பில் விசேட செயற்றிட்டமொன்று அறிமுகம் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மனித உரிமைகளை உறுதிப்படுத்தும் நோக்கில் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவினால் தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச செயற்றிட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையின் பரிந்துரைகளுக்கு அமைவான முறையில் இந்த விசேட செயற்றிட்டம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் பங்கேற்கும் இலங்கைக்குழாம் நேற்றைய தினம் ஜெனீவா நோக்கிப் புறப்பட்டுச் சென்றுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி மனித உரிமைப் பேரவை அமர்வுகள் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முதல்நாள் அமர்வுகளில் அமைச்சர் சமரசிங்க இலங்கை மனித உரிமை நிலைமைகள் குறித்து விசேட உரையாற்றவுள்ளார்.

அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள விசேட மனித உரிமைப் பாதுகாப்பு செயற்றிட்டம் குறித்தும் இந்த உரையில் அமைச்சர் குறிப்பிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஸ்ரீ-2)

# சட்டவிரோத உண்டியல் கொடுக்கல் வாங்கல் நிறுவனம் பொலிஸாரால் முற்றுகை

(கொழும்பு)

புறக்கோட்டையில் சட்டவிரோதமான முறையில் இயங்கி வந்த உண்டியல் கொடுக்கல்-வாங்கல் நிறுவனமொன்றை பொலிஸார் சுற்றி வளைத்துள்ளனர். புறக்கோட்டை இரண்டாம் குறுக்குத்தெருவில் இந்த சட்டவிரோத உண்டியல் பரிமாற்று நிறுவனம் அமைந்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நிறுவனத்திலிருந்து 84 இலட்ச ரூபா கறுப்புப் பணம் மீட்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

இச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெஹிவளை, வத்தளை மற்றும் கம்பளை பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கறுப்புப் பணத்தின் ஊடாக கொடுக்கல்-வாங்கல்களைச் செய்வதற்காக இந்த உண்டியல் முறைமை பயன்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.


குறிப்பாக வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் இந்த முறையில் கொடுக்கல்-வாங்கல்களைச் செய்வதாக குறிப்பிடப்படுகிறது.

புறக்கோட்டை உள்ளிட்ட பல பிரதேசங்களில் மேலும் சட்டவிரோத உண்டியல் பரிமாற்று மையங்கள் காணப்படுவதாகவும் அவற்றை சுற்றி வளைக்கும் நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும் எனவும் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

(ஸ்ரீ-4)

# பயங்கரவாத அமைப்புகளுக்கு நாடுகளின் பொருளாதாரங்களை சீர்குலைக்கும் ஆற்றல்

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

பயங்கரவாத அமைப்புக்களுக்கு நாடுகளின் பொருளாதாரங்களை சீர்குலைக்கக் கூடிய ஆற்றல் காணப்படுவதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். நிதிச் சந்தைகள் மற்றும் தேசிய பொருளாதாரம் ஆகியவற்றின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்தக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் இந்த நிலைமை குறித்து உலக நாடுகளும் சிவில் அமைப்புகளும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கேம்பிரிட்ஸ் பல்கலைக்கழகத்தில் பொருளாதார குற்றச் செயல்கள் தொடர்பில் ஆற்றிய விசேட உரையின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாத அமைப்புக்கள் வெளிநாடுகளில் சட்டவிரோத நிதிக் கொடுக்கல்-வாங்கல்களில் ஈடுபடுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

(ஸ்ரீ-4)

# இந்திய போர்க் கப்பல் கொழும்புக்கு திடீர் பயணம்

(கொழும்பு)

இந்தியக் கடற்படையின் போர்கப்பலான ஐஎன்எஸ் குதார் கொழும்புத்துறைமுகத்துக்கு திடீர் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

நேற்று முன்தினம் கொழும்புத்துறைமுகத்துக்கு வந்த இந்தியக் கடற்படைப் போர்க்கப்பலுக்கு கடற்படையினர் பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளித்துள்ளனர்.

91.1 மீற்றர் நீளம் கொண்ட இந்தப் போர்க் கப்பலில் 25 அதிகாரிகளும் 160 கடற்படையினரும் கொழும்பு வந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இன்றுவரை இந்தியப் போர்க்கப்பல் கொழும்பிலேயே தரித்து நிற்கும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்தமான் கடற்பகுதியில் வேவு பார்த்த சீன வேவுக் கப்பல் ஒன்றை இந்தியக் கடற்படை துரத்திச் சென்ற போது கொழும்புத் துறைமுகத்தில் அடைக்கலம் தேடியதாக கடந்தவாரம் தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஆனால், வேவு பார்க்கும் சிறப்புக் கருவிகள் பொருத்தப்பட்ட எந்தவொரு சீனக் கப்பலும் கொழும்புத்துறைமுகத்துக்குள் பிரவேசிக்கவில்லை என்று கடற்படை கூறியருந்தது. இந்நிலையிலேயே இந்திய கடற்படையின் போர்க்கப்பல் திடீரென கொழும்புக்கு பயணம் மேற்கொண்டுள்ளது குறிப்பிடத் தக்கது.

(ஸ்ரீ-2)

# தொழிற்பயிற்சி அதிகார சபையால் தொழிற்பயிற்சி நெறிகள் ஆரம்பம்

(பூநகரி)

பூநகரி உதவி அராசாங்க அதிபர் பிரிவில் நைற்றா தேசிய தொழில் பறிச்சி அதிகார சபையால் வெவ்வேறுபட்ட 5 நிலையங்களில் தொழிற் பயிற்சிகள் ஆரம்பமாகியுள்ளன.

பள்ளிக்குடா கிராம சேவகர் பிரிவில் கடற்றொழிலாளர்களின் நன்மை கருதி வெளியிணைப்பு இயந்திர திருத்தல் பயிற்சியும் ஜெயபுரம் கிராம சேவகர் பிரிவில் கணனி திருத்த வேலை பயிற்சியும் மகளிருக்கான தையற் பயிற்சியும் தம்பிராய் கிராம சேவகர் பிரிவில் வீட்டு மின்னிணைப்பு பயிற்சியும் ஆரம்பமாகியுள்ளது.

இப்பயிற்சியில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்கள் பகுதி கிராம சேவகர் ஊடாக ஒரு வாரத்தினுள் இப்பயிற்சியில் இணைந்து கொள்ள முடியுமென பயிற்றுவிப்பாளர்களால் அறிவிக்கப்படுகின்றது.

மூன்று மாதகாலத்தைக் கொண்ட இப் பயிற்சியில் பயிலுநர்களுக்கு மாதாந்தம் 4 ஆயிரம் ரூபா ஊக்குவிப்பு கொடுப்பனவாக வழங்கப்படுவதுடன் பயிற்சி முடிவில் சான்றிதழும் தொழில்சார் உபகரணங்களும் வழங்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2-84)

# உடுப்புப்பை கண்டெடுப்பு

(மல்லாவி)

வவுனியா சின்னப் புதுக்குளம் என்.குகதாசன் என்பவரின் உடுப்புப்பை ஒன்று மாங்குளம் ஏ9 வீதியில் மாங்குளம் மகாவித்தியாலய மாணவர்களினால் கண்டெடுக்கப்பட்டு பாடசாலை அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அத்தோடு இவ் உடுப்புப் பையுடன் வாகன காப்புறுதி பத்திரம், வாகன் வழியனுமதிபத்திரம், வாகன பதிவுப் புத்தக சான்றிதழ் ஆகியனவும் காணப்பட்டுள்ளன.

எனவே, உரியவர்கள் தகுந்த ஆதாரத்தினைக்காட்டி பாடசாலை நாட்களில் வந்து பெற்றுக் கொள்ளலாமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-12-15)

# கண்பார்வையற்றோருக்கு சமூக அந்தஸ்தையே வழங்க வேண்டும்

## பார்வையற்ற மக்கள் சம்மேளன பொருளாளர் வேண்டுகோள்

(கொழும்பு)

கண்பார்வையற்றோருக்கு காட்டப்படும் அனுதாபத்துக்கு பதிலாக சமூக அந்தஸ்தையே அனைவரும் வழங்க வேண்டும் என இலங்கை கண்பார்வை இழந்த மக்கள் சம்மேளனத்தின் பொருளாளர் நிஷாந் மென்டிஸ் வேண்டுகோள் விடுத்தார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போதே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

கண்பார்வை இழந்தவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் நோக்கமாக இந்த ஊடகவியலாளர் சந்திப்பு இடம் பெற்றது. அவர் தொடர்ந்து தெரிவித்த கருத்துக்கள் வருமாறு,


பார்வை இழந்தவர்களாகிய நாம் இன்று ஏனையவர்களையும் போன்று சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றோம். எனவே, எங்கள் மீது கருணை காட்டுவதற்குப் பதிலாக எங்களுக்கு சமூக அந்தஸ்தையே வழங்க வேண்டும். வீட்டிலிருந்தே இந்த அனுதாப நோய் தொற்றிக் கொள்கின்றது. அது தவிர்க்கப்பட வேண்டும்.

அன்பு தேவைதான். ஆனால், அதற்காக அதனை அனுதாபமாக மாற்றிக்கொள்ளக் கூடாது. அத்துடன் எங்களுடன் ஒட்டிப்பிறந்த ஒரு சகோதரனாக வருகின்றது வறுமை. அதுவும் எங்களை சமூகத்திலிருந்து வேறுபடுத்தவே ஏதுவாக இருக்கின்றது.

எமது கல்வி மேம்பாட்டுக்காக சிறந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பாடசாலைகளில் பார்வை இழந்தவர்களுக்கென விசேட பிரிவுகள் அமைக்கப்பட்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்க ஒன்றாகும். எனினும் அதில் கற்பிப்பதற்கு அந்த விடயத்தில் தேர்ச்சி பெற்றவர்கள் போதாத நிலையிலேயே இருக்கின்றமை கவலைக்குரிய விடயமாகும்.

தொழில் வழங்கும் நடவடிக்கைகளின் போது பார்வையிழந்தவர்கள் என எம்மை முற்றாக ஒதுக்கி விடாமல் ஒரு குறிப்பிட்ட வீதமளவில் எங்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும்.

(ஸ்ரீ-4)



1985 ஆண்டிற்கு முன்னர் காரைநகர் கடற்படை முகாம் விஸ்தரிப்பின் போது பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு அண்மையில் காரைநகர் கலா நிதி தியாகராஜா மத்திய மகாவித்தியாலயத்தில் வைத்து அண்மையில் வழங்கப்பட்டது. இதில் காரைநகர் உதவி அசாங்க அதிபர் இ.த. ஜெயசீலன் தலைமையுரையாற்றுவதையும் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவு வழங்குவதையும் அருகில் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் பிரதி அமைச்சர் ஸ்ரீபால ஹெமலத், காணி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் அசோக பீரிஸ் ஆகியோர் நிற்பதையும் கலந்து கொண்ட மக்களையும் படங்களில் காணலாம்.

# பயங்கரவாதிகளின் அச்சுறுத்தலுக்கு அரசு ஒருபோதும் அடிபணியாது

## சிதம்பரம் தெரிவிப்பு

(புதுடில்லி)

நாட்டின் அமைதியையும் ஒற்றுமையையும் சீர்குலைப்பதே டில்லி குண்டு வெடிப்பின் நோக் கம். பயங்கரவாதிகளின் அச்சுறுத்தலுக்கு அரசு ஒரு போதும் அடிபணியாது. பயங்கரவாத செயல்களில் ஈடுபடுவோரை இனங்கண்டு அவர்களை சட்டத்தின் முன் நிறுத்த எல்லாவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என மத்திய அரசு தெரிவித்தது.

டில்லி உயர் நீதிமன்றில் சக்திவாய்ந்த குண்டு வெடித்ததால் காலையில் இருந்தே டில்லியை பதற்றம் தொற்றிக் கொண்டது.

லோக்சபா நேற்று முன்தினம் காலை கூடியதும் பா.ஜ.க. மூத்த தலைவர் அத்வானி எழுந்து மிகவும் துக்ககரமான சம்பவம் நிகழ்ந்துள்ளது. டில்லி உயர்நீதிமன்றில் குண்டு வெடித்து பலர் உயிரிழந்து விட்டனர். பாராளு மன்றில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தொலைவில் நடந்துள்ள சம்பவம் குறித்து உள்துறை அமைச்சர் அறிக்கை அளிக்க வேண்டும். எனவே, கேள்வி நேரத்தை இரத்து செய்ய வேண்டும் என்றார்.

இதையடுத்து பேசிய உள்துறை அமைச்சர் சிதம்பரம் எனக்கு கால அவகாசம் தேவைப்படுகிறது. முக்கால்மணிநேரத்துக்கு முன்னர் தான் சம்பவம் நிகழ்ந்துள்ளது. தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன என்றார்.உடன் பாராளுமன்ற விவகார அமைச்சர் பன்சால் எழுந்து பகல் 12.30 மணிக்கு அறிக்கை தாக்கல் செய்யப்படும் என்றார். இதையடுத்து சபை அலுவல்கள் ஒத்திவைக்கப்பட்டன.

சபை மீண்டும் கூடியதும் அமைச்சர் சிதம்பரம் அறிக்கை தாக்கல் செய்து பேசியதாவது, டில்லி உயர் நீதிமன்றின் நான்காவது மற்றும் ஐந்தாவது நுழைவாயில்களுக்கு இடையில் சக்திவாய்ந்த குண்டு வெடித்துள்ளது. அங்கிருக்கும் வரவேற்பு அறையின் அருகில் இச்சம்பவம் நடந்துள்ளது. நீதிமன்றினுள் போவோருக்கு நுழைவுச்சீட்டு அளிக்கப்படும் வரவேற்பு அறைக்கு வெளியில் உள்ள கார் தரிப்பிட இடத்தில் குண்டு வெடித்துள்ளது. சூட்கேசில் வைத்திருந்த குண்டு வெடித்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. இதுவரை கிடைத்துள்ள தகவல்படி 9 பேர் வரை உயிரிழந்துள்ளனர். 47 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பாடுகாயமடைந்த பலரும் ஆர்.எம்.எல். வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். தவிர எய்ம்ஸ் மற்றும் அருகில் உள்ள வைத்தியசாலைகளிலும் சிலர் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சிறிய அளவில் காயமடைந்தவர்களுக்கு உயர்நீதிமன்றில் உள்ள வைத்தியசாலையிலேயே சிகிச்சை அளிக்கப்பட்டது.

நாட்டின் அமைதியையும் ஒருமைப்பாட்டையும் ஸ்திரத்தன்மையையும் சீர்குலைக்க வேண்டுமென்பதே பயங்கரவாதிகளின் நோக்கமாகவுள்ளது. பயங்கரவாத நடவடிக்கைகளை எந்தக்காரணத்திற்காகவும் நியாயப்படுத்தி விடவே முடியாது. இன்றைய குண்டு வெடிப்பு சம்பவத்திற்கு அரசு கடும் கண்டனத்தை தெரிவிக்கிறது. (ஸ்ரீ-4)

# திகார் சிறையில் வாடும் 5 எம்.பிக்கள்

(புதுடில்லி)

ஊழல் வழக்கில் சிக்கி டில்லி திகார் சிறையில் இதுவரை 5 எம்.பிக்கள் கம்பி எண்ணிக் கொண்டிருக்கின்றனர்.

இவர்களில் மூன்றுபேர் லோக்சபா எம்.பிக்கள், 2 பேர் ராஜ்யசபா எம்.பிக்கள் ஆவர்.

கடந்த 2010 ஆம் ஆண்டு பணமோசடி மற்றும் மின்துறையில் ரூ 400 கோடி ஊழல் வழக்கில் அமுலாக்கத்துறையினரால் கைது செய்யப்பட்ட ஜார்க்கண்ட் மாநில முன்னாள் முதல்வரும் தற்போது லோக்சபா எம்.பி.யான மதுகோடா கடந்த பெப்ரவரி 11 ஆம் திகதி சி.பி.ஐயால் கைது செய்யப்பட்ட 2 ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கில் தொடர்புடைய முன்னாள் மத்திய தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் ராசா, இதே வழக்கில் கடந்த மே மாதம் 20 ஆம் திகதி கைது செய்யப்பட்ட கனிமொழி, கொமன் வெல் ஊழல் வழக்கில் கடந்த மே 4 ஆம் திகதி கைது செய்யப்பட்ட சுரேஸ் கல்மாடி, தற்போது எம்.பிக்களுக்கு இலஞ்சப்பணம் கொடுத்த வழக்கில் கைது செய்யப்பட்ட அமர் சிங் என மொத்தம் 5 எம்.பிக்கள் திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

பாரதச் செய்திகள்

# குண்டு வெடிப்பு எதிரொலி டில்லியில் பலத்த பாதுகாப்பு



(புதுடில்லி)

டில்லி உயர்நீதிமன்றில் நடந்த பயங்கரத்தை தொடர்ந்து டில்லி நகர் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக டில்லி மெட்ரோ புகையிரத திட்டம் செயல்படுத்தப்பட்ட இடங்களில் எல்லாம் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

வெடிகுண்டு நிபுணர்களும் பல்வேறு இடங்களில் சோதனை நடத்தினர். பாதுகாப்புப் பணிக்கு மத்திய தொழிலக பாதுகாப்புப் படையினர் பயன்படுத்தப்பட்டுள்ளனர். மக்கள் அதிகம் கூடும் இடங்களில் எப்போதும் இல்லாத வகையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

முக்கிய இடங்களில் சூட்கேஸ் தென்பட்டாலே பொலிஸார், சம்பந்தப்பட்ட நபரை பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டுவந்து சோதிக்காமல் விடுவதில்லை, புகையிரத நிலையங்கள், பேருந்து தரிப்பிடங்கள் போன்றவற்றில் பயணிகளின் அனைத்து உடைமைகளும் ஸ்கேனிங் கருவி கொண்டு சோதிக்கப்படுகிறது .(ஸ்ரீ-2)

# தயாநிதிக்கு எதிராக விரைவில் முதல் தகவல் அறிக்கை

(புதுடில்லி)

2ஜி அலைக்கற்றை வழக்கில் முன்னாள் மத்திய அமைச்சர் தயாநிதிக்கு எதிராக விரைவில் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்படும் என மத்திய புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளது.

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டில் முறைகேடு தொடர்பாக உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின்படி மத்திய புலனாய்வுத்துறை (சி.பி.ஐ) விசாரணை நடத்தி வருகிறது. இந்த விவகாரத்தில் ஏர்செல் நிறுவனத்தை முன்பு நிர்வகித்து வந்த சிவசங்கரன் சி.பி.ஐ முன்பு ஆஜராகி தயாநிதி மாறனுக்கு எதிராக வாக்குமூலம் அளித்தார்.

அப்போது தயாநிதி மாறனும் கலாநிதி மாறனும் தன்னை மிரட்டினர் என்றும் மேக்சிஸ் நிறுவனத்திடம் ஏர்செல்லை விற்றுவிட வேண்டும் என்றும் தயாநிதி நிர்ப்பந்தப் படுத்தினார். இதனால் வேறு வழியில்லாமல் விற்றதாகவும் தெரிவித்திருந்தார்.

ஏர்செல் முன்னாள் தலைவர் சிவசங்கரனை மிரட்டியது மலேசியாவின் மேக்சிஸ் நிறுவனத்திற்கு ஏர்செல் விற்கப்பட்டவுடன் அதற்கு 2 ஜி அலைக்கற்றை உரிமங்களை வழங்கியது ஆகியவை தொடர்பாக தயாநிதி மாறனுக்கு எதிராக ஆதாரம் இல்லை என்று கடந்த செப்டெம்பர் முதலாம் திகதி உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அறிக்கையில் சி.பி.ஐ. தெரிவித்திருந்தது.

இந்நிலையில் சி.பி.ஐ. முறையாக, சரியாக, நியாயமாக விசாரணை நடத்தவில்லை என்று உச்ச நீதிமன்றத்தில் ஒரு மனுவை மூத்த வழக்கறிஞர் பிசாந்த் பூஷண் தாக்கல் செய்தார்.

அதைத்தொடர்ந்து சி.பி.ஐ. தனது முந்தைய நிலையிலிருந்து மாறுபட்ட நிலையை இப்போது எடுத்துள்ளது.

இது குறித்து சி.பி.ஐ .தரப்பில் கூறுகையில், நாங்கள் தயாநிதி மாறன் நிரபராதி என்று கூறவில்லை. இந்த மாத இறுதியில் இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

சிவசங்கரன் தலைமையிலான ஏர்செல் நிறுவனத்துக்கு உரிமம் வழங்க தயாநிதி மாறன் ஏன் தாமதம் செய்தார் என்பது குறித்து விசாரித்து வருகிறோம். இது வேண்டுமென்றே செய்யப்பட்ட தாமதம் என்று ஆராய்ந்து வருகிறோம் என்று தெரிவித்துள்ளது.

ஏர்செல்லை மேக்சிஸ் வாங்கிய பின்னர் அந்த நிறுவனத்திற்கு 2 ஜி அலைக்கற்றை உரிமங்களை படுவேகமாக தயாநிதி மாறன் வழங்கியதாகவும் அதற்குப் பிரதிபலனாக சன் தொலைக்காட்சி குழுமத்தில் மிகப் பெரிய முதலீட்டை மேக்சிஸ் செய்தது என்பதும் குற்றச்சாட்டாகும். இதன் விளைவாகவே அவரது அமைச்சர் பதவி பறிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# வேலூர் சிறைக்குள் நுழைந்ததும் கண்ணீர் விட்டு கதறியழுத நளினி!



புழல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நளினி வேலூர் சிறைக்கு மாற்றப்பட்டார். தனது கணவன் முருகன் இருக்கும் வேலூர் சிறைக்குள் நுழைந்ததும் நளினி கண்ணீர் விட்டார். ராஜீவ் காந்தி கொலை வழக்கில் நளினி அவரது கணவன் முருகன், சாந்தன் மற்றும் பேரறிவாளன் ஆகியோருக்குத் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது.

இவர்களில் நளினியின் தண்டனை முன்னாள் முதல்வர் கருணாநிதி மற்றும் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி ஆகியோருடைய பரிந்துரையின் பேரில் ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது.

இதையடுத்து கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார் நளினி. சில மாதங்களுக்கு முன்பு அவர் பாதுகாப்புக் கருதி புழல் சிறைக்கு மாற்றப்பட்டார்.

இந்நிலையில் முருகன் உள்ளிட்ட மூவரின் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டு அவர்களைத் தூக்கிலிட திகதி குறிக்கப்பட்டது. ஆனால், சென்னை உயர்நீதிமன்றம் தூக்கு தண்டனையை நிறைவேற்ற இடைக்காலத் தடை விதித்துள்ளது.

இந்நிலையில் தனது கணவரை பார்க்க அனுமதிக்க வேண்டும் என்று கோரி சிறை அதிகாரிகளிடம் விண்ணப்பித்தார். இதனை சிறைத்துறை அதிகாரிகள் ஏற்றுக் கொண்டனர். இதுகுறித்து அரசின் கருத்தை சிறை அதிகாரிகள் கோரியிருந்தனர். அரசும் இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டது.

இதையடுத்து நேற்று முன்தினம் புழல் சிறையில் இருந்து நளினி வேலூர் சிறைக்கு மாற்றப்பட்டார். காலை 8 மணி அளவில் பலத்த பாதுகாப்புடன் வேலூர் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு மகளிர் சிறையில் அவர் அடைக்கப்பட்டார்.

வேலூர் சிறைக்குள் நுழைந்ததும் நளினி கண்ணீர் விட்டு கதறினார் என்று சிறை அதிகாரிகள் தெரிவித்தனர்.வேலூர் சிறை அதிகாரிகள் தன்னை உணவில் விஷம் கலந்து கொல்லப் பார்ப்பதாகவும் மற்ற பெண் கைதிகளை தன்னுடன் பேச அனுமதிப்பதில்லை என்றும் நளினி புகார் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து சிறை அதிகாரிகள் நளினியின் அறையை சோதனை செய்ததில் கையடக்கத்தொலைபேசி மற்றும் சிம்கார்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன.

இதைத்தொடர்ந்து கடந்த ஆண்டு ஜூன் மாதம் நளினியை வேலூரில் இருந்து புழல் சிறைக்கு மாற்றினார்கள். (ஸ்ரீ-2)

# சோனியாகாந்தி நாடு திரும்பினார்



(சென்னை)

சிகிச்சைக்காக கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் அமெரிக்கா சென்றிருந்த இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி நாடு திரும்பியுள்ளார்.

தனது மகள் பிரியங்கா காந்தி வதேராவுடன் நேற்று அதிகாலை 3 மணியளவில் சோனியா காந்தி புதுடில்லியை வந்தடைந்தார்

64 வயதான சோனியா காந்திக்கு அமெரிகாவிலுள்ள வைத்தியசாலையொன்றில் கடந்த ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது .

எந்தநோய் தொடர்பாக இந்த சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது என்பது தொடர்பில் அறிவிக்கப்படவில்லை.

(ஸ்ரீ-2)

# ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டால் தமிழர்களுக்கே ஆபத்து

## எச்சரிக்கிறார் அமைச்சர் சம்பிக்க

ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமை பேரவையின் அமர்வில் இலங்கைக்கு எதிராக ஏதேனும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டால் அது உள்நாட்டில் வாழும் தமிழர்களுக்கே ஆபத்தாக அமையும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

எனவே புலம்பெயர் தமிழர்களும் சம்பந்தப்பட்ட நாடுகளும் இலங்கைக்கு எதிராக செயற்படுவதை உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் பெரும்பான்மையான ஆதரவு இலங்கைக்கு உள்ளது. ஆனாலும் அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகளின் போலியான பிரசாங்களும் குற்றச்சாட்டுகளும் இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு அழுத்தமாக அமைந்துள்ளன.

எவ்வாறாயினும் இந்தியாவின் நிலைப்பாடு விசேடமாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க தொடர்ந்தும் கூறுகையில்,

மனித உரிமைகள் தொடர்பான குற்றச்சாட்டுகளை அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் இலங்கைக்கு எதிராக சுமத்தி வருகின்றன.

ஆனால் அமெரிக்காவின் மனித உரிமை மீறல்களை பட்டியலிட்டால் எண்ணிலடங்காது.

இவற்றிற்கெதிராக ஐ.நா.விசாரணைகளை முன்னெடுக்காது உலகத்திலேயே முதன்மையாக காணப்பட்ட புலிப் பயங்கரவாதிகளுக்கு எதிரான போரில் வெற்றி கொண்ட எமது இராணுவத்திற்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றது.

குறிப்பாக எதிர்வரும் 12 ஆம் திகதி ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ.நா.மனித உரிமைகள் சாசன மாநாட்டில் இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணைக்கான தீர்மானத்தை மேற்கொள்ள குறிப்பிட்ட சில நாடுகள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

இவ்வாறான ஒரு விசாரணைக்கு அனுமதி வழங்கப்படுமாயின் அது சர்வதேச பயங்கரவாதத்திற்கு சாதகமாக அமைந்து விடும்.

எனவே சர்வதேச சமூகம் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும். மேற்குலக நாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழர்கள் இலங்கைக்கு எதிராக செயற்படும் போது அதன் விளைவுகள் இலங்கை தமிழர்களையே பாதிக்கும்.

கடந்த 30 ஆண்டு காலத்தில் முஸ்லிம் சமூகம் எவ்வாறு முன்னேறியுள்ளது என்பதை சற்று அவதானிக்க வேண்டும்.

தமிழர்கள் இலங்கையில் பின்னடவுகளை காண்பதற்கு அவர்களின் பிரிவினைவாத கொள்கைகளே காரணம்.



எனவே முன்னைய கால கட்டத்திற்கு மீண்டும் தமிழ் மக்களை தள்ளிவிட்டு ஆபத்துக்களை ஏற்படுத்த புலம் பெயர் தமிழர்களும் சர்வதேச சமூகம் முயற்சிக்க கூடாது. ஐ.நா.மனித உரிமை பேரவையில் ள்ள 46 நாடுகளின் ஆதரவு இலங்கைக்கு உண்டு. எனவே அச்சம் கொள்ளத் தேவையில்லை.

கடந்த 2009 ஆம் ஆண்டிலும் இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணைகளுக்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போது அவை தோல்வியடையச் செய்யப்பட்டன என்றார். (ஶ்ரீ-2)

## விவசாயக் கண்காட்சியையொட்டி நடைபெற்ற விநாடிவினாப் போட்டியில் வெற்றியீட்டியோர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் இணைந்த வளாகத்தில் கடந்த 5 ஆம் திகதி விவசாயக் கண்காட்சி ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இதில் பாடசாலை மாணவர்களுக்கிடையில் விநாடி வினாப் போட்டிகள் மூன்று சுற்றுக்களாக நடைபெற்று வருகின்றது.

கடந்த 6 ஆம் திகதி நடைபெற்ற இரண்டாம் நாள் நிகழ்வில் முதலாவது சுற்றில் சாவகச்சேரி பெண்கள் கல்லூரி 45 புள்ளிகளையும் யா/நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை 25 புள்ளிகளையும் பெற்றன.

இதில் சாவகச்சேரி பெண்கள் கல்லூரி வெற்றி பெற்றது.

இரண்டாவது சுற்றில் முல்லைத்தீவு உடையார் கட்டு மகா வித்தியாலயம்35 புள்ளிகளையும், முல்லைத்தீவு பாலிநகர் மகா வித்தியாலயம் 30 புள்ளிகளையும்பெற்றது.

இதில் முல்லைத்தீவு உடையார் கட்டு மகா வித்தியாலயம் வெற்றி பெற்றது.

மூன்றாவது சுற்றில் மாங்குளம் மகா வித்தியாலயம் 45 புள்ளிகளையும் முல்லைத்தீவு யோகபுரம் மகா வித்தியாலயம் 30 புள்ளிகளையும் பெற்றன.

இதில் மாங்குளம் மகா வித்தியாலயம் வெற்றி பெற்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாம் நாள் நிகழ்வில் முதலாவது சுற்றில் யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் 63 புள்ளிகளையும் யா/இந்து மகளிர் கல்லூரி 33 புள்ளிகளையும் பெற்றன.

இதில் யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் வெற்றி பெற்றது.

இரண்டாம் சுற்றில் யா/கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம் 60 புள்ளிகளையும் யா/விக்டோரியாக் கல்லூரி 25 புள்ளிகளையும் பெற்றன.

இதில் யா/கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம் வெற்றி பெற்றது.

நேற்றைய தினம் நடைபெற்ற நான்காம் நாள் நிகழ்வில் முதலாவது சுற்றில் யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம் 82 புள்ளிகளையும் இளவாலை சென் கென்றிஸ் கல்லூரி 63 புள்ளிகளையும் பெற்றன.

இதில் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

இரண்டாவது சுற்றில் யா/கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை 35 புள்ளிகளையும் யா/பூநகரி கறுக்காதீவு மகா வித்தியாலயம் 35 புள்ளிகளையும் பெற்றன.

இரு அணிகளும் சம புள்ளிகள் பெற்றுக் கொண்டன.

பாடசாலை மாணவர்களுக்கான விநாடி வினாப் போட்டிகள் இறுதி நாள் வரை நடைபெற இருப்பதனால் கண்காட்சியினைப் பார்வையிட வரும் பாடசாலை மாணவர்கள் விநாடி வினாப் போட்டியில் பங்கேற்குமாறு பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் அறிவித்துள்ளார். (ஶ்ரீ-2)

## லிபியாவை விட்டு தப்பியோடவில்லை



### கடாபி மறுப்பு

(டிரிபோலி)

லிபியாவில் ஜனாதிபதி கடாபிக்கு எதிராக போராடி வரும் புரட்சிப் படையினர் தலைநகரம் டிரிபோலியை கைப்பற்றினார்கள். இதையடுத்து கடாபி டிரிபோலி நகரில் இருந்து தப்பி ஓடினார். அவர் இப்போது எங்கு இருக்கின்றார் என்று தெரியவில்லை.

கடாபியின் சொந்த ஊர் இன்னும் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றது. அங்குதான் கடாபி பதுங்கி இருக்க வேண்டும் என்று கருதப்பட்டது. இந்த நிலையில் 2 நாட்களுக்கு முன்பு பக்கத்து நாடான நைஜருக்கு லிபியாவில் இருந்து ஏராளமான வாகனங்கள் நள்ளிரவில் அணிவகுத்து சென்றன.


இந்த வாகனம் ஒன்றில் கடாபியும் அவரது மகனும் நைஜருக்கு தப்பி சென்றுவிட்டதாக கூறப்பட்டது. ஆனால், இதை நைஜர் நாட்டு வெளியுறவு மந்திரி முகமதுபசும் மறுத்தார்.

கடாபியோ அல்லது அவரது மகனோ எங்கள் நாட்டுக்குள் வரவில்லை. ஆனால், அதிகாரிகளும் அகதிகளும் வந்துள்ளனர் என்று கூறினார். நைஜர் வெளியுறவு மந்திரி தவறான தகவலை தெரிவிப்பதாக கருதப்பட்டது. இந்த நிலையில் கடாபியே நான் நைஜர் நாட்டுக்கு தப்பிச் செல்லவில்லை என்று கூறியிருக்கின்றார்.

சிரிய நாட்டு தொலைக்காட்சி நிலையத்துக்கு கையடக்கத் தொலைபேசியில் தொடர்பு கொண்ட கடாபி, நான் இப்போதும் லிபியாவில்தான் இருக்கின்றேன். எந்த நாட்டுக்கும் தப்பி ஓடும் எண்ணம் இல்லை என்றும் கூறினார்.

மேலும் அவர் கூறும் போது,

நான் தற்போது பின்வாங்கி இருப்பது போர் தந்திரமாகும். நாங்கள் புரட்சிப் படை மட்டுமல்லாது அமெரிக்க கூட்டுப் படையையும் தோற்கடிப்போம். லிபியாவை யாரும் கைப்பற்ற முடியாது என்றார். (ஶ்ரீ-2)





காரைநகர் பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் யா/தியாகராஜா மகா வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண அளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உட்பட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்.)

ஏர் நடக்குமெனில் இயலிசை நாடகம் நடக்கும்.
பார் நடக்கும் பசி நடக்க மாட்டாதே! -கம்பர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# டெங்கு நோயை கட்டுப்படுத்த வர்த்தகர்கள் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும்

## யாழ்.வணிகர் கழகம் கோரிக்கை

யாழ்.மாவட்டத்தில் தற்பொழுது டெங்கு காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருவதால் இந் நோயைக் கட்டுப்படுத்த அனைத்து வர்த்தக உரிமையாளர்களும் வர்த்தக ஊழியர்களும் தங்களது ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் வழங்க வேண்டுமென யாழ்.வணிகர் கழகம் கேட்டுக் கொள்கின்றது.

வர்த்தக நிலையத்தில் பாவிக்கப்படாத பொருட்கள் யாவும் அகற்றப்பட்டு தினமும் சுத்தமாக அவ்விடத்தை வைத்துக் கொள்ள வேண்டுமெனவும் தண்ணீர் பீலிகளில் நீர் தேங்காதவாறும் மற்றும் தண்ணீர் தேங்கி நிற்க கூடிய சகல பொருட்களையும் உடனடியாக அகற்றப்பட்டு தண்ணீர் எந்த வகையிலும் தேங்காதவாறும் அத்துடன் அருகிலுள்ள கழிவு நீர்வடிகால்களில் தேங்காதவாறும் விசேடமாக உணவகங்கள் கழிவு நீரை முறைப்படி அகற்றியும் டெங்கு நுளம்புகள் பெருகாதவாறும் பார்த்துக் கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கின்றார்கள்.

ஆகவே வர்த்தக நிலைய உரிமையாளர்களும் அதன் ஊழியர்களும் வர்த்தக நிலையத்தையும் அதன் சுற்றாடலையும் துப்புரவு செய்து அதன் கழிவுகளை . வாகனங்கள் மூலம் வெளியே அகற்ற வேண்டும் அல்லது யாழ்.மாநகரசபை குப்பை அகற்றும் வாகனங்கள் வரும்போது கழிவுகளை அவர்களிடம் கையளிக்க வேண்டுமெனவும் யாழ்.மாநகரசபை சுகாதார பிரிவு அலுவலர்கள் மற்றும் சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள் கடைகளுக்கு விஜயம் செய்து கண்காணிக்க இருப்பதனால் தங்கள் வர்த்தக நிலையத்தையும் அதன் சுற்றாடலையும் சுத்தமாக வைத்திருக்குமாறும் குடாநாட்டு மக்களிற்கு மேலும் டெங்கு நோய் பரவாமலும் அதனை கட்டுப்படுத்துவதற்கு பூரண ஒத்துழைப்பை வர்த்தகர்கள் வழங்கவேண்டுமென்றும் யாழ்.வணிகர் கழகம் வர்த்தக நிலைய உரிமையாளர்களை கேட்டுள்ளது.

# றோசாச் செடிக்கு ஓமவாட்டர் பருக்கும் பண்பாடு ஒழிவது எந்நாளோ!

விவசாயக் கண்காட்சியைப் பார்ப்பதற்காக நேற்றையதினம் திருநெல்வேலி விவசாயப் பயிற்சி நிலையத்திற்குச் சென்றிருந்தோம்.

அருமையான ஏற்பாடுகள். விவசாயத்தின் மீது, வீட்டுத்தோட்டத்தின்பால் ஆர்வத்தை தூண்டக் கூடிய வகையில் கண்காட்சி ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. ஏகப்பட்டோர் அந்தக் கண்காட்சியை பார்த்துக் கொண்டிருந்தனர்.

உரைப்பைகளில் மண்ணையிட்டு, தக்காளி, கத்தரி, மிளகாய், உற்பத்தி செய்யப்பட்டிருந்ததை பார்த்த எவரும் மகிழாமல் இருக்க முடியாது.

வீட்டுத் தோட்டம் செய்வதற்கு நிலம் போதாது என குறைபடுவோருக்கு இந்த உரைப்பை முறை அவர்களை ஆற்றுப்படுத்தியிருக்கும் என்ற நினைப்பு.

கண்காட்சியின் நுழைவாயில் அதன் இருமருங்கிலும் வற்றாளைக்கொடியின் இளம் பச்சை அழகு, இவற்றையெல்லாம் ரசித்து-மகிழ்ந்து கொண்டு நகர்ந்த போது ஒரு குறிப்பிட்ட இடத்தில் மிகப்பெரும் மக்கள் கூட்டம்.

மா, தேசி, பலா, தோடை, மாதுளை, தென்னை இவற்றின் விற்பனை, களைகட்டியி[illegible]கின்றது என்ற நினைப்பில் அங்கு சென்று பார்த்த போது, கண்டகாட்சி திகைக்க வைத்தது.

அந்த றோசாக்கன்று என்ன விலை, இந்த மினி எக்ஸ்சோராவின் விலை குறையாதா? இப்படி ஒவ்வொருவரும் விலை கேட்பதும் ஆர்வத்தோடு வாங்குவதுமாக இருந்தனர். ஒற்றைப்பூ பூத்த ஒரு சிறிய பூங்கன்றின் விலை நானூறு ரூபாய் என்று கூறினார்கள்.

அந்தப் பூங்கன்றை வேண்டினால் ஒன்று இரண்டு தினங்கள் மட்டுமே அந்த பூ எங்களோடு உயிர்வாழும். அடுத்த பூ பூப்பதற்குள் அந்த பூஞ்செடியின் ஆயுள் முடிந்து விட்டாலும் அதிசயப்படுவதற்கு இடமில்லை.

நிலைமை இதுவாக இருக்கும் போது முண்டியடித்து றோஸ் செடியும், மினி எக்ஸ்சோராவும் இதர பூங்கன்றுகளையும் வேண்டுவதை பார்த்த போது யாழ்ப்பாணத்துக் குறோட்டன் கலாசாரத்தை இல்லாதொழிக்கவே முடியாது என்று எண்ணத் தோன்றியது.

இந்த வேதனையோடு சுற்றிப்பார்க்கும் பணியில் ஈடுபட்ட வேளை, திருநெல்வேலி விவசாயப் பயிற்சி நிலையத்தின் விற்பனைப் பகுதிக்குச் சென்றோம்.

அங்கு அரசினால் உறுதிப்படுத்தப்பட்ட கறுத்தக் கொழும்பான் ஒட்டுமாங்கன்றுகள் வைக்கப்பட்டிருந்தன.

இரண்டரை வருடத்தில் பலன் தரும் என்று சொன்னார்கள். ஒன்றின் விலை நூற்று ஐம்பது ரூபாய் மட்டுமே. சிறிய மரமாக நின்று காய்க்கும் இயல்பு அதற்குரியது. பெரிய இடம் தேவை என்றும் இல்லை.

ஒரு கறுத்தகொழும்பான் மாம்பழம் ஏழுபத்தைந்து ரூபாய்க்கு விற்பனையாகும் போது நூற்று ஐம்பது ரூபாய் மாங்கன்றை விடுத்து ஒற்றைப்பூவுடன் நிற்கும் மிகச்சிறிய பூஞ்செடியை நானூறு ரூபாய்க்கு வேண்டுவதன் பொருள் என்ன? எதுவுமே புரியவில்லை.

இது சிறுகுறிஞ்சா; சலரோக நோயாளிகளுக்கு சிறந்தமூலிகை. அதுபசளி; அருமையானகீரைவகை. இப்படியான இடங்களைப்பார்த்து ரசிப்பவர்களுக்குப் பஞ்சம்இருந்ததைபார்த்தபோதுநம்நெஞ்சம்பதைத்தது.

கிருமி நாசினிகளின் அதீத பாவனை-அதனால் புற்றுநோயின் அதிகரித்த தாக்கம் என்ற கொடுமையிலிருந்துவிடுபட, எங்கள்வீட்டுத்தோட்டத்தில்விளைந்த மரக்கறி, இலைவகை, பழவகை என்று இன்புற்று உண்டு நெடுநாள் மகிழ்ந்திருப்போம் என்றால்,

நாங்களோ றோசாச் செடிக்கு மருந்துக்குளிசை போட்டு மூன்று நேரம் ஓமவாட்டர் பருக்கி எல்லாவற்றையும் இழக்கிறோம்.

கத்தரி காய்த்தால், தோடை பழுத்தால், எலுமிச்சை பூத்தால் இதைவிட அழகு ஏதுமில்லை என்பதை உணர்வது என்னாளோ?

# வட்டுக்கோட்டையில் ஏ.ரி.எம். இயந்திரம்

(வட்டுக்கோட்டை)

கொமர்ஷல் வங்கியின் இரண்டு தன்னியக்க ரெலர் இயந்திரங்கள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வளாகத்தில் திறந்து வைக்கப்படுகின்றன.

இவ் வலையமைப்பு நாளை 10 ஆம் திகதி சனிக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி முதல்வர் நோயல் விமலேந்திரனால் பிற்பகல் 4.30 மணியளவில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது.

வாடிக்கையாளர்களின் நன்மை கருதி திறந்துவைக்கப்படவுள்ள தன்னியக்க ரெலர் இயந்திரங்கள் மூலம் 24 மணி நேரமும் பணத்தினை பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் இவை கொமர்ஷல் வங்கியின் 437 மற்றும் 438ஆவது தன்னியக்க ரெலர் இயந்திரங்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச)

# மீள் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் வெளிவந்துள்ளன

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவக கல்விடிப்ளோமா பகுதி-I இற்கான மீள் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் வெளிவந்துள்ளன என தேசிய கல்வி நிறுவக யாழ்.பிராந்திய இணைப்பாளர் திருமதி த.வில்வநாதன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## நவ விரதக் கோயில்கள்

ஹைதராபாத்திலிருந்து 160 கி.மீ.தூரத்திலுள்ள ஆலாம்பூர் என்னும் இடத்தில் பரசுராமர் அமைத்த ஒன்பது கோயில்கள் உள்ளன. இவற்றை 'விரதக் கோயில்கள்' என்கிறன்றனர். துங்கபத்ரா நதிக்கரையில் மகப்பூர் மாவட் டத்தில் இவை அமைந்துள்ளன.

அவை,

1.அரை கருட விரதக்கோயில்
2.தாரக விரதக்கோயில்
3.அர்த்த விரதக்கோயில்
4.ஸ்வர்க்க விரதக்கோயில்
5.குமார விரதக்கோயில்
6.விஸ்வ விரதக்கோயில்
7.வீர விரதக்கோயில்
8.பால் விரதக்கோயில்
9.பத்ம விரதக்கோயில்.

இக் கோயில்களில் கடந்த பதினான்கு நூற்றாண்டுகளாக அணையா விளக்குகள் எரிந்து கொண்டிருக்கின்றன.

# தரப்படுத்தல் பரீட்சை

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தின் ஆங்கிலச்சான்றிதழ் கற்கை நெறிக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான தரப்படுத்தல் பரீட்சை நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள இலங்கைத் திறந்த பல்கலைக் கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் இடம்பெறும்.

இக் கற்கை நெறிக்கு விண்ணப்பித்த அனைத்து விண்ணப்பதாரிகளையும் தவறாது இப்பரீட்சைக்கு சமுகமளிக்கும்படி யாழ்.பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

அத்துடன் இப் பரீட்சை 16.07. 2011 அன்று நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# வெள்ளி நற்சிந்தனை

36

## செவ்வியல் தமிழில் சீர்மியம்

மனித வாழ்க்கையின் முடிவு என்ன? இக்கேள்விக்கு விடை காண்பது கடினம் என்பர். உலகியல் நிலையில் மரணம் தான் மனித வாழ்க்கையின் முடிவெனக் கொள்ளப்படுகிறது. ஆனால், இறையியல் நிலையில் மனிதன் சென்றடையும் பொன்னகர் பற்றிய விளக்கம் கூறப்பட்டுள்ளது. மனிதன் சென்றடைய வேண்டிய வீட்டுநெறி பற்றி இறையருளாளர் பலர் பாடியுள்ளனர்.

சென்றடைவதற்குரிய நெறியையுடையதும் அடைந்தோர் மீண்டு வருவதற்கு நெறியில்லாததுமாகிய பொன்னகர் புகப்போதற்குஅகப்பற்றும் புறப்பற்றும் நீங்க வேண்டும். இறைவனுடைய திருவடிகளை அன்பினால் நினைந்து நெஞ்சம் நெகிழ வேண்டும். நித்தலும் அமுதும் தேனும் பாலும் கருப்புக் கட்டியும் போலும் இனிய பேரின்பச் சுவை பொருத்திய அவ்வீட்டின்பத்தைப் பெறுவதே மனித வாழக்கையின் முடிவாகும் என மணிவாசகர் கூறுகிறார்.

வீட்டுநெறியை அவர் விளக்கும்போது 'புகுவதாவதும் போதரவில்லதுமாகிய பொன்னகரத்திற்குப் போகும் வழியெனக் குறிப்பிடுகிறார். மீண்டு வாரா வழியருள்பவன் எனப் போற்றிக் கீர்த்தித் திருவகல் பாடிய மணிவாசகர் நாம் போக வேண்டிய இடம் அதுவேயென உணர்த்துகிறார். மனிதப் பிறவியில் இப் பொன்னகருக்கும் போகும் முயற்சியை மேற்கொள்ள முடியும். எமது நாவலர் பெருமானும் இதனையே இந்தச் சரீரம் எமக்குக் கிடைத்தது இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறுவதற்காகவே என்று கூறினார்.

ஆண்டவன் கழல்களையே எப்போதும் நினைந்து வழிபடும் போது புறப்பற்றுகள் அகன்றுவிடும். அதனால் மணிவாசகர் சிவபுராணத்திலும் இறைவனுடைய தாள், அடி, கழல் என்பவற்றையே வணங்கிப் பாடியுள்ளார். ஆனால், இந்த வழிபாட்டை இடையே விட்டு விட்டதால்தான் வீட்டுநெறியை அடைய முடியாத நிலைக்கு ஆளாகி விட்டதாக வருந்திப் பாடுகிறார். மிகச் சுவையானவற்றையெல்லாம் எடுத்துக் காட்டிப் பேரின்பச் சுவையை விளக்கியுள்ளார். அமுது, தேன், பால், கருப்புக் கட்டி என்பன உலகியல் வாழ்க்கையில் நாம் நாவால் சுவைத்து மிக இனிமையான பொருட்களென உள்ளத்தில் பதித்து வைத்திருக்கும் பொருட் களாகும். எனவே, நாமறிந்த சுவையுணர்வு மூலமாக வீட்டுலக இன்பத்தை யும் விளக்கியுள்ளார். இறைவனே அவரை வலிய வந்து ஆட்கொண் டமையால் அவருக்கு வீட்டுநெறி பற்றிய உணர்வு ஏற் பட்டது. உலகியலில் நின்றபோது இறையியல் பற்றி அறிவு அவருக்கு ஊட்டப்பட்டது. இதனால் சிவனைப் பற்றி நினைக்கும் போதெல் லாம் இனிய பொருட்களை நினைவு படுத்தும் இயல்புடையராயுள்ளார். திருச் சதகம் என்னும் பகுதியில் தேனை, ஆநெயை, கரும்பின்தேறலை, பாலை, கன்னலின் தெளிவையெனப் பலவாறு பாடியுள்ளார். இனிமை உணர்வு இறைவனருளால் பெறப்படுவது. இறைவனை நினைப்பது இனிமை தரும். ஆனால், அந்த நினைப்பை மறந்து விட்டால் வினையை அனுபவிக்க நேரிடும் என்று கூறுகிறார்.

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

"புகுவதாவதும் போதரவில் லதும்
பொன்னகர் புகப்போதற்
குகுவ தாவதும் எந்தையெம்
பிரானென்னையாண் டவன்கழற் கன்பு
நெகுவ தாவதும் நித்தலு[illegible]
தொடு தேனொ[illegible] பால் கட்டி
மிகுவ தாவதும் இன்றெ[illegible]
மற்றிதற் கென்செய்வேன் வி[illegible]
யேனே"

# யாழ்ப்பாண மாவட்ட எம்.பி.க்கள் குறைப்பு தொடர்பான பிரேரணை மாநகர சபையில் ஏகமனதாக நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையினை தேர்தல் ஆணையாளர் குறைத்ததைக் கண்டித்து யாழ். மாநகரசபையில் கவனயீர்ப்பு பிரேரணையை ஆளும் கட்சி உறுப்பினர் எஸ்.விஜயகாந் சமர்ப்பித்திருந்தார். இப்பிரேரணை சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

யாழ். மாநகர சபையின் இவ்வருடத்திற்கான 8 ஆவது மாதாந்தப் பொதுக்கூட்டம் நேற்று யாழ். மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்படி பிரேரணையை சபையில் சமர்ப்பித்தார். அந்தப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்கள் பின்வருமாறு அமைந்திருந்தன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய நிர்வாக மாவட்டங்கள் அடங்கிய யாழ் . தேர்தல் மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைக்கப்படவுள்ளது என்று தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளது தொடர்பாக எமது மக்களின் பிரதிபலிப்பை இந்த சபையின் மேலான கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

கடந்த மூன்று தசாப்தங்களாக யுத்தத்தின் கோரப் பிடியில் சிக்கியிருந்த எம் மக்கள் அமைதியையும் சமாதானத்தையும் தற்போது அனுபவிக்க தொடங்கியிருக்கிறார்கள்.

ஜனநாயகத்தின் முக்கிய அம்சமான தேர்தல் முறைமையை கடந்த பல வருடங்களாக எதிர்த்தும் புறக்கணித்தும் வந்திருந்த எமது மக்கள் தற்போது அவற்றில் ஈடுபாடுகாட்டி வருகின்றார்கள்.

இது இந்த அரசு மீது எமது மக்கள் வைத்துள்ள எதிர்பார்ப்புடன் கூடிய நம்பிக்கையின் வெளிப்பாடாகும்.

இதேவேளை, யாழ். தேர்தல் மாவட்டத்துக்கான நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 9 இல் இருந்து 6 ஆக குறைக்கப்படுவதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

கடந்த பத்துவருடங்களுக்கு முன்னர் 11 ஆக இருந்த யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை படிப்படியாக குறைக்கப்பட்டு இன்று 6 என்ற நிலைக்கு வந்துள்ளது. விகிதாசார அடிப்படையிலான தெரிவு முறை என்ற அடிப்படையில் இந்த நடவடிக்கை சட்டப்படியானதாக இருக்கின்ற போதிலும் தமிழ் மக்களின் மத்தியில் இதனால் பெரும் அதிருப்தி உருவாகியுள்ளதை தங்களுக்குச் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

இந்த நடவடிக்கையானது ஜனநாயகம் மீது எமது மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையை வலுவிழக்கச் செய்யும் ஆபத்தையும் கொண்டுள்ளது.

யாழ். மாவட்ட வாக்காளர் இடாப்பை திருத்துகின்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைக்கின்ற முடிவுகளை மேற்கொள்கின்ற போது தேர்தல் ஆணையாளர் பின்வரும் விடயங்களைக் கவனத்தில் எடுத்திருக்க வேண்டும்.

நீண்ட கால யுத்தத்தின் காரணமாக யாழ். தேர்தல் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் வெளியூர்களில் இடம்பெயர்ந்து அத்துடன் இந்தியா மற்றும் பிற நாடுகளில் அகதிகளாகவும் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்கள் அனைவரும் விரைவில் தங்களது பிரதேசங்களுக்கு திரும்ப விரும்புகின்றனர். ஆனால், பல்வேறு காரணங்களினால் இந்த மக்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகள் இன்னும் பூர்த்தியடையாமல் உள்ளன.

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தை சேர்ந்த குடும்பங்களின் உறுப்பினர்கள் கல்வி, தொழில் போன்ற காரணங்களுக்காக தற்காலிகமாக வெளியூரிலும் மற்றும் வெளிநாடுகளிலும் தங்கியுள்ளனர். இவர்களுடைய விபரங்கள் திருத்தப்பட்ட வாக்காளர் இடாப்பில் உள்ளடக்கப்படவில்லை.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட கடந்த ஆண்டின் வாக்காளர் இடாப்பு உண்மையில் முழுமையானதல்ல. குறித்த வாக்காளர் இடாப்பில் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் இருந்து ஏராளமான குடும்பங்களின் விபரங்கள் பதியப்படவில்லை என்ற தகவல்கள் இப்போது வெளிவந்து கொண்டிருக்கின்றது.

வாக்காளர் இடாப்பு திருத்தம் தொடர்பாக பொதுமக்களுக்கு போதிய தகவலோ, அறிவூட்டலோ, அவகாசமோ வழங்கப்படவில்லை என்றே தெரிகின்றது.

யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களோடு சகோதாரர்களாக வாழ்ந்து வந்த இஸ்லாமிய சகோதரர்கள் 1990 ஆம் ஆண்டு இந்த மண்ணை விட்டு வெளியேற்றப்பட்டதை தாங்கள் அறிவீர்கள்.

இதில் 90 வீதமான மக்கள் புத்தளம், கொழும்பு, மன்னார் என நாட்டின் வெளி மாவட்டங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களையும் புதிய வாக்காளர்களையும் இணைத்து மதிப்பிட்டால் சுமார் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்கள் தேர்தல் ஆணையகத்தின் பட்டியலில் இணைத்துக் கொள்ளப்படவில்லை. ஆகவே, அவர்களும் சொந்த வாழ்விடங்களுக்கு திரும்பினால் யாழ்ப்பாணத்தின் வாக்காளர் எண்ணிக்கை அதிகரிக்கும்.

மேற்படி காரணங்களைக் கருத்தில் கொண்டு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைப்பது தொடர்பான தேர்தல் ஆணையாளரின் முடிவை இரத்துச் செய்யுமாறு இந்த சபையின் மூலம் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களுக்கு இந்தப் பிரேரணையை சமர்ப்பிக்க வேண்டுகின்றேன்.

எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறைப்பு தொடர்பான நடவடிக்கைகள் அவசர அவசரமாக மேற்கொள்ளப்படாது மீள் குடியமர்வு, புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு போன்ற பணிகளும் அரசியல் தீர்[illegible]ளும் முன்வைக்கப்பட்டதன் பின்னர் இடம் பெறுவதே மிகப்பொருத்தமாக அமையும் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன் என அவர் தனது பிரேரணையை முன்வைத்தார்.

இந்தப் பிரேரணையை தாம் ஏற்றுக் கொள்வதாக எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஏனைய ஆளும்கட்சி உறுப்பினர்களும் கூறியதையடுத்து பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (ஶ்ரீ-6)

## 14 வயது சிறுமியை கர்ப்பமாக்கிய 64 வயது நபருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனைப் பகுதியில் 14 வயதுடைய சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தி கர்ப்பமாக்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 64 வயதுடைய சந்தேக நபரை எதிர்வரும் 22 ஆம் திகதி விரை விளக்கமறியலில் வைக்குமாறு வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்தது.

குறித்த சிறுமி வயிற்று வலி காரணமாக தனது நண்பியுடன் வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெறச் சென்றபோது அவர் 5 மாத கர்ப்பிணியாக உள்ளார் என்பது தெரியவந் துள்ளது. இது தொடர்பில் கிடைக்கப் பெற்ற முறைப்பாடு குறித்து விசாரணை நடத்திய பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடையதான சந்தேக நபரை நேற்றுமுன்தினம் மாலை கைது செய்தனர்.

இதேவேளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சிறுமி நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு ஏற்ப பொலிஸாரின் உத்தரவிற்கு அமைய மட்டக்களப்பு சினேகதீபம் இல்லத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார் என வாழைச்சேனை தள வைத்திய அதிகாரி எஸ்.தட்சணாமூர்த்தி தெரிவித்தார். (ஶ்ரீ-2)

## செட்டிக்குளம் பலநோக்கு சங்க அரிசிஆலை திறப்பு

(கொழும்பு)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ செட்டிகுளம் பலநோக்கு சங்க அரிசி ஆலையை நேற்று முன்தினம் வைபவ ரீதியாக திறந்து வைத்தார்.

நாற்பது மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட இவ்வரிசி ஆலை திறப்பு விழா நிகழ்வில் அமைச்சர் றிசாட் பதியுதீன், வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி, வவுனியா அரச அதிபர் உ[illegible]ட்ட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். இவ்வரிசி ஆலையை ஆரம்பிக்க யு.எஸ். எயிட் நிறுவனம் 30 மில்லியன் ரூபாயினை நன்கொடையாக வழங்கியிருந்தது.

சகல வசதியும் கொண்டதான இந்த ஆலையில் நாள் ஒன்றுக்கு சுமார் ஆயிரம் கிலோ அரிசியை உற்பத்தி செய்ய முடியும் எனவும் 40 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது எனவும் சங்க பொது முகாமையாளர் எஸ்.சுரேஸ் தெரிவித்தார். (ஶ்ரீ-2)

## மகாத்மாகாந்தியின் பிரதமசீடர் வினோபாஜியின் ஜயந்தி தினம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்க யாழ்.மாவட்ட கிளையின் அனுசரணையுடன் மகாத்மா காந்தியின் பிரதம சீடர் வினோபாஜியின் 117 ஆவது ஜயந்தி தினம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நீர்வேலி போயிட்டி வினோபாஜி சன சமூக நிலையத் தலைவர் இ.முருகையா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் சிறப்புரையினை அகில இலங்கை காந்தி சேவா சங்க பொதுச் செயலாளர் வி.ஜி. தங்கவேல், யாழ்.கிளை தலைவர் கா.கார்த்திகேசு ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

இந்நிகழ்வில் காந்தியம் பத்திரிகை வெளியீடும் இடம்பெறவுள்ளது. இதில் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக மெய்யியல் துறை விரிவுரையாளர் இ.சிவகரன், பதிலுரையை காந்தியம் பத்திரிகை ஆசிரியர் சாந்தன் சத்தியகீர்த்தி ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ஶ்ரீ-12)

## அனுமதிப்பத்திரமின்றி குளிர்பானம் தயாரித்த இருவருக்கு அபராதம்

(கரவெட்டி)

வடமராட்சி பிரதேசத்தில் அனுமதிப் பத்திரமின்றி குளிர்பானம் தயாரித்தமை, வர்த்தக நிலையத்தை சுகாதாரமற்ற முறையில் வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டில் இரு நபர்களுக்கு எதிராக சுகாதார பரிசோதக அதிகாரிகளினால் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஶ்ரீநிதி நந்தசேகரம் குறித்த நபர்கள் இருவரும் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 4ஆயிரம் ரூபா அபராதம் செலுத்த உத்தரவிட்டார். (ஶ்ரீ-12-24)

## வவுனியா நகர சபையின் பௌர்ணமிக் கலைவிழா

(வவுனியா)

வவுனியா நகரசபையின் மாதாந்த பௌர்ணமிக் கலைவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தில் நகர சபை தலைவர் ஐ.கனகையா தலைமையில் நடை பெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், வினோதராதலிங்கம், சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதில் பட்டிமன்றம், கவி அரங்கம், நாட்டிய நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளன. (ஶ்ரீ-3)

## போலித்துப்பாக்கியை காட்டி இராணுவத்தினரை மிரட்டியதாக கைதானோர் பிணையில் விடுதலை


(கரவெட்டி)

வடமராட்சியில் நேற்று முன்தினம் போலித்துப்பாக்கியைக் காட்டி இராணுவத்தினரை மிரட்டியதாக கைது செய்யப்பட்ட 3 இளைஞர்களை 5 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆட்பிணையில் செல்ல பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு சென்று விட்டு திரும்பிய பாடசாலை மாணவன் உ[illegible]ட 3இளைஞர்கள் புறாபொறுக்கியிலுள்ள இராணுவத்தினரை போலித்துப்பாக்கியைக் காட்டி மிரட்டியதாக குற்றம் சாட்டப்பட்டு நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இம் மூவரையும் நேற்றைய தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஶ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர் படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிபதி குறித்த சந்தேக நபர்களை தலா 5 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் செல்ல அனுமதித்ததுடன் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை வழக்கு விசாரணைய் ஒத்திவைக்க உத்தரவிட்டார். (ஶ்ரீ-12-24)

# ஆஸி. வேகப்புயல்களிடம் சரணடைந்தது இலங்கை



(பல்லேகல)

ஹரிஸ், ஹேராப்லாண்ட், வேகத்தில் இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் 174 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் வந்துள்ள அவுஸ்திரேலிய அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் காலியில் நடைபெற்ற முதலாவது டெஸ்டில் அவுஸ்திரேலிய அணி 125 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இந் நிலையில் 2ஆவது டெஸ்ட் நேற்று பல்லேகல சர்வதேச விளையாட்டரங்கில் ஆரம்பமானது. இப் போட்டியில் வெற்றி பெற வேண்டிய கட்டாயத்தில் இலங்கை அணி களமிறங்கியது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித்தலைவர் திலகரட்ண டில்சான் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.

இதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு பரணவிதான-டில்சான் ஜோடி ஆரம்பம் வழங்கியது. இதில் பரணவிதான பூச்சியத்துடனும் அணித்தலைவர் திலகரட்ண டில்சான் 04 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து அதிர்ச்சியளித்தனர்.

தொடர்ந்து களமிறங்கிய மஹேல ஜெயவர்த்தனா 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளிக்க இலங்கை அணி 7.3 ஓவர்களில் 14 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்களை பறிகொடுத்தது.

அடுத்து 4ஆவது விக்கெட்டுக்காக சங்கக்காரவுடன் இணைந்த திலான் சமரவீர நிதானமாக ஆடினார். எனினும் சமரவீர 17 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய பிரசன்ன ஜெயவர்த்தனவும் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சோபிக்கத் தவறினார்.



இந் நிலையில் 6 ஆவது விக்கெட்டுக்காக இணைந்த சங்கக்கார-மத்யூஸ் ஜோடி பொறுப்பான ஆட்டத்தை வழங்கி நம்பிக்கையளித்தனர்.

இந்த ஜோடி 6 ஆவது விக்கெட்டுக்காக 48 ஓட்டங்களைப் பகிர்ந்தபோது குமார் சங்கக்கார 121 பந்துகளில் (7 பவுண்டரிகள் உட்பட) 48 ஓட்டங்களுடன் மக்கல் ஹசியின் பந்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து அஞ்சலோ மத்யூஸ் அரைச்சதம் அடித்து கைகொடுத்தும் இலங்கை அணி முதல் இனிங்ஸில் 64.1 ஓவர்களில் 174 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் அஞ்சலோ மத்யூஸ் 111 பந்துகளில் (6 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் உட்பட) 58 ஓட்டங்களை எடுத்தார். பந்துவீச்சில் ரியான் ஹரிஸ் மூன்று விக்கெட்டுக்களையும் ஹேராப்லாண்ட், ஜோன்சன், லியோன் தலா 2 விக்கெட்டுக்களையும் மக்கல் ஹசி ஒருவிக்கெட்டையும் சாய்த்தனர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு வோட்சன்-ஹக் ஜோடி பொறுப்பான ஆரம்பம் வழங்கினர்.

இந் நிலையில் போதிய வெளிச்சமின்மை காரணமாக நேற்றைய முதல்நாள் ஆட்டம் அரை மணி நேரம் முன்னதாகவே நிறுத்தப்பட்டபோது அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 60 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஷேன்வோட்சன் 36, ஹக்ஸ் 23 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர். இப்போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

## பாகிஸ்தான் அணி சாதித்தது சிம்பாவே போராடித் தோல்வி

(புலவாயோ)

இறுதிப்பந்துவரை போராடி சிம்பாவே அணி 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணியிடம் தோல்வியடைந்தது. சிம்பாவேக்கு சுற்றுப்பயணம் சென்றுள்ள பாகிஸ்தான் அணி ஒரேஒரு டெஸ்ட், 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடுகின்றது.

இதில் ஒரேஒரு டெஸ்ட்போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்ற நிலையில் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது போட்டி நேற்று புலவாயோவில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களையிழந்து 247 ஓட்டங்களை எடுத்தது.

இதில் யூனிஸ்கான் 72 பந்துகளில் (9 பவுண்டரிகள் உட்பட) 78 ஓட்டங்களையும் அணித்தலைவர் மிஸ்பா உல் ஹக் 64 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 54 ஓட்டங்களையும் உமர் அக்மல் 36, அட்னன் அக்மல் 27, ஹபீஸ் 26 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் மோபு, பிரைஸ் தலா 2 விக்கெட்டுக்களையும் உற்சயா, சிகும்புரா தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 248 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணிக்கு சிபன்டாவும், ரெய்லரும் அரைச்சதம் அடித்து கைகொடுத்தனர்.

எனினும் சிம்பாவே அணி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களையிழந்து 242 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 5 ஓட்டங்களால் போராடித் தோல்வியடைந்தது.

இதில் அணித்தலைவர் ரெய்லர் 84 ஓட்டங்களையும், சிபண்டா 73 ஓட்டங்களையும், தைபு 26, சிக்கும்புரா 24 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சீமா மூன்று விக்கெட்டுக்களையும் தான்வீர் அக்மல், ஹபீஸ் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இவ்வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

## தமிழ்க் கட்சிகளை...

தமிழ்த்தரப்புக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று மாலை அலரி மாளிகையில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில் தமிழ்த் தரப்பில் வீ.ஆனந்த சங்கரி, நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிறேமச்சந்திரன், செல்வராஜா, சுமந்திரன், சரவணபவன் மற்றும் தர்மலிங்கம சித்தார்த்தன் ஆகியோரும் அரசாங்கத் தரப்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ, சுசில் பிறேம ஜயந்த, ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க மற்றும் பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்ககோன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

வடக்கிலும் கிழக்கிலும் கிறிஸ் மனிதரால் ஏற்பட்ட பிரச்சினைகள் குறித்தும் தற்போது முழுமையாக வடக்கிலே இடம்பெறுகின்ற கிறீஸ் மனிதன் தொடர்பான பிரச்சினைகள் பற்றியும் தமிழ்த் தரப்பினர் விரிவாக எடுத்துக் கூறினர். இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி தனக்கும் இது பற்றி தெரிந்திருப்பதாகவும் இதற்காகவே தான் அமைச்சர் சுசில் பிறேம்ஜயந்தவை வடக்கிற்கு அனுப்பி வைத்து விசேட கூட்டமொன்றை நடத்தியதாகவும் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து தமிழ்த் தரப்பு, கிறீஸ் மனிதர் விடயமாக ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக தற்போது கைது செய்யப்பட்டிருக்கும் தமிழ்ப் பொதுமக்களை விடுவிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரியபோது, கைது செய்யப்பட்ட தமிழ்ப் பொதுமக்களுக்கு உடனடியாக பிணை வழங்குமாறும் பின்பு ஒரு சமாதான நடவடிக்கை எடுத்து அவர்களுடைய வழக்குகளை முடிந்தளவுக்கு இல்லாமற் செய்வதற்கான முயற்சிகளை எடுக்கும்படியும் பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி உத்தரவிட்டார்.

அத்துடன் இது தொடர்பில் கொழும்பிலிருந்து விசேட குழுவொன்று வடக்கிற்கு அனுப்பி வைக்கப்பட்டு பூரணமாக விசாரணை நடத்தப்படுமென்றும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

ஜனாதிபதியால் வழங்கப்பட்ட உறுதி மொழிகளின் அடிப்படையில் ஜனாதிபதியுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு எதிர்வரும் 10ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடத்துவதாக இருந்த உண்ணாவிரதப் போராட்டத்தை பிற்போடுவது என தமிழ்த் தரப்பால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## விழிப்புக் குழு...

ஏற்பட்டால் அது தொடர்பான அறிக்கையை பிரதேச ரீதியாக அமைக்கப்பட்ட குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

பிரதேச ரீதியாக அமைக்கப்பட்ட குழு அதைப் பரிசீலித்து ஆளுநரிடம் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நாளாந்தம் பத்திரிகைகளில் வெளியாகும் மர்ம மனிதன் தொடர்பான செய்திகளை தொகுத்து ஆளுநரிடம் சமர்ப்பிப்பதற்கு, முன்னாள் யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தம்பிள்ளை தலைமையில் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

அத்தோடு இந்த மர்ம மனிதன் தொடர்பான எந்த முறைப்பாடும் இதுவரை யாழ். மாவட்டத்தில்உள்ள பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யப்படவில்லை என பிரதி பொலிஸ்மா அதிபர் நீல் தலுவத்தை இந்த ஒன்றுகூடலின் போது தெரிவித்தார்.

அவ்வாறு மர்ம மனிதன் எனச் சந்தேகிக்கப்படும் நபர்கள் உங்கள் பிரதேசங்களில் நடமாடினால் யாழ்ப்பாணம் பொலிஸ் 021 222 9753, சுன்னாகம் 0212240323, மானிப்பாய் 0212255160, கொடிகாமம் 0724478938, சாவகச்சேரி 0213210826, கோப்பாய் 0213213306, தீவகம் 0213216934, 077200911, ஊர்காவற்றுறை 0213215390, 0715188168, வட்டுக்கோட்டை 0213213523, நெடுந்தீவு 021 3213337, 0773732345 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ள முடியும் என்றார். (எ-6)

## குற்றவியல் நடை...

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் 2009ஆம் ஆண்டில் இந்தக் குற்றச் செயல் விசாரணைக் கோவையை புதுப்பிக்கதவறிவிட்டது.

எனவே இந்த சட்டம் இப்போது நடைமுறையில் இல்லை. எனவே இந்தசட்டத்தின் கீழ் புதிய விதிகளை கொண்டு வர முடியாது என வாதிட்டார்.

2009ஆம் ஆண்டில் அப்போதைய பிரதி நீதி அமைச்சராக இருந்த வி.புத்திரசிகாமணி புதிய விதிகளை ஒரு வர்த்தமானி அறிவித்தல் மூலம் கொண்டுவந்தார்.

இருந்தும் நாடாளுமன்ற அங்கீகாரம் கோரப்படவில்லை. 2010இல் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. அத்தோடு இந்த சட்டம் இல்லாது போயிற்று என ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

ரணிலின் வாதத்தை விஜயதாச ராஜபக்ஷ, தயாசிறி ஜெயசேகர, சுஜீவ சேரசிங்க, ஜோன் அமரதுங்க ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரித்துப் பேசினர்.

புதிய விதிகளை கொண்டு வருவதற்கு நாடாளுமன்ற அங்கீகாரம் தேவையெனினும் நாடாளுமன்ற அங்கீகாரத்தைப் பெறுவதற்கான காலக்கெடு ஏதும் சட்டத்தில் இல்லையென நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறினார்.

இவரின் வாதத்தை விஜயதாச ராஜபக்ஷ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் எதிர்த்து வாதிட்டனர்.

இரண்டு வருடங்கள் கடந்து சட்டம் காலாவதியாகி விட்டது எனவே நாடாளுமன்ற அங்கீகாரத்துக்காக காலக்கெடு ஏதும் சட்டத்தில் இல்லையென வாதிட முடியாது என சுமந்திரன் கூறினார்.

இக்கட்டத்தில் இது பற்றி தீர்மானிக்க வேண்டியவர் சபைக்கு தலைமை தாங்கும் பிரதி சபாநாயகரே என இரு தரப்பினரும் ஏற்றுக் கொண்டனர்.

பிரதி சபாநாயகர் வீரக்கொடி, ஒரு சட்ட மூலம் சட்டவலுவுள்ளதா இல்லாததா என்ற பிரச்சினையை ஒழுங்குப் பிரச்சினையின் கீழ்கிளப்பமுடியாது எனக் கூறினார்.

மாறிமாறி இடம்பெற்ற வாதப் பிரதிவாதங்களை அடுத்து 30 நிமிடங்கள் சபை நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டன. (ச-5

மஹாராஜா Food நிறுவனத்தின் மற்றும் ஒரு சேவை
G.T.V.யும் Aramex இணைந்து நடத்தும் உள் நாட்டு கடிதங்கள் பொதிகள் விநியோகம் செய்தல் கொழும்பு /யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு ஒப்படைத்த அடுத்த தினமே முகவரியில் ஒப்படைக்கப்படும்.
MAHARAJA FOOD PRODUCT
கொழும்புக்கான கட்டணம் ரூபா 200/= மட்டுமே
aramex delivery unlimited
மேலதிக விபரங்களுக்கு:-
கொழும்பு
# 18/3 Dr.E.A coory Mawatha, Wellawathte.
T.P:-0112360926,0112259849
யாழ்ப்பாணம்
No.225, Kasturiyar Road, Jaffna
T.P.: 021 222 4338
No.272, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 4825

உல்லாசம் உங்கள் கண்முன்னே...
TILKO JAFFNA CITY HOTEL
No.70/6, K.K.S Road, Jaffna.
Tel: 021 2225969
web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com



NIRUTUITION CENTRE
KONDAVIL
A/L 2012 மாணவர்களுக்கான
அரசியல் விஞ்ஞானம்
வினா,விடை மீட்டல் வகுப்புகள்
ஆரம்பம்: 12.09.2011
(3898)

"கல்வி இயலிலே காவியம் படைப்போம்"
A/L 2012 , A/L 2013
கலை, வர்த்தக பிரிவு
ஆரம்பம்: 10-09-2011 சனி 8.00மணி

| | |
|---|---|
| கணக்கீடு : B. பாலகஜன் | பொருளியல் : NB. கஜீதரன் |
| வணிகக்கல்வி : S. யசோ | புள்ளிவிபரவியல் : S. சயந்தன் |
| தமிழ் : A.K. கீர்த்திராஜன் | அளவையியல் : P. கமல் |
| புவியியல் : S.R. பாலா | இந்துநாகரீகம் : T. ஶ்ரீஸ் |
| வரலாறு : R.R. ஆனந்தன் | அரசியல் : A.K. றொபின்சன் |
| நாட. ஆரங்கியல்: S.R.ரமேஸ் | விவசாயம் : S. கிரி |

முதற்தர மாணவர்களை உருவாக்கும் ஒரே ஒரு கல்வி நிறுவனம்...
NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

A/L பொருளியல் நூல்
பொதுவிலைமட்டம்
விலைச்சுட்டெண்
பணவீக்கம்
ஆசிரியர்: வே.கருணாகரன்
(6096)
பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை

## ஏழாலை,...

சிலரின் நடமாட்டத்தை அவதானித்த இளைஞர் ஒருவர் கூக்குரலிடவே அப் பகுதியைச் சேர்ந்த ஆண்கள் ஒன்று கூடித் துரத்திய போது அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

ஏழாலையில் நேற்றிரவு இச் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் மாத் திரம் 3 தடவைக்கு மேல் மின்சாரம் தடைப்பட்டதாக மக்கள் குற்றம் சாட்டினர்.

மின்சாரம் தடைப்பட்டபோது மக்கள் தமது உயிரைக் கையில் பிடித்தவாறு மர்ம மனிதனின் அச் சத்தில் உறைந்து போயிருந்தனர்.

இப் பகுதியில் நேற்று முன்தினம் மர்ம மனிதனின் தாக்குதலுக்குள்ளான இளைஞனின் வீட்டிலேயே நேற்றிரவும் மர்ம மனிதர்கள் புகுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வடமராட்சி மண்டான் பகுதியில் நேற்றிரவு 8.30 மணியளவில் 3 மர்ம மனிதரின் நடமாட்டம் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

அப் பகுதிக் கோயிலில் கூடி நின்ற இளைஞர்களே இவ் மர்ம மனிதனின் நடமாட்டத்தை அவதானித்ததுடன் துரத்திச் சென்றதும் அவ் மர்ம மனிதர்கள் கடற்கரையோரமாக தப்பிச் சென்றதாகக் கூறப்படுகின்றது.

இச்சம்பவத்தால் அப் பகுதி மக்கள் பீதியில் உறைந்துள்ளனர்.

இதேவேளை மர்ம மனிதர்கள் தொடர்பில் கூட்டங்களும் மாநாடுகளும் தினமும் நடைபெறும் நிலையில் மர்ம மனிதர்களை கட்டுப்படுத்த முடியவில்லை என மக்கள் விசனம் தெரிவித்தனர். (ச-9,24)

## மர்ம மனிதன்...

நாட்டில் அண்மையில் பரவலாகப் பேசப்படும் விடயங்களுள் பிரதானமானது கிறீஸ் பூதம் விவகாரம். மற்றது தரம் குறைந்த பெற்றோல் விவகாரம். உண்மையாகவே இவற்றின் பின்னணியில் சர்வதேச சூழ்ச்சிகள் இருப்பதாகவே நான் நினைக்கின்றேன். ஏனென்றால் பெற்றோல் விநியோகிக்கும் நிறுவனங்கள் நாளாந்தம் கோடிக்கணக்கில் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் நிறுவனங்கள். அவர்கள் சிறிய வியாபாரிகள் போன்று களவு செய்யமாட்டார்கள். அதேபோன்று தவறிழைக்கவும் மாட்டார்கள். ஏனெனில் அவர்களுக்கு வாடிக்கையாளர்களை அதிகரித்துக்கொள்வதே நோக்கம். நன்மதிப்பைப் பெற்றுக் கொள்ள அர்ப்பணிப்புடன் செயற்படுவர். எனவே இந்தப் பக்கத்தில்தான் ஏதாவது தவறு இடம்பெற்றிருக்கும். அடுத்ததாக உள்ள பிரச்சினைதான் தரம் குறைந்த சீமெந்து இறக்குமதி விவகாரம். அதற்கு அடுத்த படியாக அரிசியில் ஆசனிக் திரவம் உள்ளடக்கப்பட்டுள்ளது என்க் கதைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. நாட்டில் அண்மைக்காலமாக மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற் படுத்திய பிரச்சினைதான் இந்த கிறீஸ் பூதம். கிறீஸ் பூதம் திடீரென எங்கிருந்து வந்தது? இவ்வாறான சம்பவங்கள் தொடர்பாக நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டியுள்ளது. அவ்வாறு சிந்தித்துப் பார்த்தால் இவற்றின் பின்னணியில் இலங்கையில் உள்ள சிலரும் சர்வதேச குழுவொன்றும் இணைந்து திட்டமிட்டு எமக்கு எதிராக சூழ்ச்சிகளை மேற்கொள்கின்றன என்றே நான் நினைக்கின்றேன் என்றார். (ச-5)

## பரீட்சை...

பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகளின் 3-ம் கட்டம் தற்போது இடம்பெற்றுவரும் நிலையில் எதிர்வரும் 30-ம் திகதி நிறைவுக்கு வரவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-5)

## சோனியா...

காவிலுள்ள வைத்தியசாலை ஒன்றில் கடந்த ஓகஸ்ட் மாதம் 4-ம் திகதி சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. எந்த நோய் தொடர்பாக இந்த சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது என்பது தொடர்பில் அறிவிக்கப்படவில்லை. (ச-5)

## நாடு முழு...

மேற்கொண்ட போராட்டமே இதற்கு காரணம். அவசரகாலச் சட்டம் அகற்றப்பட்டால் 18-ஆவது அரசியல் சட்டத்தையும் ஒழிக்க வேண்டும். இன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியிடம் ஜனநாயகம், ஒழுக்கக் கோட்பாடுகள் அறவே கிடையாது.

ஜனநாயகத்தைப் பாதுகாப்போர் ஐக்கிய தேசியக் கட்சியினரே. அதனால் தான் மக்கள் இன்று ஐ. தே.கவை சூழ்ந்து நிற்கின்றனர்.

எவராலும் எப்போதும் பொய்யான நாடகங்களை நடிக்க முடியாது. ஏமாற்றவும் முடியாது என்றார்.மாத்தறை மாநகர சபை முன்னாள் மேயர் உப்புல் நிசாந்த தமது உரையில், நான் மாத்தறை மேயராக பணியாற்றியபோது அகில இலங்கையில் மாத்தறை மாநகரசபை சிறந்தது என பரிசும் வழங்கப்பட்டது.அதற்குக் காரணம் சிறந்த நிர்வாகம், ஊழலற்ற பணிகளே.ஆனால் என் மீது வீணான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி பழிவாங்கியுள்ளனர் என்றார். (ச-5)


உயர்தர பரீட்சையின் பின் உங்கள் கணனி அறிவை மேம்படுத்த
உங்களுக்காக நாம் தருகின்றோம் உயர்தரமான கணனிக் கல்வியை
- Diploma in Ms Office (06 Months)
- Diploma in Computer Hardware (06 Months)
- Diploma in Visual Basic Programming (03 Months)
- Certificate in Photoshop (03 Months)
- Certificate in Pagemaker (03 Months)
- Certificate in Video Editing (03 Months)
- Certificate in Internet & email
- Higher Diploma in IT( 1 Year)

இலவசம் Microsoft நிறுவனத்தின் பாடநெறிக்கான கட்டணம்

எதற்காக SKYLINE ITCயை தெரிவு செய்ய வேண்டும்.
- ஒரு பாடநெறிக் கட்டணத்துடன் பல பாடநெறிகளை இலவசமாகக் கற்கலாம்.
- வறுமைக்கோட்டில் உள்ள மாணவருக்கு இலவசம்.
- மூன்றாம் நிலை தொழிற்கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
- Education Visionனினால் வட பகுதிக்காக தெரிவு செய்யப்பட்ட நிறுவனம்.
- கணனிகற்கையைப்பயிலும்மாணவருக்கு இலவசமாக ஆங்கிலசிங்களவகுப்புகள்.
- சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்.

Contact US: web-www.skylineitc.com email-skyline.itc@gmail.com
SKYLINE ITC
Your search ends here.
(C-4361)
Head Office: Ponnalai Road, Sithankerney.
Branch: Thellipalai Road, Vaddukoddai.
புதிய பிரிவுகள் ஆரம்பம்: 11.09.2011 ஞாயிற்றுக்கிழமை

வடமராட்சியில்....
A/L எடுத்தவர்களுக்கான புதிய பிரிவுகள்
ஆரம்பம் - 12.09.2011 (திங்கள்)
பி.ப. 3 மணி
SPOKEN ENGLISH
WITH
GRAMMAR
By
MR. B. JYOTHY
(C-4364)



கணித, விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கு தனிப்பிரிவு
கலை வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கு எனத் தனிப்பிரிவு
அனுமதிகளை அலுவலகத்தில் முற்கூட்டியே பெறவும்
OXFORD ENGLISH ACADEMY
P.K. Lane - Point Pedro

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.09.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.